பல்கலைக்கழக மானியக்குழு (UGC) அங்கீகாரம் பெற்ற மாதஇதழ்
New Centurian Ungal Noolagam ISSN 2394-7535-135

நியூ செஞ்சுரியின்

உங்கள் நூலகம்

மாத இதழ்

New Centurian Ungal Noolagam (Tamil English - Bilingual Monthly)

மலர் : 19 Vol : 19	இதழ் : 05 Issue : 05	www.ncbhpublisher.in	ஆகஸ்ட் 2026 August 2026	விலை Price	₹ 45/-	ஆண்டு சந்தா Annual Subscription	₹ 540/-



மார்க்சிய அறிஞர் ந. முத்துமோகனும் அவர்தம் தத்துவ விசாரணைகளும்

– எம்.பி. டெரன்ஸ் சாமுவேல்

நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய வெளியீடுகள்

₹ 170/-

₹ 125/-

₹ 136/-

₹ 115/-

₹ 150/-

₹ 115/-

₹ 175/-

₹ 95/-

₹ 150/-

₹ 175/-

₹ 110/-

₹ 115/-

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.
☎ 044 - 26251968, 26258410 | www.ncbhpublisher.in | info@ncbh.in

நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் அனைத்து கிளைகளிலும் மற்றும் புத்தகக் கண்காட்சி அரங்குகளிலும் கிடைக்கும்.

கற்றது கைம்மண்ணளவு
கல்லாதது உலகளவு

நியூ செஞ்சுரியின்

உங்கள் நூலகம்

மாத இதழ்
திருவள்ளுவராண்டு 2057
மலர் - 19 இதழ் - 05 - ஆகஸ்ட் 2026

ஆசிரியர்
த. ஸ்டாலின் குணசேகரன்

ஆசிரியர் குழு
க. சந்தானம்
பேராசிரியர் ஆ. சிவசுப்பிரமணியன்
முனைவர் ச. சுபாஷ் சந்திரபோஸ்
முனைவர் ந. முத்துமோகன்
முனைவர் மு. இராமசுவாமி
முனைவர் நா. இராமச்சந்திரன்
முனைவர் பா. ஆனந்தகுமார்
முனைவர் ஞா. ஸ்டீபன்
ப. கு. ராஜன்
முனைவர் இரா. அறவேந்தன்
முனைவர் இரா. காமராசு
முனைவர் உ. அலிபாவா

இதழ் வடிவமைப்பு
கா. குணசேகரன்

நியூ செஞ்சுரி வாசகர் சங்கம்
பதிவு எண் : 21/2005/ 11/2/2005
16 (142). ஜானி ஜான்கான் ரோடு.
இராயப்பேட்டை. சென்னை - 600 014
ungalnoolagam@gmail. com
இணைய தள முகவரி: www. ncbhpublisher. in

தனி இதழ் ₹ 45. 00. ஆண்டு சந்தா ₹ 540. 00
மாணவர்களுக்கு ₹ 500. 00
ஆயுள் சந்தா ₹ 5400. 00
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 4050. 00
சந்தா தொகையை
New Century Reader's Sangam
Central Bank of India
Ambattur Branch. Chennai - 600 050
A/c. No. 1035249018
IFSC Code : CBIN0282161
என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.

உங்கள் நூலகம் பற்றிய விமர்சனக் கடிதங்கள்,
உங்கள் நூலகத்திற்கான படைப்புகள், கட்டுரைகள்,
நூல் விமர்சனங்கள், மதிப்புரைக்கான நூல்கள்
ஆகியவற்றைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புமாறு வேண்டுகிறோம்.

ஆசிரியர்
உங்கள் நூலகம்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், (பி) லிட்.,
41-பி. சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்.
அம்பத்தூர். சென்னை - 600 050.
தொலைபேசி எண் : 044-26251968, 26258410

1. சேர்ந்து சிந்திக்கும் நன்னாள்!
ஆசிரியர் குழு 04

2. படித்துப் பாருங்களேன்...
ப.கு.ராஜன் 06

3. அண்ணல் அம்பேத்கரின் வகிபாகம்
வீ.அரசு 15

4. சிலுவையில் இருந்து இறக்குகிறார் இவான் துர்கனேவ்
பாரதிபாலன் 27

5. எர்னஸ்ட் ஹெமிங்வே
அஜயன் பாலா 36

6. செவ்வியல் இலக்கிய மீள்வாசிப்பின் இன்றைய தாக்கம்
அன்பரசி 38

7. ஆவணப் பதிப்பின் முன்னோடி
ர.பூங்குன்றன் 43

8. கரிசலின் வெக்கையை எழுத்துகளின் வேட்கையாகப் புனைந்தவர் பூமணி
முனைவர் நா.சுலோசனா 44

9. கடுகும், கற்பூரமும் கமழும் கதைவனம்
ஆத்மார்த்தி 47

10. நாளைய தலைவர்கள்!
நவமணி 49

11. குழந்தைப் பருவத்தை எவன் திருப்பிக் கொடுப்பான்?
சா. ஜெயராஜ் 52

12. கல்லூரி வளாக நாவல்களின் மத்தியில்
சுப்ரபாரதிமணியன் 56

13. மார்க்சிய அறிஞர் ந. முத்துமோகனும் அவர்தம் தத்துவ விசாரணைகளும்
- எம்.பி. டெரன்ஸ் சாமுவேல் 57

14. நவீன காலம் பற்றிய தொன்மக்கதைகள்
முனைவர் த.பிரகலாதன் 66

15. புரட்சியாளர் லெனின் எழுதிய தேர்வு நூல்களை ஏன் வாசிக்க வேண்டும்?
இந்திரா 70

16. Beyond the Rubble: Memory, Healing, and the Psychological Landscape of Survival in Escape from Alepp
N.NAVEENA & Dr.S.SAIRA BANU 72

சேர்ந்து சிந்திக்கும் நன்னாள்!

தமிழகப் பதிப்புலகத்திற்கென்று தனி வரலாறு உள்ளது. விடுதலைப் போராட்டக் காலகட்டத்தில் எழுச்சியூட்டும் நூல்கள் ஏராளமாகப் பதிப்பிக்கப்பட்டன. பதிப்பகங்கள் என்று உருவெடுப்பதற்கு முன்பு தேசபக்தர்களாக விளங்கும் சிலர் புத்தகங்களை அச்சிட்டுக் கொண்டுவந்துள்ளனர். உலக அளவில் பல துறைகளில் எழுச்சியையும் புரட்சியையும் ஏற்படுத்திய பல நூல்கள் தமிழில் மொழிபெயர்த்துக் கொண்டு வரப்பட்டதால், தமிழ் மக்களிடையே உலகக் கண்ணோட்டம் வளர்ந்தது; உலக அரசியல் ஞானம் உதித்தது.

1935 வரை ஆங்கிலேய ஆட்சியின் அடக்குமுறை காரணமாக நாம் நினைக்கிற நூல்களை நாமே வெளியிடும் உரிமையற்றவர்களாக இருந்துள்ளோம். நூல்களை வெளியிட்டுக் கொள்ளலாம் என்ற நிலை உருவான பின்னரும் வெளியான பல நூல்கள் ஆங்கிலேய அரசால் தடை செய்யப்பட்டன. அத்தகைய நூல்களை எழுதியவர்கள், மொழிபெயர்த்தவர்கள், பதிப்பித்தவர்கள் கைது செய்யப்பட்டனர். ‘நான் ஏன் நாத்திகன் ஆனேன்?’ என்ற பகத்சிங்கின் நூலை மொழிபெயர்த்ததற்காக ஜீவா ஆறுமாதக் காலச் சிறைத் தண்டனையைப்

பெற்றது ஓர் உதாரணம். அந்நூலைப் பதிப்பித்த பெரியார் குடும்பத்தினர் மீதும் வழக்கு!

இத்தகைய இருண்ட சூழலைத் தாண்டி இந்திய விடுதலைக்குப் பின்னர் பதிப்புலகம் சுதந்திரக் காற்றை சுவாசிக்கத் தொடங்கிய பின்னர் தொடங்கப்பட்ட நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்திற்கு இது எழுபத்தைந்தாம் ஆண்டு.

1951 இல் என்.சி.பி.எச் தொடங்கப்பட்டது. இந்நிறுவனத்தைத் தொடங்க முதன் முதலில் சிந்தித்தவர்கள், விதை போட்டவர்கள், செயல்படுத்தியவர்கள், கருத்தாலும், கரத்தாலும் உழைத்தவர்கள், நேரடி – மறைமுகக் காரணமாக விளங்கியவர்கள், ஊக்கப்படுத்தியவர்கள் அனைவரையும் இந்த எழுபத்தைந்தாம் ஆண்டில் எண்ணிப் பார்த்து நன்றி சொல்ல வேண்டியது நமது கடமையாகும்.

தொடக்கம் எவ்வளவு முக்கியமோ அதே அளவுக்கான முக்கியத்துவம் தொடர்ச்சிக்கும் உண்டு. தொடங்கியவர்களின் உயரிய நோக்கங்களை முழுமையாக உள்வாங்கிக் கொண்டு அவற்றிற்கு ஊறு ஏற்படாமல் பார்த்துக் கொள்வது மட்டுமல்ல- அடுத்தடுத்த தலைமுறைகளின் கடமை; காலமாறுதலைக் கணக்கிலெடுத்துத் தேவைக்கேற்ற மாறுதல்களைச் செய்து அடிப்படை நோக்கங்களிலிருந்து விலகாமலும் அந்தந்தக் காலகட்டச்சவால்களைத்திறமையாகஎதிர்கொண்டும் பதிப்பகத்தை முன்னேற்றப் பாதைக்கு இட்டுச் செல்வது வழிவந்தோர் கடமையாகும்.

கடந்த கால வரலாற்றை நிகழ்காலத்தில் ஊன்றிப் படித்தால்தான் எதிர்கால வரலாற்றைப் படைக்க முடியும். வழிகள் தோறும் ஏற்பட்ட வலிகளை உளமார உணர்ந்தவர்கள் மட்டுமே அடுத்தடுத்து வழிகாட்டத் தகுதி பெற்றவர்கள் ஆகிறார்கள்.

என்.சி.பி.எச்.சின் எழுபத்தைந்தாம் ஆண்டை முன்னிட்டு, பதிப்புலகில் இப்பேரமைப்பின் வரலாற்று வழித்தடங்களை இந்நிறுவனம் தொடர்புள்ள அனைவரும் முழுமையாக உணர்வது முழுமுதல் தேவையாகும். அறிவது, தெரிவது, புரிவது என்பதோடு உணர்வது என்பது நான்காம் நிலை.

விரைவில் என்,சி.பி,எச்.சின் பவளவிழா சென்னையில் மகிழ்ச்சியும் நெகிழ்ச்சியும் கலந்த எழுச்சியுடன் நடைபெறவுள்ளது. அவ்விழா அர்த்த அடர்த்தி மிக்கதாக அமைக்கப்படவுள்ளது.

என்.சி.பி.எச்.சின் முக்கால் நூற்றாண்டு காலப் பதிப்புலகப் பங்களிப்பை ஆய்வு நோக்கிலும், வரலாற்றுப் பார்வையிலும் ஆவணப்படுத்தும் விதத்தில் பவளவிழாச் சிறப்பு மலரொன்று விழா மேடையில் வெளியிடப்படவுள்ளது.

சோவியத் யூனியனில் ஏற்பட்ட அரசியல் பின்னடைவு எத்தனையோ நாடுகளில் எத்தனையோ பின்னடைவுகள் ஏற்படுவதற்குக் காரணமாக அமைந்துவிட்டது.

எண்ணற்ற தரமான தமிழ் நூல்களை மாஸ்கோவில் அரிதின் முயன்று அச்சடித்து மிகவும் மலிவு விலையில் தந்துவந்தனர். அவற்றைச் சிரமேற்கொண்டு தமிழ் மக்களிடையே எடுத்துச் செல்வதை என்.சி.பி.எச். கடமையாகக் கருதிச் செயல்பட்டு வந்தது. அரசியல் நூல்கள் மட்டுமல்ல அறிவியல் நூல்கள், இலக்கிய நூல்கள் சிறார் இலக்கியம், வரலாற்று நூல்கள் என வகைமைகள் பல; தமிழ்மொழியில் மட்டுமல்ல; இந்தியாவின் பிற மொழிகளிலும் மாஸ்கோ பதிப்பகங்கள் நூல்களை வெளியிட்டுத் தந்தன. ஏன்... உலகின் பல மொழிகளுக்கு இச்சேவையை மனங்குளிரச் செய்து வந்தன மாஸ்கோ பதிப்பகங்கள்.

சோவியத் நாட்டில் தமிழ்ப் பதிப்புகள் நின்ற பின்னர் என்.சி.பி.எச்சிற்குப் பின்னடைவு ஏற்படாமல் தடுத்தாற் கொண்டதோடு, அத்தகைய நூல்கள் பலவற்றை நம் மண்ணிலேயே அச்சிட்டு தனது வரலாற்றுக் கடமையை செவ்வனே நிறைவேற்றி, அடுத்தடுத்த கட்டத்திற்கு முன்னோக்கிப் பயணித்தது என்.சி.பி.எச்.

கடந்தகால வரலாற்றைக் கற்பது மட்டுமல்லாமல், நிகழ்கால நிலை நிறுத்தலும், எதிர்கால ஏற்றமிகு வளர்ச்சியும் அதற்காகச் சிந்திப்பதும் செயல்படுதலும் பதிப்பகத்தின் முன்நிற்கும் முக்கியக் கடமையாகும்.

என்.சி.பி.எச். பவளவிழா ஒரு பதிப்பத்தின் நிகழ்ச்சி மட்டுமல்ல, எதிர்காலத் தமிழகத்தை ஏற்றமுறச் செய்ய ஒரு பதிப்பகம் தனது பங்களிப்பைப் பற்றி சமூக நோக்கோடு சேர்ந்து சிந்திக்கும் நன்னாளும் கூட!

– ஆசிரியர் குழு

படித்துப் பாருங்களேன்...



வாராது வந்த மாமணி

தோல்வியில் முடிந்த
ஜெர்மன் புரட்சி 1918-1923
கிரிஸ் ஹார்மன்

ப.கு.ராஜன்

பேராசான்கள் கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையை 1848இல் வெளியிட்டனர். 178 ஆண்டுகள் கடந்து விட்டன. இந்த நீண்ட காலப்பரப்பில், வளர்ச்சியடைந்த முதலாளித்துவமும் முதலாளித்துவ ஜனநாயகமும் கொண்ட நாடொன்றில் நடந்த புரட்சி ஜெர்மனியில் 1918-19இல் நடந்ததுதான். 1918இன் ஜெர்மனி இன்றைய ஜெர்மனியல்ல என்றாலும், உலகின் இரண்டாவது பெரும் தொழிலாற்றல். 300 ஆண்டுகால பிரிட்டன் தொழில் வளர்ச்சியை ஜெர்மனி 50 ஆண்டுகளில் பெற்றுவிட்டது. முதலாளித்துவத்திற்குத் தகவமைய பிரிட்டனுக்கு இருந்த நீண்ட காலஅவகாசம் ஜெர்மனிக்கு இல்லை.

இன்றைய முதலாளித்துவ விரைவான மாற்றத்திலுள்ள நாடுகளின் எதிர்காலம் பற்றி பரிசீலிக்க ஜெர்மன் புரட்சியின் பாடங்கள் முக்கியமானவை. ஜெர்மன் புரட்சியின் தோல்வி ஃபாசிஸத்தின் உருவாக்கத்திற்கும் வழி வகுத்தது. வெற்றிகரமான ரஷ்யப் புரட்சிக்குப் பிந்தைய சோவியத் யூனியனின் வரலாற்றுப் பாதை மீது தாக்கம் செலுத்தியது. லெனினே ‘ஜெர்மன் புரட்சி இல்லை எனில் நாம் தொலைந்தோம்’ என்று 1918 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் கூறியுள்ளார். அத்தகைய ஜெர்மன் புரட்சியைப் பற்றி காத்திரமான நூலேதும் தமிழில் வரவில்லை. பாட்டாளி வர்க்க வரலாற்றில் முக்கியமான அத்தியாயம் வாசிப்பில் இல்லை எனில் நமது உலகப்பார்வை முழுமையாக இருக்காது. இந்தப் போதாமையைப் போக்குவது இந்நூல்.

நூலாசிரியர்

கிரிஸ் ஹார்மன் *(1942-2009)*, பிரிட்டனின் லீட்ஸ் பல்கலைக்கழகம், லண்டன் ஸ்கூல் ஆஃப் எக்கனாமிக்ஸ் ஆகியவற்றில் கல்வி கற்றவர். 'உலக மக்கள் வரலாறு' உள்ளிட்ட பல நூல்களின் ஆசிரியர். அவர் முன்னுரையில் நான் விருப்பு வெறுப்பற்ற நூலாசிரியரல்லன்; புரட்சி வெற்றி பெறவில்லையே என்ற ஆதங்கமும் நடத்த முயன்றவர்கள் மீது அனுதாபமும் கொண்டவன்தான், என வாக்குமூலம் அளிக்கின்றார். நாம் அதனை மனதில் கொள்ள வேண்டும். அதனை மட்டுமல்ல; அவர், பிரிட்டனின் முன்னணி டிராட்ஸ்கியக் கட்சியான சோசலிஸ தொழிலாளர் கட்சியின் முக்கியமான கோட்பாட்டாளர் என்பதையும்தான். எனவே அவரது கருத்துக்களை ஒரு சிட்டிகை உப்புடன் பரிசீலிப்பது நல்லது. ஆனால் அவரைக் காட்டிலும் நடுநிலைமையாகவும், தெளிவாகவும் ஜெர்மன் புரட்சியைக் குறித்து ஆங்கிலத்தில் எழுதியவர்கள் யாரும் இருப்பதாக தெரியவில்லை.

ஜெர்மனி: நாடு, அரசு, ஜெர்மன் சமூக ஜனநாயகக் கட்சி

எந்தவொரு நாடுமே வரலாற்றுரீதியாக தனித்துவமான சிறப்புத் தன்மைகளுடன்தான் இருக்கும். நூலின் தொடக்கத்திலேயே ஜெர்மனியின் தனித்துவத்தை கிரிஸ் ஹார்மன் தெளிவாக்குகின்றார். முடியரசு என்றாலும் 1871 முதல் பாராளுமன்றமும் ஏராளமான கட்சிளும் இருந்தன. விதவிதமான வலதுசாரிக் கட்சிகள், தேசிய இனவெறிக் கட்சிகள் இவைதவிர இடதுசாரிக் கட்சிகளும் மார்க்சியம் பேசக்கூடிய கட்சியும் இருந்தன. தேர்தல் முறை விகிதாச்சாரப் பிரதிநிதித்துவம் கொண்டது. அதனால் எப்போதும் ஒற்றைக் கட்சியினுடைய ஆட்சி அமைவது கிடையாது.

ஜெர்மன் சமூக ஜனநாயக கட்சி (SPD -எஸ்பிடி) உலகின் பழமையான மார்க்சியக் கட்சிகளில் ஒன்று. இது இரண்டு பாட்டாளி மக்கள் கட்சிகளின் இணைப்பால் உருவானது. 1875ஆம் ஆண்டு ஜெர்மனியின் கோத்தா நகரில் இரண்டு கட்சிகளும் இனணந்தன. ஒன்றுபட்ட கட்சியினுடைய கட்சி திட்டம்தான் 'கோத்தா வேலைத் திட்டம்'. இது குறித்த மார்க்ஸின் விமர்சனக் குறிப்புகள்தான் 'கோத்தா வேலைத் திட்டம் குறித்த விமர்சனங்கள்' என்ற நூல். திட்டம், பல சமரசங்களைச் செய்து இறுதி செய்யப்பட்டதால் மார்க்ஸ் பல பகுதிகளைக் கடுமையாக விமர்சிப்பார். ஆனாலும், ஜெர்மன் பாட்டாளி வர்க்கத்தினரின் ஒற்றுமைக்காக விமர்சனங்களோடு திட்டத்தை ஏற்றுக் கொள்வதாகவும் அறிவிப்பார். மார்க்ஸின் அணுகுமுறையும் விமர்சனங்களும் மனதில் கொள்ள வேண்டியவை.

எஸ்பிடி, நடைமுறையில் சீர்திருத்தங்களுக்காகப் போராடக் கூடியதாகவும் பாராளுமன்றத்தில் பாட்டாளிவர்க்க நலனைப் சார்புநிலை கொள்வது செய்வதாகவும் இருந்தது. 'புரட்சி' நீண்டகாலக் கனவுதான். புறச்சூழலும் அதற்கேற்ப இருந்ததை ஹார்மன் விளக்குகின்றார். 1860-லிருந்து பெருவளர்ச்சி கண்ட ஜெர்மன் முதலாளித்துவம் தன்நலனுக்காக பாட்டாளி வர்க்கத்தோடு சில சமரசங்களைத் தொடர்ந்து செய்வதாக இருந்தது. ஆட்சியில் பழமைவாதக் கட்சிகள்தான் இருந்தன. எஸ்பிடி கணிசமான வாக்குகளையும் பாராளுமன்ற உறுப்பினர்களையும் பெற்று செல்வாக்கோடு இருந்தது. ஆனாலும் முதலாளித்துவ, முடியரசு ஆதரவுக் கட்சிகள் எந்தக் கூட்டணி அரசாங்கத்திலும் எஸ்பிடியை அனுமதிக்கவில்லை.

எஸ்பிடி, அரசாங்கத்தைத் தூக்கி எறியும் வல்லமை கொண்டிருக்கவில்லை. ஆனாலும், அரசுக்குள் அரசாக இயங்கி வந்தது. 10 லட்சம் உறுப்பினர்கள், 45 லட்சம் வாக்குகள், தினசரி 90 கட்சி இதழ்கள் என்பதாக இருந்தது. தொழிற்சங்கங்கள், கலை இலக்கியச் சங்கங்கள், வெகுமக்கள் அமைப்புகள் என்று கிளை பரப்பி இலை பரப்பி, மிகுந்த மக்கள் செல்வாக்கோடு இருந்துள்ளது. சில



ஆயிரம் முழுநேர ஊழியர்களோடு தேர்தலுக்குத் தேர்தல் தன்னுடைய செல்வாக்கை வளர்த்துக் கொள்ளக் கூடியதாகவும் இருந்ததையெல்லாம் ஹார்மன் நாம் வியப்பால் வாய் பிளக்கும் அளவிற்கு விவரிக்கின்றார்.

புரட்சிகர இடதுசாரிகள்

முதல் உலகப்போர் இந்த நிலைமைகளை மாற்றியது. 1914 - ஆகஸ்ட்டில் போருக்கான நிதி ஒதுக்கீடு குறித்த விவாதம் எஸ்பிடி கட்சிக்குள்ளும் பிறகு பாராளுமன்றத்திலும் நடந்தது. கட்சியின் 104 பாராளுமன்ற உறுப்பினர்களில் 91 பேர் போருக்கான நிதிஒதுக்கீட்டை ஆதரித்தே வாக்களித்தனர். கட்சியின் பாராளுமன்றத் தலைவரான ஹூகோ ஹாஸே உட்பட 13 பேர்தான் எதிர்த்து வாக்களித்தனர். .ஆனால் இதற்கான வாக்கெடுப்பு பாராளுமன்றத்தில் நடைபெற்ற பொழுது கட்சியின் உறுப்பினர்களில் கார்ல் லீப்நெக்ட் ஒருவர்தான் எதிர்த்து வாக்களித்தார். லெனினாலேயே மிகவும் மதிக்கப்பட்ட கார்ல் காவுட்ஸ்கியே போர் ஆதரவு நிலைபாட்டை எடுத்தார். அதனால்தான் லெனினால் ‘ஓடுகாலி காவுட்ஸ்கி’ என்று அழைக்கப்பட்டு, அந்தத் திருநாமத்தை வாழ்நாளெல்லாம் தூக்கிச் சுமந்து, இன்றைக்கும் பாவம்… அப்படியே அறியப்படுகின்றார்.

கால் லீப்நெக்ட், ரோசா லக்ஸம்பர்க் போன்றோர்கள்தான் போர் எதிர்ப்பு நிலைப்பாட்டில் இருந்தனர். 1914 டிசம்பரில் கார்ல் லீப்நெக்ட் பாராளுமன்றத்தில் எதிர்த்து வாக்களித்து, பிறகு பொதுவெளியிலும் பிரசாரம் செய்தார். அப்போதுதான் போரெதிர்ப்புப் பேச்சு சமூகத்தில் இடம்பெற்றது. அதுவரை போருக்கான வெறிக்கூச்சல்கள்தான் இருந்தன. ரோசாவும் லீப்நெக்ட்டும் சிறைப்படுத்தப்பட்டார்கள். லீப்நெக்ட் 40 வயதைக் கடந்தவரானாலும் கட்டாய ராணுவசேவைக்காக போர்முனைக்கு அனுப்பப்பட்டு அங்கு சிறைப்படுத்தப்பட்டார். ஆனால் கொடுமையான போர் மக்கள் நிலைப்பாட்டை வெகுசீக்கிரத்தில் மாற்றியது. 1915ஆம் ஆண்டில் இருந்தே போரெதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் அணிவகுப்புகளும் நடக்கத் தொடங்கிவிட்டன. 1916 ஜனவரியில் கார்ல் லீப்னெக்ட், ரோசா லக்ஸம்பர்க், மற்றும் சில இடதுசாரிகளால் ஸ்பார்ட்டகஸ் லீக் தொடங்கப்பட்டது.

ரஷ்யப் புரட்சியின் தாக்கம்

மறுபுறத்தில் 1917ஆம் ஆண்டு பிப்ரவரியில் நடைபெற்ற முதலாவது ரஷ்யப் புரட்சியில் ஜார் மன்னர் தூக்கி எறியப்பட்டதும், பின் நவம்பரில் 2ஆவது ரஷ்யப் புரட்சி நடந்து சோவியத் ஆட்சி அமைந்ததும் எல்லா சமன்பாடுகளையும் கலைத்துப் போட்டன. ஜார் மன்னரது காட்டாட்சி அபாயத்திலிருந்து ஜெர்மனி நாட்டை காப்பாற்றுவதற்காகத் தான் யுத்தம் என்ற பிரசாரம் அதற்கான அடிப்படையை இழந்தது. ரஷ்யப் புரட்சியைத் தொடர்ந்து ஜெர்மனியில் நடந்த நிகழ்வுகள் பற்றிய கிரிஸ் ஹார்மனின் விவரணை நம்மை மனக்கண்ணால் கால வெளி தாண்டி அங்கு நின்று அனைத்தையும் காணவைக்கின்றது. ஆனால் அதனைச் சுருக்கமாகக் கூறினாலும் ‘ஜெர்மன் புரட்சி சிறப்பிதழ்’ ஆக மாறிவிடும்.

1917 ஆம் ஆண்டில் இருந்து தொழிலாளர்கள் போர்நிறுத்தம் கோரி வேலைநிறுத்தம் செய்வது தொடங்கியது. இராணுவத்தின் பகுதிகளிலும் இது பரவியது. 1917 ஜனவரி 28 முதல் நாளுக்கு நாள் லட்சோப லட்சம் தொழிலாளர்கள் பங்கேற்பவையாக வேலைநிறுத்தங்கள் நடைபெற்றன. போராட்டம் காட்டுத்தீயாகப் பெர்லின் நகரைத் தாண்டி நாடு முழுவதும் பரவியது. போராட்டக் களத்திலேயே தொழிலாளர்கள் ஆயுதம் ஏந்த வேண்டும், சோசலிசக் கட்சிகள் ஆயுதங்களை வழங்க வேண்டும் என்ற கோரிக்கைகளும் எழுந்தன. இந்தப் புரட்சிகர எழுச்சியை எவ்வாறு ஒருங்கிணைப்பது, எவ்வாறு வழிநடத்துவது, எதனை எதிர்த்து அதனை செலுத்துவது என்று அறியாதவர்களாக எஸ்பிடி கட்சியினுடைய இடதுசாரிகளே இருந்தார்கள்.

இதனால் எஸ்பிடி கட்சியின் வலதுசாரிகள் எழுச்சியை எளிதில் தடுத்து நிறுத்துவதற்கும் திசை மாற்றுவதற்கும் ஏதுவானது. குறிப்பாக, வலதுசாரித் தலைவர்களான ஃபிரெடரிக் எபர்ட், பிலிப் ஷெய்டமேன், குஸ்தவ் நாஸ்க் ஆகியோர் இந்தப் பணியைத் திறம்பட செய்தார்கள். இவர்கள் எல்லாம் பிறப்பாலும் வாழ்க்கையாலும் பாட்டாளி வர்க்கத்தினரே. இவர்கள் புரட்சிக்கும் சோசலிஸத்திற்கும் எதிரான பதாகைகளோடு களத்திற்கு வரவில்லை. தாங்கள்தான் புரட்சிக்கும் சோசலிசத்திற்கும் தலைமை தாங்குகின்றவர்கள் என்ற தோற்றத்தில் தலையிட்டார்கள். எஸ்பிடி கட்சி அணிகளிலும் கட்சிக்கு வெளியிலும் கணிசமான மக்கள் அவர்களை நம்புபவர்களாகத் தான் இருந்தார்கள்.

போரெதிர்ப்புக் காலத்தில் ஜெர்மனியின் இடதுசாரிகள்

போரெதிர்ப்பு சமூகத்தில் மேலும் பரவலாகிய போது எஸ்பிடியின் பெரும் பகுதி போரெதிர்ப்பு நிலைப்பாடுகளோடு தன்னை அடையாளம் கண்டுகொள்வதாக இருந்தது. தலைமையில் இருந்தவர்கள் தங்களது போராதரவுக் கொள்கைகளுக்கு எதிரான நிலைப்பாடுகளைச்

சகித்துக்கொள்ள முடியாதவர்களாக இருந்தார்கள். 1917 ஜனவரி தொடக்கத்தில் ஃபிரட்ரிக் எபர்ட் தலைமை, ஹூகோ ஹாஸே உள்ளிட்ட பலரையும் கட்சியில் இருந்து வெளியேற்றியது.

இந்தக் காரணத்தினால் அவர்கள் 1917 ஏப்ரலில் சுதந்திர சமூக ஜனநாயக கட்சி - யுஎஸ்பி என்ற பெயரில் இயங்க ஆரம்பித்தார்கள். போர் எதிர்ப்பைத் தவிர மற்ற கொள்கைகளில் அவர்கள் எஸ்பிடி நிலைப்பாடுகளைத்தான் கொண்டிருந்தார்கள். கார்ல் காவுட்ஸ்கி, எட்வர்ட் பெர்ன்ஸ்டைன் போன்றோர் எல்லாம் யுஎஸ்பி கட்சியில் இணைந்தார்கள். கட்சி, போருக்கெதிரான மக்களது எண்ணப் போக்கை எதிரொலிப்பதாக இருந்ததால், தொடங்கி ஆறு மாதங்களில் உறுப்பினர்கள் எண்ணிக்கை ஒரு லட்சத்து 20 ஆயிரம் ஆகியது; அன்றைக்கு எஸ்பிடி கட்சியின் மொத்த உறுப்பினர் எண்ணிக்கையே ஒரு லட்சத்து 50 ஆயிரம் தான்.

உண்மையிலேயே புரட்சிக்கு முயன்ற ஸ்பார்ட்டகஸ் குழுவினர் போன்றோர் மிகச் சிறுபான்மையாக விளிம்புநிலைக் குறுங்குழுக்களாகத்தான் இருந்தார்கள். அவர்களுக்கென்று ஒருங்கிணைக்கப்பட்ட, மையப்படுத்தப்பட்ட அமைப்பேதுமில்லை. கார்ல் லீப்னெக்ட் நாடறிந்த தலைவராக இருந்தார். ஆனால் அவர் போர்முனைக்கு அனுப்பப்பட்டு, ரோசா லக்ஸம்பர்க் சிறைப்படுத்தப்பட்ட பிறகு அவர்கள் அளவுக்குக்கூட நாடு முழுவதும் இடதுசாரிகளை ஒருங்கிணைக்கக் கூடியவர்கள் இல்லாது போனார்கள். மறுபுறத்தில், இடதுசாரிகள் மூன்று வெவ்வேறு குழுக்களாக இருந்தார்கள். ஒவ்வொரு குழுவும் அடுத்த குழுவை எதிர்ப்பதை முக்கியமான பணியாகக் கொண்டிருந்தது. 1918 வாக்கில் ஜெர்மனியில் இருந்த இந்த மூன்று அமைப்புகளிலும் சேர்ந்த புரட்சிக்காரர்கள் நான்காயிரம் பேர்தான்.

போரைத் தொடர்வது சாத்தியமில்லை என்பது 1918 ஜூலை, ஆகஸ்டில் இராணுவத் தலைமைக்குத் தெரிந்துவிட்டது. எப்படி இந்த முடிவிற்கு வந்தார்கள் என்பதை ஹார்மன் விரிவாக விளக்குகின்றார். ஜெனரல்கள் ஹிண்டன்பர்க், லுடன்டார்ஃப் ஆகிய இருவரும் இந்த முடிவுக்கு வந்ததில் முக்கியமானவர்கள். அவர்கள் 1918 செப்டம்பர் 29 அன்று சக்கரவர்த்தி 2 ஆம் கெய்ஸர் வில்ஹம் அவர்களைச் சந்தித்து, போரைத் தொடர்வது சாத்தியமில்லை என்று கூறினர். அத்தோடு கீழிருந்து எழும்பும் புரட்சியைத் தடுக்க வேண்டும் என்றால், நாம் மேலிருந்து ஒரு புரட்சியை நடத்தியாக வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றோம் என்றும் எடுத்துக் கூறினர். இதன் தொடர்ச்சியாக நடந்தவற்றை ஹார்மன் தேதி வாரியாகவும் முக்கிய தினங்களில் மணி வாரியாகவும் விவரிக்கின்றார். நாம் விவரங்களுக்குள் போக இடமில்லை.

ஜெர்மனியின் நவம்பர் புரட்சி

1918 நவம்பர் 5 அன்று பல்லாயிரம் ராணுவ வீரர்களும் மாலுமிகளும் கீல் நகரத்தில் பேரணியாகச் சென்றார்கள். அவர்களோடு துறைமுகத்தின் தொழிலாளர்களும் இணைந்து கொண்டார்கள். அரசாங்கத்திற்கு விசுவாசம் கொண்டவர்களாக இருந்த படைப் பிரிவினர்களோடு மோதினார்கள். துப்பாக்கிச் சண்டை கீல் நகரத்தில் பல இடங்களில் நடந்தது. அந்த வகையில், 1918, நவம்பர் 5 அன்றுதான் ஜெர்மன் புரட்சி தொடங்கியது என்பார் கிரிஸ் ஹார்மன். கீல் நகரில் சுமார் 20 ஆயிரம் கடற்படை வீரர்கள் ஒன்று கூடி படைவீரர்கள் தொழிலாளர் கவுன்சில் ஒன்றைத் தேர்ந்தெடுத்தார்கள். நவம்பர் 6ஆம் தேதி தொடங்கி 8 ஆம் தேதிக்குள் பிரெமன், கொலோன், மியூனிச், ஹானோவர், லீப்சிக், டிரஸ்டன்டார்ஃப், பிராங்க்பர்ட், ஸ்டுட்கார்டு என்று பெருநகரங்களில் எல்லாம் கவுன்சில்கள் அதிகாரத்திற்கு வந்தன. பெர்லின் மட்டுமே ஒரு தனித்தீவாக முடியாட்சி அதிகாரத்தின் கீழ் இருந்தது.

ஜெர்மனியில் தலைநகரான பெர்லினில் என்று புரட்சியைத் தொடங்குவது என்று பல்வேறு புரட்சிக் குழுக்களும் முடியாத விவாதத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தன. எஸ்பிடி தலைவர்கள் புரட்சியை எப்படியாவது அதன் முளையிலேயே கிள்ளி எறிந்து விட வேண்டும் என்ற முயற்சியில் ஈடுபட்டார்கள்.

கார்ல் லீப்நெக்ட் போன்றவர்கள், எஸ்பிடி கட்சித் தலைவர்கள் ஆட்சியில் இருந்து கொண்டு புரட்சிப் போராட்டங்களைத் தடுத்து நிறுத்தி எதிர்ப்புரட்சி அரசாங்கத்தை நிறுவி விடுவார்கள் என்று அஞ்சினர். இறுதியாக, 1918 நவம்பர் 9 - ஒரு பொது வேலைநிறுத்தத்திற்கான அறைகூவல் விடுக்கப்பட்டு அது எல்லாத் தொழிற்சாலைகளிலும் எதிரொலித்தது. 4 ஆண்டு போரில் கடும் துயரங்களை அனுபவித்த படை வீரர்களும் பஞ்சம் பசியில் அடிபட்ட தொழிலாளர்களும் பெரும் எண்ணிக்கையில் நகர்மையத்திற்கு வந்து கூடினார்கள். அவர்கள் ஆயுதமும் செங்கொடியும் தாங்கிய படை வீரர்களால் வழிநடத்தப்பட்டனர். முதல் நாள் சமூகத்தினுடைய விளிம்புநிலையில் சிறுபான்மையாக இருந்த புரட்சிகரத் தலைவர்கள்தான் எழுச்சிக்கும் பேரணிக்கும் தலைமை தாங்கினர். மக்கள் பேரணியாய் வந்து நகரத்தைத் தங்கள் வசமாக்கிக் கொண்டிருந்த

பொழுது, வீறுகொண்டு எழுந்த புரட்சியை ஒரு கட்டுக்குள் வைப்பதற்காக பிரதமர் இளவரசர் மேக்ஸ் பேடன், கெய்ஸர் வில்ஹம் முடி துறந்ததை அறிவித்தார். அத்தோடு தனது பதவியை எஸ்பிடி கட்சியின் தலைவரான ஃபிரெடரிக் எபர்ட் அவர்களிடம் ஒப்படைத்தார்.

எபர்ட் அவர்களுடைய சகாவான பிலிப் ஷெய்டமேனிடம் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் இன்னும் சில மணி நேரத்தில் கார்ல் லீப்நெக்ட் அவர்கள் ரஷ்ய போல்ஷ்விக் பாணியிலான சோசலிஸக் குடியரசை அறிவிக்கப் போகின்றார் என்றனர். ஒரு பால்கனிக்கு ஓடிய ஷெய்டமென் அங்கிருந்து கீழே ஆயிரக் கணக்கில் திரண்டு இருந்த தொழிலாளர்கள் படைவீரர்களுடைய பேரணியைப் பார்த்து, 'ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு அமைக்கப்பட்டு விட்டது; வாழ்க ஜெர்மன் குடியரசு' என்று அறிவித்தார். அத்தோடு எபர்ட் அவர்கள் குடியரசுத் தலைவராகப் பொறுப்பேற்றுக் கொண்டார் என்பதனையும் அறிவித்தார். தொழிலாளர் படை வீரர்களின் ஆரவாரக் கூச்சலில் பாராளுமன்றக் கட்டடம் அதிர்ந்து நின்றது.

எஸ்பிடி கட்சியினுடைய தலைவர்கள் ஷெய்டமெனின் அறிவிப்பை விரும்பவில்லை. அவர்கள் கோபம் கொண்டு அவரோடு வாதிட்டார்கள். இது நடந்து கொண்டிருந்த பொழுதே அங்கிந்து சில நூறு மீட்டர் தொலைவில் கார்ல் லீப்நெக்ட் அவர்கள் கெய்ஸர் வில்ஹம் சாதாரணமாக உரையாற்றும் ஜன்னலில் இருந்து 'விடுதலையின் தினம் வந்துவிட்டது; எல்லா ஜெர்மன் மக்களுக்கும் சோசலிசக் குடியரசு அமைந்ததை நான் பிரகடனம் செய்கின்றேன்' என்றார். 'நான் ஜெர்மன் மக்கள் அனைவரையும் உலகப் புரட்சியை நடத்தி முடிக்குமாறு அறைகூவல் விடுக்கின்றேன்; உலகப் புரட்சியை விரும்புபவர்கள் கை தூக்குங்கள்' என்றார். பல்லாயிரம் கரங்கள் உயர்ந்தன.

இடதுசாரிகளின் ஆட்சி

ஜெர்மன் பேரரசும் முடியாட்சியும் கவிழ்ந்தன. பாராளுமன்றமும் அதிகாரம் செலுத்த எந்தவிதத் தார்மீக உரிமையும் கொண்டதல்ல. உண்மையில் மக்கள் தேந்தெடுத்த அமைப்புகள் என்றால் அவை, தொழிலாளர்கள், படைவீரர்கள் கவுன்ஸில்கள்தாம். அவை நாடு முழுவதும் மையப் படுத்தப்படாதவையாக இருந்தன.

எபர்ட் அரசு தன்னை முழுமையான சோசலிச அரசாங்கமாகக் கூறிக் கொண்டது. ஆனால், ஒவ்வோர் அமைச்சருக்குப் பின்னாலும் பழைய அரசில் இருந்த அதிகார வர்க்க நிர்வாகப் பிரதிநிதிகளைக் கொண்டு அரசு முன்பு போலவே தன்னுடைய இயக்கத்தைத் தொடர வழி வகுக்கப்பட்டது. இத்தகைய 'புரட்சிகர அரசு' நவம்பர் 10 ஆம் தேதி ஏற்படுத்தப்பட்டு அறிவிக்கப்பட்டது. ரஷ்யாவில் கெரன்ஸி அரசாங்கத்தின் பிறப்பிடமான குளிர்கால மாளிகை மீதான போல்ஷ்விக்குகளின் தாக்குதலை நாம் அறிவோம். ஆனால் சோசலிசக் குடியரசு அறிவித்த கார்ல் லீப்நெக்ட் அவர்கள் தலைமையில் ஸ்பார்ட்டகஸ் குழுவினரும், ஏனைய இடதுசாரிகளும் போலி சோசலிஸ்ட்டுகளுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. தங்களுடைய அடுத்த நகர்வைத் தீர்மானிப்பதற்காக ஒரு பெரும் கூட்டத்தைக் கூட்டினர். அதனை அவர்கள் தொழிலாளர்கள் படை வீரர்கள் பிரதிநிதிகளின் அவை என்று அழைத்தார்கள்.

ஆனால் கூட்டத்தை எபர்ட் குழுவினர் ஆக்கிரமித்துக் கொண்டனர். எஸ்பிடி தலைவர்கள் பேசுவதை ஸ்பார்டகஸ் குழுவினரோ மற்றவர்களோ தடுக்க இயலவில்லை. ஃபிரடரிக் எபர்ட் உரையாற்றி புரட்சிகரமான சோசலிச அரசாங்கம் அமைக்கப்பட்டிருக்கிறது என்றும், அதில் யுஎஸ்பி தலைவர்களும் இணைந்து இருக்கிறார்கள் என்பதையும் கூறி மகிழ்ச்சி ஆரவாரத்தை ஏற்படுத்தினார். அவரை அடுத்து யுஎஸ்பி தலைவரான ஹூகோ ஹாஸே அவர்களும் மேடை ஏறி எபர்ட் அவர்களுடைய கருத்தை வழிமொழிந்து பலத்த கைதட்டல்களைப் பெற்றார். ஒற்றுமைக்கு எதிராக அல்லது எஸ்பிடியின் வலதுசாரிப் பிரிவுகளுக்கு எதிராக யாரேனும் பேசினால் அவர்களை "ஒற்றுமையின் எதிரிகள்" என்று கூட்டம் ஆரவாரக் கூச்சலிட்டு மேடையை விட்டு இறக்கியது. கார்ல் லீப்நெக்ட் எதிர்ப்புரட்சி சக்திகள் மாநாட்டைக் கைப்பற்றி விட்டார்கள் என்றெல்லாம் பேசிய பொழுது தொழிலாளர்கள் தங்கள் கூச்சலில் அவர் பேச்சை மூழ்கடித்தனர். சில பகுதிகளிலிருந்து துப்பாக்கிகளைக் காட்டியும் அவர் மிரட்டப்பட்டார். ஆனாலும் அவர் தான் பேச வேண்டியதை உரக்க ஒலித்தார்.

மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் மிகவும் புரட்சிகரமாக ஒலித்தது. அது ஜெர்மனி ஒரு சோசலிசக் குடியரசாக ஆகிவிட்டது என்று பிரகடனம் செய்தது. எல்லா அதிகாரமும் தொழிலாளர்கள் படைவீரர்களது கவுன்ஸில்களுக்கு என்று லெனின் கூறிய வார்த்தைகளை எதிரொலித்தது. எல்லாவற்றிற்கும் மேலாக வெற்றிகரமான ரஷ்யத் தொழிலாளர்கள் - படை வீரர்கள் அரசுக்கு சகோதர வாழ்த்துகளையும் பலத்த ஆரவாரத்துக்கிடையே பிரகடனம் செய்தது.

பெர்லினில் குடியரசு நிறுவப்பட்ட செய்தி ஜெர்மனி நாடு நகரமெங்கும் பரவியது. நாடெங்கும் ஊர்வலங்கள் பேரணிகள் செங்கொடியோடும் துப்பாக்கிகளோடும் நடந்தன. ஒவ்வொரு பகுதியிலும் தொழிலாளர்களும் படைவீரர்களும் தாங்கள் பெர்லினில் பிரகடனம் செய்யப்பட்ட ஜெர்மன் சோசலிசக் குடியரசின் அங்கம் என்பதனை அறிவித்து இந்த அரசாங்கத்தை அங்கீகரித்தனர்.

தொழிலாளர் அதிகாரம் நிலவிய நாட்கள்

புரட்சி நடந்த தினத்திற்கு மறுநாளே நவம்பர் 10 அன்று ஃபிரடரிக் எபர்ட் அவர்களுக்கும், இராணுவத்தினுடைய உச்சபட்ச தலைவர்களுக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடைபெற்றது. இராணுவத்தின் சார்பில் ஜெனரல் குரோனர், எபர்ட் அவர்களோடு பேசினார். இராணுவம் எபர்ட் அரசாங்கத்தோடு ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறது; அதற்குக் கைமாறாக எபர்ட்டும் அவருடைய அரசாங்கமும் ஜெர்மனியின் போல்ஷ்விக்குகளுக்கு எதிராகப் போராட வேண்டும்; இராணுவமும் அதன் அதிகாரிகளும் முழு பலத்துடன் துணை இருப்பார்கள் என்று ஜெனரல் குரோனர் இராணுவத்தின் உட்ச பட்சத் தலைவர் ஹிண்டன்பர்க் சார்பாக வாக்குறுதி அளித்தார்.

அப்படியும்கூட களத்தில் இருந்த படை வீரர்கள் முழுமையாக இராணுவத் தலைமை அதிகாரியான ஜெனரல் குரோனர் அவர்களோ அல்லது குடியரசுத் தலைவராக பொறுப்பேற்று இருந்த எபர்ட் அவர்களோ விரும்பியவாறு நடக்கவில்லை. பல இடங்களிலும் புரட்சிகரமான படைவீரர்களுக்கும் விசுவாசிகளான படைகளுக்கும் இடையில் சண்டையும் சச்சரவும் தொடர்ந்து நடந்து கொண்டுதான் இருந்தன.

இந்தச் சிக்கலை விடுவிப்பதற்காக குஸ்தவ் நாஸ்க் மற்றும் அவரது நண்பர்கள் வேறு ஓர் உபாயத்தைக் கையில் எடுத்தார்கள். போரின் கடைசிக் கட்டத்தில் புயல் படையினர் என்று இராணுவத்தினுடைய உயர் அதிகாரிகளான ஹிண்டன்பர்க், லுடன்டார்ஃப் ஆகியோரால் உருவாக்கப்பட்ட இராணுவ வீரர்களைக்கொண்டு உருவான சுதந்திரப் படையினர் - ஃபிரீகாப்ஸ் (Friecorps) எனும் ஆயுதந்தாங்கிய வலதுசாரி வன்முறைக் கும்பலை ஊக்குவித்தனர். நாடு முழுவதிலும் வேலையற்றிருந்த வலதுசாரிப் படைவீரர்களை முடியரசிற்கு ஆதரவாகவும் முதலாளித்துவ ஆதரவாளர்களாகவும் இருந்த அதிகாரிகள் ஒன்று திரட்டி இந்த ஆயுதம் தாங்கிய வன்முறைக் கும்பல்களை உருவாக்கினர். அவர்களுக்குத் தேவையான உணவு, உடை, ஆயுதங்கள் மற்றும் குடும்பத்தினருக்கான ஊதியம் ஆகியவற்றைப் பெருமுதலாளித்துவமும் முடியரசு ஆதரவு நிலஉடைமையாளர்களும் நன்கொடையாக வழங்கினார்கள்.

ஜெர்மன் கம்யூனிஸ்ட் கட்சியின் உருவாக்கம்

நாடு திடமற்ற நிலைமையிலும் புரட்சிக் கொந்தளிப்பிலும் இருந்தாலும் கூட நாடு முழுவதும் புரட்சியை ஒருங்கிணைக்கத் தேவையான மத்தியத்துவம் கொண்ட புரட்சிகரக் கட்சி ஒன்று இல்லாதது பலராலும் உணரப்பட்டது. அத்தகையதொரு கட்சியாக யுஎஸ்பியை மாற்ற நடந்த முயற்சிகள் கட்சித் தலைவர்களால் நிராகரிக்கப்பட்டன. எனவே அத்தகைய கட்சியை உருவாக்கும் முயற்சியாக 1918 டிசம்பர் 29 அன்று நடந்த மாநாட்டில் ஜெர்மன் கம்யூனிஸ்ட் கட்சி – கேபிடி அமைக்கப்பட்டது. அதாவது, புரட்சி வெடித்து 55 நாட்களுக்குப் பிறகுதான் கம்யூனிஸ்ட் கட்சி அமைக்கப்பட்டது!

ரோசா லக்ஸம்பர்க் போன்ற மூத்த தலைவர்களின் கருத்துகளும் மாநாட்டில் பங்கு பெற்ற புதிய தோழர்களின் கருத்துகளும் ஒன்று போல இருக்க வில்லை. ரோசா லக்ஸம்பர்க் கட்சியின் திட்டத்தை அறிமுகம் செய்து பேசியபோதும் புரட்சி அதனுடைய தொடக்கக் கட்டத்தில்தான் இருக்கிறது; உடனடியாக ஆட்சியமைக்க முடியாது என்று வலியுறுத்தினார். அவரது உரை பலத்த கரகோஷத்தோடும் முழக்கங்களோடும் வரவேற்கப்பட்டது. ஆனாலும், அவரது முக்கியமான கருத்துகள் புரிந்து கொள்ளப்படவில்லை.

நாடாளுமன்றத்திற்கான தேர்தல் 19, ஜனவரி 1919 அன்று நடப்பதாக இருந்தது. ரோசா லக்ஸம்பர்க் போன்றோர் தேர்தலில் பங்கேற்று போதுமான எண்ணிக்கையில் இடதுசாரி பாராளுமன்ற உறுப்பினர்களை அனுப்பி வைக்க வேண்டும்; அதன் மூலம் அரசினுடைய உண்மையான முகத்தை அம்பலப் படுத்த வேண்டும் என்று முன்மொழிந்தார்கள் ஆனால் கட்சியின் அதிதீவிர இடதுசாரிகள் தேர்தலில் பங்கு பெறுவதை விரும்பவில்லை. அவர்கள் இந்தப் பாராளுமன்றத்தை உடனடியாக அப்புறப்படுத்தி, தொழிலாளர் - படைவீரர்கள் கவுன்சில்களின் அமைப்பை ஏற்படுத்த வேண்டும் என்றார்கள். அதற்கெல்லாம் இன்னும் காலம் கனியவில்லை; அதற்கு தேவைப்படும் அளவுக்கு வெகுமக்களுடைய ஆதரவு நம்மிடத்தில் இல்லை என்ற விளக்கங்களை பெரும்பாலான மாநாட்டுப் பிரதிநிதிகள் ஏற்றுக் கொள்ளவில்லை.

ஸ்பார்ட்டகஸ் தினங்கள்

1919 ஆண்டின் தொடக்க நாட்களில் பெர்லின் நகரத்தில் நிலவிய சூழல் இடதுசாரிப் புரட்சியாளர்களை யாரும் தடுத்து விட முடியாது என்ற தோற்றத்தை அளிப்பதாக இருந்தது.

அரசாங்கம் இடதுசாரிகள் தலைமையில் இருந்த ஊசலாட்டம், ஒற்றுமையின்மை ஆகியவற்றைப் பயன்படுத்திக் கொண்டது. அவர்கள் பெர்லின் நகருக்கு வெளியே திரட்டி வைத்திருந்த வலதுசாரி சுதந்திரப் போர்வீரர்கள் - ஃபிரி கார்ப்ஸ் என்ற அரை இராணுவக் கட்டமைப்பைப் பயன்படுத்தி பெர்லின் நகரத்தின் தொழிலாளர் தலைவர்களையும் இடதுசாரிப் படை வீரர்களின் தலைவர்களையும் வேட்டையாடத் தொடங்கினர். கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கியமான தலைவர்கள் அரசாங்கத்தின் படைகளாலும் ஃபிரி கார்ப்ஸ் என்ற வலதுசாரி ஆயுதந் தாங்கிய குழுக்களாலும் தேடப்பட்டார்கள். லீப்நெக்ட், லக்ஸம்பர்க் போன்ற தலைவர்கள் தலைமறைவானார்கள். கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஆதரவான படைவீரர்களால் கைப்பற்றி வைக்கப்பட்டிருந்த கட்டடங்கள் எல்லாம் அரசப் படைகளாலும் ஃபிரிகார்ப்ஸ் படைகளாலும் கைப்பற்றப்பட்டு, பல நூறு கம்யூனிஸ்ட் ஆதரவாளர்கள் படுகொலை ஆனார்கள்.

ஜனவரி 15ஆம் நாள் ரோஸா, லீப்நெக்ட் இருவரும் அவரவரது பதுங்கு தளத்தில் இருந்து கைது செய்யப்பட்டு ஃபிரீ கார்ப்ஸ் கூலிப்படையின் தலைமையகமான ஈடன் ஹோட்டல் கொண்டுவரப்பட்டனர். அங்கு விசாரணை என்ற பெயரில் சித்திரவதைக்கு உள்ளானார்கள். பிறகு கால் லீப்நெக்ட் அந்தக் கட்டடத்திலிருந்து வெளியே இழுத்துச் செல்லப்பட்டார். அவ்வாறு இழுத்துச் செல்லப்படும் பொழுது பின்னால் இருந்து துப்பாக்கிக் கட்டையால் பின் மண்டையில் அடிக்கப்பட்டு அரை நினைவோடுதான் ஹோட்டலில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டார். பின்பு பெர்லின் நகரின் தேர்கார்டன் என்ற பூங்கா பகுதிக்குக் கொண்டு செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்டார். அவரது உயிரற்ற உடலை அருகில் இருந்த ஒரு மருத்துவமனையில் போட்டுவிட்டு சென்றுவிட்டனர். ரோசா லக்ஸம்பர்க் துப்பாக்கி கட்டைகளால் அடிக்கப்பட்டு நினைவிழந்த நிலையில் கட்டடத்தை விட்டு வெளியில் கொண்டு செல்லப்பட்டு அதே தேர்காட்டன் பகுதியில் பலமுறை சுடப்பட்டு அங்கு ஓடிய ஒரு கால்வாய் தண்ணீரில் வீசப்பட்டார். அவரது உயிரற்ற உடல் ஆறுமாதம் கழித்துதான் கிடைத்தது.

ஒரே சமயத்தில் ஜெர்மனி முழுவதும் இந்த புரட்சி நிகழ்ந்து இருந்தால் எபர்ட் அரசு புரட்சியை அடக்கி இருக்க முடியாது. ஒரே சமயத்தில் எல்லோர் மீதும் நடவடிக்கை எடுக்காமல், தொடர்ந்து பேச்சுவார்த்தைகளை நடத்தியது. ஆனால் தன்னுடைய கூலிப்படைகளையும் விசுவாசமிக்க இராணுவப் பிரிவுகளையும் வைத்து ஒவ்வொரு பகுதியாக தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது. 'ராஜதந்திரம்-டிப்ளமசி என்பது கல் கிடைக்கும் வரை நாயோடு பேச்சுவார்த்தை நடத்துவது' என்பார்கள் அல்லவா, அதனை எபர்ட் அரசாங்கம் திறம்பட செய்தது.

1919 ஜனவரி 19 அன்று நடந்த தேர்தலில் எஸ்பிடி கட்சி 38% வாக்குகளையும் 165 இடங்களையும் பெற்றது. பாராளுமன்றத்தின் மொத்த இடங்கள் 423 இல் 212 இடங்கள் பெற்றால்தான் பெரும்பான்மை. கத்தோலிக்கக் கிறிஸ்துவம் பேசும் சிவிபி 91, டிடிபி என்ற தாராளவாத மைய இடதுக் கட்சி 75, டிஎன்விபி என்ற முடியரசு ஆதரவு பழமைவாதக் கட்சி 44, யுஎஸ்பி 22, டிவிபி என்ற தாராளவாதக் கட்சி 19, ஏனைய சிறு கட்சிகள் 9 என இடங்களைப் பெற்று இருந்தன. எஸ்பிடி கட்சி டிடிபி கட்சியோடு இணைந்து கூட்டு மந்திரி சபை அமைத்தது. பெர்லின் நகர் அப்போதும் இடதுசாரிகள் செல்வாக்கில் இருந்ததால் பாராளுமன்றம் வெய்மர் நகரில் ஃபிப்ரவரி 6 ஆம் தேதி கூடியது. ஃபிரெடரிக் எபர்ட் அவர்களைக் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுத்தது. பிலிப் ஷெய்டமேன் சான்ஸலரானார். பின் வெய்மர் அரசிலமைப்புச் சட்டத்தை ஆகஸ்டு 11இல் ஏற்றது. அந்த அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படையிலான தேர்தல் ஜூன் 1920இல் நடந்தது. எஸ்பிடி 193 இடங்களையே பெற்றது. யுஎஸ்பி 83 இடங்களைப் பெற்றது. டிஎன்விபி 71, டிவிபி 65, செண்ட்ரம் 64, டிடிபி39, கேபிடி 4, ஏனைய கட்சிகள் 30 என இடங்களைப் பிடித்தன. எஸ்பிடி கட்சி மந்திரிசபை அமைக்க ஒத்துழைப்பு கிடைக்கவில்லை. செண்ட்ரம், டிடிபி, டிவிபி ஆகியவை இணைந்து அமைச்சரவை அமைத்தன. 1923ஆம் ஆண்டு ஹிட்லர் முன்னணிக்கு வரும் வரை நடந்தவை பெரிய கதை. அவை தோல்வியுற்ற புரட்சியின் விளைவுகள் என்றுதான் கூற வேண்டும். கிரிஸ் ஹார்மன் அவற்றை விரிவாக எடுத்துக் கூறுகின்றார்.

தோல்விக்குக் காரணங்கள்

தோல்விக்கான காரணங்கள் இன்று வரை விவாதிக்கப்பட்டு வருகின்றன. சில காரணங்கள் வெளிப்படை. கிட்டத்தட்ட அதே காலகட்டத்தில் நடந்த ரஷ்யப் புரட்சியைத் தலைமை தாங்கி

நடத்திய லெனின் போன்ற ஒரு தலைவர் ஜெர்மனியில் இல்லை. 1903ஆம் ஆண்டு முதல் லெனின் செங்கல் செங்கல்லாய்ப் பார்த்து கட்டிய போல்ஷ்விக் கட்சி போன்ற நன்கு ஒருங்கிணைக்கப்பட்ட மையப்படுத்தப்பட்ட கட்சி ஜெர்மனியில் இல்லை; போல்ஸ்விக் கட்சி, ரஷ்யப் புரட்சிக்கு முன்பு 14 ஆண்டுகள் செயல்பட்ட அனுபவத்தோடு இருந்தது. ஜெர்மன் கம்யூனிஸ்ட் கட்சி புரட்சி நடந்துகொண்டிருந்த போதுதான் உருவாக்கப்பட்டது. ரோசா லக்ஸம்பர்க், லெனினுக்கு ஈடான கோட்பாட்டாளர்தான். ஆனால் ஒரு கட்சியை ஒருங்கிணைப்பது, இராணுவப் படைகளை ஒருங்கிணைப்பது, புரட்சியைத் தலைமை தாங்கி நடத்துவது ஆகியவற்றில் லெனின் அளவுக்கோ அல்லது அன்றைக்கு ரஷ்யாவில் செம்படையை உருவாக்கி உள்நாட்டுப் போரில் புரட்சியைக் காத்து நின்றவரான ட்ராட்ஸ்கியைப் போன்று ஒருங்கிணைப்புத் திறமை கொண்டவராகவோ இல்லை. லீப்நெக்ட் நாடெறிந்த தலைவராக இருந்தாலும் ஒரு திறமை வாய்ந்த பிரசாரகராக அல்லது நாடாளுமன்றப் பேச்சாளராக, பத்திரிகையாளராக இருந்தாரே ஒழிய புரட்சிக்குத் தலைமை தாங்கி புரட்சிகர சக்திகளை ஒருங்கிணைத்து வழிநடத்துவதற்கான திறமைகளைக் கொண்டவராக இல்லை. இவற்றையெல்லாம் நூலாசிரியரான கிரிஸ் ஹார்மன் பல சான்றுகளின் உதவியோடு விளக்குகின்றார். ஆனாலும் கூட அவருடைய டிராட்ஸ்கியப் பின்னணியின் வறட்டுவாதம் காரணமாக சில விவரங்களைத் தரவில்லை என்றுதான் கருத வேண்டியுள்ளது.

மார்க்ஸ், எங்கல்ஸ் ஆகியோர் அமெரிக்கா, இங்கிலாந்து, ஹாலந்து போன்ற நாடுகளில் பாராளுமன்றப் பாதையின் மூலமே அமைதியான வழியிலேயே சோசலிசத்திற்கான மாற்றம் நிகழ்வதற்கான வாய்ப்புகளைப் புறக்கணித்து விட முடியாது என்ற கருத்தில் இருந்தார்கள். (எ.கா: அகிலத்தின் 1872ஆம் ஆண்டு ஆம்ஸ்டர்டாம் மாநாட்டில் மார்க்ஸின் உரை- மா-எ-தொ.நூ - தொகுதி 23 ப: 254) எங்கல்ஸ் தனது இறுதிக் காலத்தில் ஜெர்மனி நாட்டிலும் அதுபோல பாராளுமன்ற ஜனநாயகத்தின் மூலமே அமைதியான வழியிலேயே சோசலிசத்திற்கு மாறிச்செல்லும் சாத்தியப்பாடு இருப்பதைக் கூறி இருக்கின்றார். (மார்க்ஸின் ஃபிரான்ஸில் வர்க்கப் போராட்டம் நூலுக்கான முன்னுரை - மா-எ-தொ.நூ - தொகுதி 27 ப: 217)

பாட்டாளி வர்க்கக் கட்சி பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் தன் நடவடிக்கைகளை ஒன்றிணைக்க வேண்டும்; எதிரிதான் ஆயுதங்களைத் தீர்மானிக்கின்றான் என்பதனை மனதில் கொண்டு அதற்கு ஏற்பதான் தன்னுடைய செயல்பாட்டு வடிவங்களைத் தீர்மானிக்க வேண்டும் என்பதே மார்க்ஸ், எங்கல்ஸ் ஆகியோருக்கும் லெனினுக்கும் இருந்த புரிதலாகும். இது, அன்று ஜெர்மன் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களுக்கோ அல்லது இந்த வரலாற்றை எழுதும் கிரிஸ் ஹார்மன் அவர்களுக்கோ இருந்ததாகத் தெரியவில்லை.

1917ஆம் ஆண்டு ரஷ்யா இருந்த நிலை என்பதும், 1918-19ஆம் ஆண்டில் ஜெர்மனி இருந்த நிலை என்பதும் ஒன்றல்ல என்பதைப் போதுமான அளவுக்கு வேறுபடுத்திக் காட்டவில்லை. எந்தவித ஜனநாயக அரசியல் உரிமையும் இல்லாத ஜார் ரஷ்யாவில் கட்சி செயல்பட்ட விதம் இயல்பாகவே இரகசியக் கட்சியாக, மிகவும் கறாராக ஒருங்கிணைக்கப்பட்ட படிநிலை அமைப்பாக மையப்படுத்தப்பட்ட விதத்தில் இயங்கியது என்பது வரலாறு. ஜெர்மனியில் கட்சி அதுபோல இல்லை; இருக்க முடியாது என்பதை லெனினே விளக்கியுள்ளார். இந்த வேறுபாடு கிரிஸ் ஹார்மனின் விளக்கத்தில் போதுமான அளவிற்கு இடம் பெறவில்லை.

முதலாளித்துவமும் முதலாளித்துவ பாராளுமன்றமும் இயங்கக்கூடிய ஒரு நாட்டில் புரட்சியை எப்படி நடத்துவது என்பதற்கு மார்க்ஸ்-எங்கல்ஸிடமோ லெனினிடமோ முழுமையான விளக்கங்கள் கொண்ட கையேடு ஏதுமில்லை; அன்றைக்கு மட்டுமல்ல; இன்றைக்கும் வளர்ச்சி அடைந்த முதலாளித்துவமும் முதலாளித்துவ பாராளுமன்றமும் இருக்கக்கூடிய ஒரு சூழலில் புரட்சியை நடத்துவது எப்படி என்பது விவாதத்திற்குரிய ஒன்றுதான். அந்த வகையில் தோல்வியில் முடிந்த ஜெர்மன் புரட்சியிடமிருந்து விலை மதிப்பில்லாத பாடங்களை நாம் படிக்க வேண்டியிருக்கிறது. அத்தோடு, இடதுசாரிகள் பின்னடைவைச் சந்திக்கும் பொழுது அந்த நாடுகளில் வலதுசாரி அதிதீவிரவாதமும் அதனுடைய தர்க்க ரீதியான நீட்சியாக ஃபாசிஸம் அல்லது நாஜியிசம் ஆகியவை எவ்வாறு உருவாகின்றன என்பதைப் புரிந்து கொள்ளவும் ஜெர்மனியின் தோல்வியுற்ற புரட்சி என்ற இந்த நூல் மிகவும் முக்கியமானதாக இருக்கிறது. வெகு விரைவில் கட்டாயமாகத் தமிழில் வரவேண்டிய நூல் என்று சொன்னால் மிகை இல்லை.

●

கட்டுரையாளர்: NCBH பதிப்பாசிரியர்,
எழுத்தாளர், செயல்பாட்டாளர்.



மலர் 15 இதழ் 1
காவ்யா தமிழ்
KAAVYA TAMIL ISSN 2277 - 9221
விலை ₹ 200
58&59 ஆடி
ஏப்ரல் 2026 – செப்டம்பர் 2026
கலை, இலக்கியம், பண்பாட்டு பன்னாட்டுக் காலாண்டிதழ்
வதய்சு 100
அரிமளம் 75
நல்லகண்ணு அஞ்சலி
பாரதிராஜா அஞ்சலி
ச.தமிழ்ச்செல்வன் சாகித்ய செல்வன்
2026 டிசம்பர் வெளியீடு
KAAVYA TAMIL (QUARTERLY) April 2026 - September 2026
Regd No : TN TAM 8012 / 43610
காவ்யா
திருநெல்வேலி
கலைக் களஞ்சியம்
பேரா. காவ்யா சு. சண்முகசுந்தரம்
TIRUNELVELI JUNCTION
KAAVYA TAMIL ISSN 2277 - 9221
தொடர்புக்கு
044 - 23726882
98404 80232
A4 அளவில் 1000 பக்கம் | விலை ரூ. 1500/-
முன் விலை : ரூ. 1000/-

ஆய்வுக்கட்டுரை

பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் தொழிலாளர் நலன், தொழிலாளர் சட்டம் மற்றும் வளர்ச்சி நிறுவன உருவாக்கங்களில் அண்ணல் அம்பேத்கரின் வகிபாகம்

நூல்கள்:

அண்ணல் அம்பேத்கர் மக்கள் பதிப்பு தொகுதிகள் 49–54 வரை



வீ.அரசு

உழைக்கும் மக்களின் விடுதலைக்காகச் செயல்படத் தொடங்கிய அண்ணல் அம்பேத்கர், 1936இல் ‘சுதந்திரத் தொழிலாளர் கட்சி’ என்ற அமைப்பை உருவாக்கினார். இந்த அமைப்பைத் ‘தாழ்த்தப்பட்டோர் கட்சி’ என்ற நோக்கத்தில் தொடங்கினாலும், அதற்குத் ‘தொழிலாளர் கட்சி’ என்று பெயரிட்டார். தொழிலாளர் என்ற வரையறைக்குள், தொழிற்சாலைகளில் வேலைபார்ப்போர் ஒரு பிரிவினர் உட்படுகின்றனர் என்றாலும், விவசாயம் போன்ற துறைகளில் உழைக்கும் மக்களும் இச்சொல்லிற்குள் அடங்குவதாக அம்பேத்கர் கருதினார். தாழ்த்தப்பட்ட மக்களைக் கொண்டிருக்கும் அக்கட்சியில் பிற உழைக்கும் மக்களையும் சேர்த்துக் கொள்வதாகவும் அம்பேத்கர் கூறியுள்ளார். "தொழிலாளர்களுக்கு என்னென்ன சலுகைகள் கிடைக்க வேண்டுமென்று கட்சி முயற்சி செய்யுமோ அதே சலுகைகள் வேளாண் தொழிலாளர்களுக்கும் கிடைப்பதற்குக் கட்சி பாடுபடும்.” (தொ.96 : பக்.27) என்பதை சுதந்திரத் தொழிலாளர் கட்சியின் குறிக்கோள் என்று அம்பேத்கர் பதிவு செய்துள்ளார். இந்த வகையில் முதன்மையாக விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் ஆகியோர் உள்ளடங்கிய அமைப்பாக அம்பேத்கர் உருவாக்கிய “சுதந்திரத் தொழிலாளர் கட்சி” செயல்பட்டது.

1936இல் உருவான சுதந்திரத் தொழிலாளர் கட்சி, 1937இல் இந்தியப் பொதுத் தேர்தலில் போட்டியிட்டது; அக்கட்சியின் வேட்பாளர்கள் பதினேழு பேர் வெற்றி பெற்றனர். மும்பையில் அம்பேத்கர் போட்டியிட்டு வெற்றி பெற்றார். 1942 ஏப்ரல் மாதத்தில், என். சிவராஜைத் தலைவராகவும் பி.என்.ராஜ்போஜைப் பொதுச்செயலாளராகவும் கொண்டு அகில இந்தியப் பட்டியலின மக்கள் பேரவையை அம்பேத்கர் உருவாக்கினார். அந்த ஆண்டு ஜூலை மாதம், பிரித்தானிய அரசின் அரசப் பிரதிநிதி அவையில் தொழிலாளருக்கான உறுப்பினராக அம்பேத்கர் நியமிக்கப்பட்டார். இது பிரித்தானிய அரசின் கீழ் இயங்கும் அரசமைப்பில், இன்றைய ஓர் அமைச்சருக்குரிய அதிகார மற்றும் நிருவாக வரம்புகளுடன் கூடியது.

பிரித்தானிய அரசில் தொழிலாளர் துறை அமைச்சர் என்ற புரிதல் பொதுவெளியில் உருப்பெற்றது. 1936 முதல் 1942 வரை விவசாய மற்றும் தொழிற்சாலை சார்ந்த தொழிலாளருக்கான அமைப்பை அம்பேத்கர் நடத்தியதால், இப்பதவியைப் பிரித்தானிய அரசு அம்பேத்கருக்கு வழங்கியுள்ளது என்று புரிந்துகொள்ளலாம். இந்தப் பதவியில் 1942 முதல் 1946 வரை அம்பேத்கர் செயல்பட்டார். இந்தப் பதவியில் அம்பேத்கரின் செயல்பாடுகளை ஆறு தொகுதிகளாகத் தொகுத்துள்ளோம். அந்தத் தொகுதிகளைப் புரிந்துகொள்ளும் நோக்கத்தில் இப்பகுதி எழுதப்படுகிறது.

தொழிலாளர்களின் எழுச்சி

தொழிலாளர்களின் எழுச்சி என்பது இந்தியாவில், பத்தொன்பதாம் நூற்றாண்டில் விவசாயத் தொழிலாளர் எழுச்சியாகத்தான் உருவானது. வங்காளம், பீகார், ஆந்திரா முதலிய பகுதிகளில் அவ்வகையான விவசாயத் தொழிலாளர்களின் தன்னெழுச்சியான போராட்டங்கள் உருப்பெற்றன. இந்தியாவில் 1920களில் அமைப்பு ரீதியான தொழிற்சங்கங்கள் உருப்பெற்றன. "அகில இந்தியத் தொழிற்சங்கக் காங்கிரஸ்" (AITUC) உருவானது. இதன் தலைவராக தோழர் டாங்கே செயல்பட்டார். இச்சங்கம் மீரட் சதிவழக்கு (1929) முதலிய கொடுமையான அடக்குமுறைகளை எதிர்கொண்டது. டாங்கே அவர்களுடன் அம்பேத்கர் தொடர்புடன் இருந்தார். இந்தப் பின்புலத்தில்தான் அம்பேத்கர் 1936இல் சுதந்திரத் தொழிலாளர் கட்சியை உருவாக்கிச் செயல்பட்டார் என்று புரிந்துகொள்ளலாம். அந்த வகையில் அமைந்த அவரது செயல்கள், தொகுதி 96இல் விரிவாகப் பதிவாகியுள்ளன. இங்கு (தொகுதி 49-54) பிரித்தானிய அரசு சார்ந்து தொழிலாளர்களுக்காக அம்பேத்கரின் செயல்கள் மட்டும் கவனத்தில் கொள்ளப்படுகின்றன. இந்த அடிப்படையில் அம்பேத்கரின் செயல்களைக் கீழ்க்கண்டவாறு பாகுபடுத்தி உரையாடலுக்குட்படுத்த இயலும்.

- தொழிலாளர்களுக்கான அமைப்புகள் உருவாக்கம், மாநாடுகளை நடத்துதல், பன்னாட்டு மரபில் தொழிலாளர் நலன் குறித்த அக்கறைகள், வேலைவாய்ப்புகள், வீட்டுவசதி போன்ற நலத்திட்டங்கள், தொடர்வண்டி நிறுவனம் போன்ற அமைப்புகளில் சங்கம் உருவாக்குவதன் அவசியம் ஆகியவற்றில் அம்பேத்கர் கவனம் செலுத்தினார். பிரித்தானிய அரசு நடைமுறைப்படுத்தும் பல்வேறு செயல்களில், 'தொழிலாளர்களின் நலன்' எனும் கருத்தாக்கத்தை முன்னிருத்திய செயல்களை உரையாடலுக்குட்படுத்தலாம்.
- அதிகாரம் உடைய நிருவாகியாகச் செயல்படும் வாய்ப்பு அம்பேத்கருக்குக் கிடைத்தது. இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, தொழிலாளர்களுக்கான எண்ணற்ற சட்ட முன்வரைவுகளை அவர் கொண்டு வந்தார். அதன் தொடர்ச்சியாக தொழிலாளர்களுக்கான பல சட்டங்களை இயற்றச் செய்தார். அவ்வகையான செயல்கள் குறித்து இத்தொகுதிகளில் இடம்பெற்றுள்ள செய்திகளைக் கவனப்படுத்தும் தேவையுண்டு.
- அம்பேத்கர் செயல்பட்ட காலம், இரண்டாம் உலகப்போர் நிகழ்ந்து கொண்டிருந்த காலம் (1939-1945). தொழிலாளர்களின் அன்றாட வாழ்வோடு தொடர்புடையதாக போர் இருந்தது. போருக்கும் தொழிலாளருக்குமான உறவுகள், விளைவுகள் ஆகியவை குறித்து அம்பேத்கர் விரிவாகப் பேசியுள்ளார். அவை குறித்தும் பேச வேண்டும்.
- பிரித்தானியர்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைக்காலம் முதல், இந்தியாவை முழு அதிகாரத்துடன் ஆட்சி புரிந்தனர். அவர்கள் நடைமுறைப்படுத்திய பல்வேறு புதிய திட்டங்கள், இந்திய மக்களின் வாழ்க்கையில் பெரும் மாற்றங்களை உருவாக்கின. இந்தியாவைச் சுரண்டுவதற்கான அவர்களது திட்டங்கள், வேறு கோணங்களில் இந்திய மக்களின் கல்வி, பண்பாடு நிகழ்வுகள் ஆகியவற்றில் பெரும் மாற்றங்களைக் கொண்டு வந்தன. இந்தப் பின்புலத்தில் அம்பேத்கர் முன்னெடுத்த பொதுத் திட்டங்கள் முதன்மையானவை. அவ்வகையான திட்டங்களின் வழியாக இந்தியத் தொழில் வளர்ச்சிக்கு அவர் அடித்தளமிட்டுள்ளார். அவை குறித்தும் பேச இயலும்.

முத்தாப்பு மநாடுகள்

அண்ணல் அம்பேத்கர், தொழிலாளர் நலனுக்காக, தமது பதவியைப் பயன்படுத்திச் செயல்படத் தொடங்கினார். தொழிலாளர்களுக்குச் சங்கம் உருவாக்குதல், தொழிலாளர்களை ஒன்றிணைத்து மாநாடு நடத்துதல், அரசாங்கத்தில் தொழிலாளர் நலத்துறை என்ற அமைப்பை உருவாக்குதல், வேலைவாய்ப்பை உருவாக்குவதன் மூலம் தொழிலாளர் நலம் பேணுதல், சமவேலைக்குச் சமஊதியம் ஆகிய பல்வேறு செயல்களை அம்பேத்கர் முன்னெடுத்திருப்பதை அவரது சட்டமன்ற மற்றும் மேலவை உரையாடல்கள் உறுதிப்படுத்துகின்றன.

1943 ஆம் ஆண்டு டில்லியில் நடைபெற்ற அகில இந்தியத் தொழிற்சங்கப் பயிற்சி முகாமில், தொழிலாளர்கள் மற்றும் நாடாளுமன்ற சனநாயகம் குறித்துப் பேசிய உரை, உழைக்கும் வர்க்கம் குறித்த அவரது புரிதலைக் காட்டுவதாக அமைகிறது. இந்தியத் தொழிலாளர் அமைப்பு குறித்து தான் நீண்ட காலம் சிந்தித்து வருவதாகவும் அவர் கூறுகிறார். நாடாளுமன்ற சனநாயகம் நிலவும் நாட்டில் தொழிலாளர்களுக்குக் கொடுக்க வேண்டிய



முதன்மையானப் பாத்திரம் கொடுக்கப்பட்டதா? என்பது குறித்தும் பேசுகிறார். நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்படும் சட்டங்கள், தொழிலாளர் நலம் கருதி உள்ளனவா? என்றும் கேள்வியை முன்வைக்கிறார். "சுதந்திரம், சொத்துரிமை, சிறந்த வாழ்வுக்கான உரிமை முதலியவற்றை நாடாளுமன்ற சனநாயகம் உறுதி செய்யத் தவறிவிட்டது" என்றும் கூறுகிறார் *(தொ.49 : பக்.190)* பொருளாதார சனநாயகமும் சமூக சனநாயகமும் இணைந்து செயல்படுவதில் முரண்கள் இருப்பதாகவும் கருதுகிறார். "சனநாயகம் என்பது சமத்துவத்துக்கு மற்றொரு பெயர்." *(தொ.49 : பக்.190)* என்றும் பதிவு செய்கிறார். இந்தப் பின்புலத்தில், தொழிலாளர் கூட்டமைப்பின் பயிற்சி முகாமில், அம்பேத்கர் பதிவு செய்துள்ள பின்கண்ட பகுதி முக்கியமானது:

"வரலாற்றைப் பொருளாதாரக் கண்ணோட்டத்தில் விளக்கும் கருத்துநிலையை மார்க்ஸ் முன்வைத்தார். இதன் தகைமை குறித்து காரசாரமான வாக்குவாதம் நடைபெற்று வருகிறது. மார்க்ஸ் இதனை ஒரு கருத்துநிலையாக அன்றி, தொழிலாளர்களுக்கு ஓர் அறிவுரையாகக் கூறினார் என்றே எனக்குத் தோன்றுகிறது. உடைமை வகுப்பினரைப் போன்றே உழைக்கும் வகுப்பினரும் பொருளாதார நலன்களுக்குத் தலையாய முக்கியத்துவம் அளிப்பார்களேயானால், வரலாறானது வாழ்வின் பொருளாதாரக் கூறுகளை இப்போதைவிட அதிகம் வெளிப்படுத்துவதாக அமைந்திருக்கும் என்று அவர் கருத்துத் தெரிவித்தார். வரலாற்றைப் பொருளாதார நோக்கில் விளக்கும் இந்தக் கருத்துநிலை முழு அளவுக்கு உண்மையாக இல்லை. கூட்டுச் சமூக வாழ்க்கையைத் தீர்மானிப்பதில் பொருளாதாரக் கூறுகளுக்கு உரிய முக்கியம் அளிக்க உழைக்கும் வகுப்பு தவறியதே அதற்குக் காரணமாகும்.

மானுடத்தை ஒழுங்குபடுத்துவது பற்றித் தெரிந்துகொள்ள உழைக்கும் வகுப்புகள் தவறிவிட்டன. உழைக்கும் வகுப்பைச் சேர்ந்த ஒவ்வொருவரும் இக்காலச் சமூக, அரசாங்க ஒழுங்கமைப்பு குறித்த அடிப்படையான செயல்முறை ஆவணங்களைப் பற்றி அவசியம் அறிந்துகொள்ள வேண்டும். ரூசோவின் சமூக ஒப்பந்தம், மார்க்சின் கம்யூனிஸ்டு கட்சி அறிக்கை, தொழிலாளர்களின் நிலை குறித்த போப்பாண்டவர் பதின்மூன்றாம் லியோவின் சுற்றுக் கடிதம், சுதந்திரம் பற்றிய ஜான் ஸ்டூவர்ட் மில்லின் நூல் முதலிய நான்கையும் இவ்வகையில் முக்கியமாகக் குறிப்பிடலாம்.." *(தொ.49 : பக்.194)*

இவ்வகையில் ரூசோ, பதின்மூன்றாம் போப்பாண்டவர், மார்க்ஸ்-எங்கெல்ஸ் ஆகியோர் பேசிய வர்க்க அமைப்பு, அதில் உழைக்கும் வர்க்கத்தின் நிலை, குறிப்பாக தொழிலாளர்களுக்கான இடம் ஆகியவை குறித்தப் புரிதலோடு அம்பேத்கர் செயல்பட்டிருக்கிறார் என்றே கருத முடிகிறது. இந்தப் பின்புலத்தில்தான், தொழிற்சங்க மாநாடுகளை நடத்துவதிலும் அக்கறையுடன் செயல்பட்ட, சனநாயகத்தின் மீது நம்பிக்கை கொண்ட மனிதர் அம்பேத்கர் என்று புரிந்துகொள்ள முடிகிறது.

தொழிலாளர் மாநாடுகள் குறித்து அம்பேத்கர் முன்வைக்கும் செய்திகள் பின்வருமாறு அமைகின்றன:

"இதுதான் இந்த மாநாட்டின் முதன்மையான நோக்கமும் குறிக்கோளும் ஆகும். இம்மாநாட்டின் நமது நிகழ்ச்சி நிரல் மிகச் சுருக்கமாக இருப்பதாக நீங்கள் கருதலாம். பேச வேண்டிய உட்பொருள் அதில் நிறைய இல்லையென்றும் நினைக்கலாம். இத்தகைய ஒரு மாநாட்டைப் பற்றிய திட்டத்தையும், அதனுடைய அமைப்பு எவ்வாறு இருக்க வேண்டும் என்பதைப் பற்றியும் நாம் உடன்படுகிறோமா? இந்த அடிப்படைச் சிக்கல் தொடர்பாக ஒரு முடிவு எடுக்க வேண்டும். அதுவரை நாம் இப்போது முன்வைத்துள்ள நிகழ்ச்சி நிரலைவிட வேறு விரிவான எதையும் உங்கள் முன் நாங்கள் வைத்திருக்க முடியாது. நிலைமை இதுதான். எனவே, நான் இப்போது வேண்டுவது கீழ் உள்ளவற்றைப் பற்றி முடிவு எடுக்கும்படி உங்களிடம் கேட்டுக் கொள்வதுதான்:

1. தொழிலாளர் மாநாட்டை, குறைந்தது ஆண்டிற்கு ஒரு முறை கூடும் நிரந்தர அமைப்பாக உருவாக்குதல்.

2. மாநாட்டில் பரிந்துரை நிலைக் குழுவை அமைத்தல். எப்போதெல்லாம் அரசாங்கம் அழைக்கிறதோ அப்போதெல்லாம், இந்தப் பரிந்துரைக்குழு அதன்முன் வைக்கப்படும்

பொருண்மைகள் குறித்து அரசுக்குப் பரிந்துரை வழங்குதல்.

3. இந்த அமைப்புகளை நிறுவுவதற்கான வழிமுறைகளைப் பொதுவான முறையில் வகுத்தளித்தல்.

இந்த அமைப்புகளை நிறுவுதல் குறித்து, இம்மாதிரியான முத்தரப்பு மாநாட்டிற்கு மிகவும் பொருத்தமானதென்று நாங்கள் கருதுகிற திட்டத்தை உங்கள்முன் வைக்க விரும்புகிறோம். இரு அமைப்புகளை நிறுவ வேண்டுமென்று நாங்கள் முன்மொழிகிறோம்:

1. ஒரு தொழிலாளர் பொது மாநாடு

2. ஒரு பரிந்துரை நிலைக் குழு

பொது (Plenary) மாநாடு, மத்திய அரசாங்கம், மாகாண அரசாங்கங்கள், சமஸ்தான அரசாங்கங்கள், முதலாளிகள், தொழிலாளர்கள் ஆகியோரின் சார்பாளர்களைக் கொண்டதாக இருக்கும்.'' (தொ.49: பக்.45-46)

இந்த மாநாடுகளின் மூலமாக பரிந்துரை நிலைக் குழுவில், இந்திய அரசாங்கத்தின் சார்பாளர்கள், சமஸ்தானங்களின் சார்பாளர்கள், முதலாளிகளின் சார்பாளர்கள், தொழிலாளர்களின் சார்பாளர்கள் ஆகியோர் இடம்பெற வேண்டும் என்றும் மத்திய அரசாங்கத்தின் தொழிலாளர் நலத்துறை உறுப்பின் அதன் தலைவராக இருப்பார் என்றும் அம்பேத்கர் பதிவு செய்கிறார் (தொ.49 : பக்.47) தொழிலாளர் பொது மாநாட்டின் முதல் கூட்டத்தொடர் 1943இல் நடைபெற்றது. அதில் அம்பேத்கர் கலந்துகொண்டு உரையாற்றினார். அந்த உரையில் பின்கண்டவாறு பேசினார்:

''நீண்ட காலமாகவே பின்வரும் கருத்து நிலவி வந்தது: அரசாங்கம், தொழிலாளர்கள், தொழிலதிபர்கள் முதலிய முத்தரப்பினருமே ஒருவர் மீது ஒருவர் பொறுப்புணர்வை வளர்த்துக் கொள்ள வேண்டும். ஒருவர் மற்றவர்களின் கருத்துகளுக்கு உரிய மதிப்பு அளிக்க வேண்டும். ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்கும் மனநிலையோடு செயலாற்ற வேண்டும். இவ்வாறு செய்யவில்லையென்றால் தொழில்துறை தொடர்பான சிக்கல்களுக்கும் தொழிலாளர் நலன் தொடர்பான சிக்கல்களுக்கும் தீர்வுகாண முடியாது என்ற கருத்து மேலோங்கி வந்தது. ஆனால், இந்த முத்தரப்பினருமே ஒன்றுகூடி மனம்விட்டுப் பேசினாலொழிய இத்தகையப் பொறுப்புணர்வும் ஒருவருக்கொருவர் மதிப்புணர்வும் வளர்ந்தோங்குவதற்கு அதிக வாய்ப்பு இல்லை. எனவே, இந்த நோக்கத்தோடு இவர்களை ஒன்றுகூடச் செய்வதும், அவர்கள் தத்தமது சிக்கல்களை முன்வைத்து உரையாடச் செய்வதும் அவசியம் என்பது உணரப்பட்டது.

இத்தகைய ஒரு முத்தரப்பு அமைப்பை உருவாக்கும் பரிந்துரை நீண்ட காலமாகவே இருந்து வந்தபோதிலும், தொழிலாளர்களின் மன உறுதியையும் முனைப்பையும் விடாமுயற்சியையும் வளர்த்து வலுப்படுத்துவதைப் போர் அவசர அவசியமாக்கி இருக்கவில்லையென்றால், இந்தப் பரிந்துரை இவ்வளவு விரைவாக வடிவம் பெற்றிருக்குமா என்பது ஐயமே. முத்தரப்பு அமைப்பை உருவாக்கும் பணியைப் போர் மற்றொரு வகையிலும் விரைவுபடுத்திற்று..'' (தொ.49 : பக்.176-177)

அம்பேத்கரின் தொழிலாளர்களுக்கான முத்தரப்பு மாநாடுகள் நிகழ்ந்த முறைகளை அறிய முடிகிறது. இந்த மாநாடுகளில், தொழிலாளர் வேலைநீக்கம், சமுதாயப் பாதுகாப்பு, குறைந்த அளவு ஊதியம், முத்தரப்பு அமைப்பை உருவாக்குதல், சேமநல நிதிக்கான முன்மாதிரி விதிகளை உருவாக்குதல் ஆகிய பலவற்றை அம்பேத்கர் நிகழ்ச்சி நிரலில் முன்வைத்தார். முதலாளித்துவத் தொழில்துறை அமைப்பும் நாடாளுமன்ற சனநாயகமும் நிலவும் நாட்டில் முதன்மையாகச் செயல்படும் முரண்பாடுகளை விரிவாகப் பேசுகிறார். இந்தப் பின்புலத்தில்தான் தொழிலாளர் குறித்த சிக்கல்களைப் புரிந்துகொள்ள வேண்டும் என்று அறிவுறுத்துகிறார். அம்பேத்கர் முன்வைக்கும் முரண்பாடுகள் பின்கண்டவாறு அமைகின்றன:

"முதலாளியத் தொழில்துறை அமைப்பிலும், நாடாளுமன்ற சனநாயகம் எனப்படும் அரசமைப்பிலும் வாழ்ந்து வருபவர்கள் தமது அமைப்புகள் இரண்டு முரண்பாடுகளைக் கொண்டுள்ளன என்பதை ஏற்க வேண்டும். மலைமலையாகக் குவிந்துள்ள செல்வத்துக்கும் பிணந்தின்னிக் கழுகுகளைப் போல் கொத்தியெடுக்கும் கோர வறுமைக்கும் இடையே உள்ள படுபாதாளம் முதல்முரண்பாடாகும். அதிலும், இந்த முரண்பாடு எளிய வடிவில் இல்லை. இது மிகவும் உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது. இதன் கேடான விளைவாக இன்று நாம் என்ன பார்க்கிறோம்? ஒரு சொட்டு வியர்வைகூடச் சிந்தி உழைக்காமல் உல்லாசபுரியில் வாழ்பவர்கள் கோடீஸ்வரக் கோமான்களாக இருப்பதையும், அதேநேரம் நெற்றி வியர்வை நிலத்தை நனைக்க மாடாக உழைத்து ஓடாகத் தேய்பவர்கள் கொடிதினும் கொடிதான வறுமையில் வாடுவதையும் காண்கிறோம்.

இனி அடுத்து, இரண்டாவது முரண்பாடு அரசியல் அமைப்புக்கும் பொருளாதார அமைப்புக்கும் இடையிலானது. அது என்ன? அரசியலில் சமத்துவம், பொருளாதாரத்திலோ சமத்துவமின்மை. ஒருவருக்கு ஒரு வாக்கு, ஒரு வாக்குக்கு ஒரே மதிப்பு - இது நமது அரசியல் கோட்பாடு. ஆனால், பொருளாதாரத்தில் நமது



கோட்பாடு அரசியல் கோட்பாட்டை மறுதலிக்கிறது. இந்த வேறுபாடுகளைத் தீர்த்து வைப்பது தொடர்பாக மாற்றுக் கருத்துகள் இருக்கலாம். ஆனால், இதுபோன்ற முரண்பாடுகள் இருந்து வருகின்றன என்பதில் கருத்து வேறுபாட்டுக்கு எள்ளளவும் இடமில்லை.

இந்த முரண்பாடுகள் கண்ணை உறுத்தும்படியாக, முனைப்பானவையாக இருந்தபோதிலும், கடந்த காலத்தில் பெரும்பான்மையான மக்கள் இந்த அவலத்தைக் கவனிக்காமல் விட்டுவிட்டனர். ஆனால், இன்று நிலைமை அடியோடு மாறிவிட்டது. மிகவும் கூரறிவு படைத்தவர்கள் கூட முன்னர் ஏனோ தானோவென்று நோக்கிய இந்த முரண்பாடுகள் இப்போது மிகவும் மந்தமானவர்களுக்குக் கூட வெட்ட வெளிச்சமாகிவிட்டன.

இரண்டாவதாக நான் கூறவிரும்பும் கருத்து இதுதான். சமூக வாழ்க்கைக்கான அடித்தளமானது சமூகத் தகுதிநிலையிலிருந்து சமூக ஒப்பந்தத்துக்கு மாறியுள்ளது. அதிலிருந்தே வாழ்க்கையின் பாதுகாப்பு ஒரு சமூகச் சிக்கலாகிவிட்டது. மனித வாழ்வின் உய்வில், மேம்பாட்டில் நம்பிக்கை கொண்ட அனைவரது சிந்தனைகளுமே இந்தச் சிக்கலுக்குத் தீர்வு காணுவதில் ஈடுபட்டு வருகின்றன. மனிதனுக்குள்ள உரிமைகளையும் அவனுக்குள்ள பல்வேறு சுதந்திரங்களையும் வரையறுத்துக் கூறுவதற்கு மிகப்பெரும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இவை யாவும் அவனுடைய பிறப்புரிமையாகக் கருதப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

மிக மிக நல்லது. இவற்றைப் பற்றி அனைத்தையும் அறியவரும்போது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. உள்ளம் உவகை அடைகிறது. ஆனால், இங்கு முக்கியமானதைக் குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன். பசிபிக் உறவுகள் மாநாட்டின் பொருளாதாரக் குழுவின் அறிக்கையில் சுட்டிக்காட்டியிருப்பது போல், இந்த உரிமைகள் அனைத்தும் எளிய மனிதனுக்கு அமைதியான வாழ்க்கையாக, குடியிருக்கும் இல்லமாக, உடுத்தும் உடையாக, கல்வி வசதியாக உருவெடுக்க வேண்டும். அனைத்துக்கும் மேலாக, உலகின் அகல்பெரும் நெடுஞ்சாலைகளில் தடுமாறி விழுந்துவிடுவோம் என்ற அச்சமின்றி, தலை உயர்த்தி, நெஞ்சு நிமிர்த்தி, கம்பீரமாக நடைபோடும் உரிமை அவனுக்கு இருக்க வேண்டும். இவை அனைத்தும் இல்லையென்றால் சமூகப் பாதுகாப்பு என்பது முற்றிலும் பொருளற்றதாக, வெறும் ஏட்டுச் சுரைக்காயாகவே இருக்கும். *(தொ.49:பக்.183-184-185)*

இவ்வகையில் தொழிலாளர்களுக்கான அரசாங்கம், தங்கள் கட்டுப்பாட்டில் அரசாங்கத்தை தொழிலாளர்கள் வைத்துக் கொள்வது ஆகியவை குறித்தும் அம்பேத்கர் பேசுகிறார். தொழிலாளர்கள் முத்தரப்பு மாநாட்டை தான் உருவாக்கியது குறித்துப் பதிவு செய்கிறார்:

“முத்தரப்புத் தொழிலாளர் மாநாட்டை உருவாக்கியதில் எனக்கும் பெரும்பங்குண்டு என்பதைப் பெருமிதத்தோடு கூறிக்கொள்கிறேன். நாங்கள் அதிகம் எதுவும் செய்யாவிட்டாலும் குறைந்தது ஒரு நல்ல செயலைச் செய்திருக்கிறோம். முதலாளிகளின் சார்பாளர்களைச் சந்தித்து மிகுந்த முதன்மை வாய்ந்த சிக்கல்களைப் பற்றி உரையாடும்படி தொழிலாளர்களின் சார்பாளர்களைக் கட்டாயப்படுத்தவில்லை என்றாலும் தூண்டி ஊக்குவித்திருக்கிறோம்.” *(தொ.50 : பக்.35)*

பின்னர் 1944இல் முத்தரப்புத் தொழிலாளர் பொது மாநாட்டை உருவாக்கி அதில் உரையாற்றினார். தொழிலாளர் மாநாட்டுக்கு தனித் தலைமையகம் அமைக்க வேண்டும் என்னும் பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்புக் கோட்பாட்டை நம் நாட்டிலும் நடைமுறைப்படுத்த அம்பேத்கர் விரும்பினார். இதன் மூலம் உலகம் தழுவிய அளவில் செயல்பட்ட தொழிலாளர்கள் தொடர்பான அமைப்புகள் குறித்து விரிவாக அறிந்தவராகவே அம்பேத்கர் செயல்பட்டார். இவ்வகையான அணுகுமுறை சார்ந்து, “தொழில் தகராறுகளுக்குத் தீர்வு காணுதல், தொழிலாளர் நலன், தொழில்துறைத் தொழிலாளர்களுக்கு உணவு வழங்கீடு, அரசாங்க ஒப்பந்தங்களில் நியாயமான ஊதியங்களை வரையறுத்தல், தொழில் நிலையங்களில் தொழிலாளர் அலுவலர்களை நியமித்தல், வேலைவாய்ப்பு அலுவலகங்கள், தொழில்துறைப் புள்ளிவிவரங்கள், வேலையில்லாத் திண்டாட்டம், தொழிலாளர் சார்பாண்மை, சமூகப் பாதுகாப்பு, அகவிலைப்படி, தொழில்நிலையச் சிற்றுண்டிச்

சாலைகள்.'' *(தொ.50 : பக்.105)* ஆகியவற்றை விரிவடைந்த முத்தரப்புத் தொழிலாளர் மாநாட்டில் அம்பேத்கர் பேசும்போது வெளிப்படுத்தியதை அறிகிறோம்.

பெண் தொழிலாளர்களுக்கான நலத் திட்டங்கள்

அம்பேத்கர் இந்தியாவில் நிலவிய சமூகப் பொருளாதாரப் பின்புலத்தில், தொழிலாளர்களுக்கான அமைப்புகள், அவற்றின் செயல்களான மாநாடு போன்றவற்றை நடத்துவது தொடர்பாக அவரது செயல்களை மேலே பதிவு செய்தோம். பல்வேறு துறை சார்ந்த தொழிலாளர்களின் நலன் குறித்து அவர் பேசினார். அதில் சுரங்கத்தில் வேலை செய்யும் பெண் தொழிலாளர்கள் குறித்துச் செய்துள்ள பதிவு பெரிதும் கவனத்தில் கொள்ளத்தக்கது.

சுரங்கங்களில் பெண்கள் பணியாற்றுவது தடைசெய்யப்பட்டிருந்தது. போர்ச் சூழலில் ஆள் பற்றாக்குறை ஏற்பட்டதால், இந்தத் தடையை நீக்குவதாக பிரித்தானிய இந்திய அரசு முடிவு செய்தது. இந்தச் சிக்கல் குறித்து அவையில் உரையாடல் வந்தபோது, அம்பேத்கரின் பதிவு பின்வருமாறு அமைகிறது:

“இந்த அவை ஆய்வு செய்ய வேண்டிய மேலும் இரண்டு சிக்கல்களை இங்கு குறிப்பிட விரும்புகிறேன், முதலாவதாக, இந்தச் சிக்கல் அத்தனை முக்கியத்துவம் வாய்ந்ததல்ல என்ற நோக்கோடு அவசரப்பட்டுக் கண்மூடித்தனமாக இப்படியொரு நடவடிக்கையை அரசாங்கம் எடுக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மிகுந்த முன்னெச்சரிக்கையோடுதான் அரசாங்கம் செயல்பட்டுள்ளது என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தத் தடை நீக்கம் முதலில் மத்திய மாகாணத்தில்தான் நடைமுறைப்படுத்தப்பட்டது; நிலக்கரிப் பகுதிகள் அனைத்திலும் செயல்படுத்தப்படவில்லை. இந்த அறிவிப்பை வங்காளத்துக்கும் பீகாருக்கும் விரிவுபடுத்துவது அவசியம் என்று நவம்பர் மாதத்தில்தான் அரசாங்கம் கருதிற்று. பிறகு டிசம்பர் அறிவிப்பில் ஒரிசாவுக்கு விரிவாக்கப்பட்டது.

ஆண்களுக்கு அளிக்கப்படும் அதே ஊதியம் பெண்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்பதில் நாங்கள் கவனமாக இருந்தோம். இது மிக முக்கியமானதாகும். பாலினப் பாகுபாடின்றி சமவேலைக்குச் சமஊதியம் என்னும் கோட்பாடு இந்தத் தொழிலில்தான் முதல் முறையாக நிலைநாட்டப்பட்டது எனக் கருதுகிறேன்.

ஐந்தரை அடிக்குக் குறைவான சுரங்கப்பாதையில் பெண்கள் வேலை செய்யக்கூடாது என்பதிலும் நாங்கள் உறுதியாக இருந்தோம்.'' *(தொ.50 : பக்.18)*

அம்பேத்கர் அரசப் பிரதிநிதி அவையில் தொழிலாளருக்கான உறுப்பினர் (அமைச்சர்) பதவியை வகித்த காலங்களில், தொழிலாளர் நலன் கருதி செயல்பட்டதை அவரது உரைகள் வழி அறிய முடிகிறது. தொழிலாளர் நலன், என்பது அவர்களுக்கான அமைப்பு, அதன் கூடுகைகளான மாநாடுகள் போன்றவை, குறிப்பிட்ட துறை சார்ந்த தொழிலாளர்களுக்கு ஏற்படும் சிக்கல்கள் ஆகியவற்றில் கவனம் செலுத்தி அம்பேத்கர் செயல்கள் அமைந்திருப்பதைக் காண்கிறோம்.

பெண் தொழிலாளர்களுக்கான மகப்பேறு நல உதவித் திட்டம், பட்டியல் பிரிவு தொழிலாளர்களுக்குப் பிரதிநிதித்துவம், முகமதியர்களுக்குத் தனியான வேலைத்திட்டம், வேலைவாய்ப்புத் திட்டம், மறுவாழ்வுத் திட்டம், வீட்டுவசதித் திட்டம், விலை உயர்வுக்கு ஏற்ப ஊதியத்தோடு இணைத்து மிகையைக் கொடுத்தல், வேலைநேரத்தைக் கட்டுப்படுத்தல், அச்சக ஊழியர்களின் வேலை நேரம், தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு தனிக்கவனம் வழங்கல் ஆகிய பல்வேறு திட்டங்கள் குறித்தும் அம்பேத்கர் பேசியுள்ளார். விரிவு கருதி அவை குறித்த விவரணங்களைப் பதிவு செய்யவில்லை.

மேற்குறித்த அடிப்படைகளில், தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி, தொழிலாளர்கள் நலனுக்காக அம்பேத்கர் உழைத்த வரலாற்றை அறிய முடிகிறது. ஒடுக்கப்பட்ட, தீண்டாமையை அனுபவிக்கும் மக்களுக்கு மட்டுமே அம்பேத்கர் இயக்கங்களை நடத்தினார் என்பது அடிப்படையற்றது. அவரது தொழிலாளர் தொடர்புடைய செயல்கள், ஒரு சமூக சனநாயக மனிதராக அம்பேத்கர் செயல்பட்டதை உறுதிப்படுத்துகின்றன.

அம்பேத்கர் கொண்டுவந்த சட்ட முன்வரைவுகள்

அம்பேத்கர் பங்கேற்றிருந்த அரசப் பிரதிநிதி அவை என்பது அடிப்படையில் பல்வேறு சட்ட முன்வரைவுகள், சட்டங்கள் ஆகியவற்றை உருவாக்குவதில் முதன்மையான பங்கு வகித்த அரங்கம் ஆகும். அனைத்துச் சட்டங்களும் அவையின் ஒப்புதல் பெற்றே நடைமுறைப்படுத்தப்படும். இந்தப் பின்புலத்தில் அம்பேத்கர் தமது ஆட்சிக் காலத்தில் தொழிலாளர்கள் தொடர்பாக உருவாக்கிய சட்டங்கள் தொடர்பான விவரணங்களை உரையாடலுக்குட்படுத்துவது இங்கு நோக்கமாகும்.

அம்பேத்கர், தொழிலாளர் உறுப்பினராக இருந்த காலத்தில் உரையாடலுக்குட்படுத்தப்பட்ட சட்ட முன்வரைவுகள் பலவற்றைக் கொண்டு வருவதன் தொடக்கமாக, 1942 ஆகஸ்டு 7இல் புதுடெல்லியில் நடைபெற்ற தொழிலாளர்கள் பொது மாநாட்டில் தொழிலாளர்களுக்கான சட்டங்கள் குறித்துப் பின்வருமாறு பதிவு செய்கிறார்.

“இந்த மாநாட்டின் நோக்கங்களையும் குறிக்கோள்களையும் பற்றி ஓரிரு சொற்கள் இப்போது சொல்லப் போகிறேன். முந்திய மாநாடுகள் குறித்து அறிந்திருக்கும் உங்களில் சிலர் அந்த மாநாடுகள் கூட்டப்பட்டதற்கான முதன்மைக் காரணங்களில் ஒன்றை அறிந்திருப்பீர்கள். அதாவது, மாகாணங்களுக்குத் தனித்தனியான சட்டமியற்றும் அதிகாரம் கிடைத்ததன் விளைவாக, தொழிலாளர் சட்டங்களில் ஏற்படக்கூடிய வேறுபாடுகளும் குழப்பங்களும் நாட்டிற்குப் பெரிய ஆபத்தை ஏற்படுத்தக்கூடும். அத்தகைய ஆபத்தைத் தவிர்க்கும் வலுவான விழைவுதான் அந்தக் காரணம்.

இந்திய அரசாங்கம் ஒன்றிணைந்த அரசாங்கமாக இருக்கும்வரை தொழிலாளர் சட்டங்கள் ஒருமித்தத் தன்மை கொண்டவையாக இருந்தன. அப்படிச் செய்வதில் சிக்கல் ஏதும் இருக்கவில்லை. ஆனால், கூட்டாட்சி அரசமைப்புச் சட்டத்தை ஏற்படுத்திய இந்திய அரசாங்கச் சட்டம் 1935, தொழிலாளர் தொடர்பான சட்டங்களை மத்திய அரசாங்கமும் மாகாண அரசாங்கங்களும் இயற்றலாம் என்று வரையறுத்தது. இது மிக மோசமான நிலைமையை ஏற்படுத்தியது. மத்தியச் சட்டம் இல்லையென்றால், ஒவ்வொரு மாகாணமும் தனக்கு விருப்பமான சட்டத்தை இயற்றலாம். அது அடுத்துள்ள மாகாணங்களின் சட்டங்களிலிருந்து மாறுபடலாம் என்று அஞ்சப்பட்டது. பொதுவான, தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நோக்கத்திற்குப் பதிலாக மாகாண நலன்கள் ஆதிக்கம் செலுத்துவதை இது ஊக்குவிக்கும் என்றும் கருதப்பட்டது.(தொ.49: பக்.42)

இவ்வகையில் தொழிலாளர்களுக்கான சட்டத்தை உருவாக்குவதில் உள்ள அடிப்படையான சிக்கல்களை அம்பேத்கர் தெளிவுபடுத்துகிறார். இதன் அடிப்படையில், பல்வேறு சட்ட முன்வரைவுகளை அவையில் விவாதத்திற்குட்படுத்துகிறார். முன்னரே இருக்கும் சட்டங்கள் அவையில் முன்வைக்கப்படுகின்றன. அவற்றில் செய்ய வேண்டிய மாற்றங்களுக்கான உரையாடல் நிகழ்த்துவது சட்ட முன்வரைவாக அமைகிறது. இந்தப் பின்புலத்தில் அவையில் கலந்துரையாடப்பட்ட சட்ட முன்வரைவுகள் பின்வருமாறு அமைகின்றன.

- போர்க் காலத்தில் தாள் தட்டுப்பாடு உருவானது. இதனால், தாள்கள் பயன்படுத்துவதை ஒழுங்குபடுத்துவதற்காக தாள் கட்டுப்பாட்டு ஆணை கொண்டு வரப்பட்டது.
- தேயிலைத் தோட்டங்கள் தொடர்பான சட்ட முன்வரைவு கொண்டு வரப்பட்டது. அதில் காணப்படும் வாசகங்கள் பின்வருமாறு அமைகின்றன.

“தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் தொடர்பாக ஐந்து பரிந்துரைகளைப் பேரரசு ஆணையம் கொடுத்தது.

- முதலாவது பரிந்துரை, அசாம் தொழிலாளர் குடிப்பெயர்வுச் சட்டம் நிறைவேற்றப்பட வேண்டும்.
- இரண்டாவது பரிந்துரை, அங்கு வேலை செய்யும் தொழிலாளர்களின் ஊதியத்தை வரையறுக்க ஊதியக் குழு அமைக்கப்பட வேண்டும்.
- மூன்றாவது பரிந்துரை, குடிநீர், சுகாதாரம், கழிவுநீர் வடிகால் வசதி, மருத்துவ வசதிகள், குடியிருப்பு முதலியவை தொடர்பான விதிமுறைகளை வகுத்தளிக்கும் அதிகாரம் கொண்ட தொழிலாளர் நலனுக்கான ஒரு சுகாதார அமைப்பு வாய்ப்புள்ள வட்டாரங்களில் அமைக்கப்பட வேண்டும்.
- நான்காவது பரிந்துரை, தொழிலாளர்களுக்குக் காலம் தவறாமல் ஊதியம் கொடுப்பது, கொடுக்கப்பட்ட முன்பணத்தைப் பிடிப்பது முதலியவை பற்றிய விதிமுறைகள் தோட்டத் தொழிலாளர்களுக்கும் வகுக்கப்பட வேண்டும்.
- கடைசிப் பரிந்துரை, தோட்டங்களுக்குப் பொதுமக்கள் சென்றுவர வழி செய்யும் விதிமுறைகள் வகுக்கப்பட வேண்டும்.” (தொ.49 : பக்.121)
- பம்பாயில் கொதிகலன் தொழிற்சாலையில் நடந்த விபத்தில் பல உயிரிழப்புகள் ஏற்பட்டன. அதற்கான காரணங்களை அறிந்து இந்தியக் கொதிகலன் (திருத்த) சட்ட முன்வரைவு கொண்டு வரப்பட்டது.
- மோட்டார் வாகனங்களை ஓட்டும் ஓட்டுநர்களின் பணிப் பாதுகாப்பு தொடர்பாக முன் வரைவுச் சட்டம் கொண்டு வரப்பட்டது. இதில் கொண்டு வந்த திருத்தங்கள் பின்காணும் வகையில் அமைகிறது.

“இந்தத் திருத்தத்தின் நோக்கங்கள் மூன்று தன்மைகளைக் கொண்டவை.

1. அரசாங்கத்தால் ஓர் ஓட்டுநரின் சேவை முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதும், அவரை மீண்டும் வேலைக்கு அமர்த்தும் கட்டாயக் கடமை முதலாளிக்கு இருப்பதை இந்தத் திருத்தம் அறிவிக்கிறது.
2. முதலாளியின் இந்தப் பொறுப்பு தொடர்பாக எழக்கூடிய சிக்கல்களுக்குத் தீர்வு காணுவதற்கான வழிமுறைகளை வகுக்கிறது. மாகாண அரசாங்கத்தின் சார்பில் நியமிக்கப்படும் அமைப்பு பற்றி இந்தச் சட்ட முன்வரைவு குறிப்பிடுகிறது.
3. அந்த அமைப்பு பிறப்பிக்கும் ஆணையை நிறைவேற்றாததற்காகத் தண்டம் விதிப்பது பற்றியும் இதில் கூறப்பட்டிருக்கிறது.

ஒரு மோட்டார் வாகன ஓட்டுநருக்கு அளிக்கப்படும் வேலைவாய்ப்பு உரிமையின் வரம்புகளைப் பற்றி குறிப்பிட்டிருக்கின்ற சட்ட முன்வரைவின் பிற பிரிவுகள் இரு தன்மைகள் வாய்ந்தவை. முதலாவதாக, மீண்டும் வேலைக்குச் சேர்க்கப்படும் உரிமையைக் கோருவதற்கு, அவர் ஆறுமாத காலத்திற்குத் தொடர்ந்து பணியில் ஈடுபட்டிருக்க வேண்டும். இரண்டாவதாக, நாட்டுக்கான பணியிலிருந்து விடுபட்ட இரண்டு மாதங்களுக்குள் அவர் மீண்டும் வேலைக்கு அமர்த்தப்படுவதற்கு விண்ணப்பம் செய்திருக்க வேண்டும். இந்த வரையறைகள் பின்பற்றப்பட்டால், நாட்டுப் பணிக்காகக் கோரப்பட்ட மற்றவர்களின் நிலையில் இவரையும் இந்தச் சட்ட முன்வரைவு வைக்கிறது..'' *(தொ.49 : பக்.120)*

- சுரங்க மகப்பேறு நல உதவி (திருத்த) சட்ட முன்வரைவு மூன்று முறைகளுக்கு மேல் அவையில் கலந்துரையாடப்பட்டிருக்கிறது. மகப்பேறு கால விடுமுறை, பெண்களுக்குக் கிடைக்க வேண்டிய ஊதியம் ஆகியவை குறித்து இந்த முன்வரைவு பேசுவதைக் காண்கிறோம். அதன் பகுதி வருமாறு.

''சுரங்க மகப்பேறு நல உதவிச் சட்டம், 1941 என்பதைத் திருத்துவதற்கான சட்ட முன்வரைவை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று விழைகிறேன்.''

இந்தத் திருத்தம் ஏன் அவசியமாகியுள்ளது என்பதை அவைக்கு நான் விளக்கிக் கூறுவது விரும்பத்தக்கது. சுரங்க மகப்பேறு நல உதவிச் சட்டத்தின்கீழ், சுரங்கத்தில் வேலை செய்யும் ஒரு பெண் 8 வார காலத்திற்கு நாள் ஒன்றுக்கு 8 அணா வீதம் மகப்பேறு நல உதவிபெற தகுதிபெறுகிறார். இந்த 8 வார கால அளவு, ஒரு பகுதி மகப்பேற்றுக்கு முந்தியும், மற்ற பகுதி மகப்பேற்றுக்குப் பின்பும் என ஒவ்வொன்றும் 4 வாரங்கள் கொண்ட இரு பகுதிகளாகப் பிரிக்கப்படுகிறது. மகப்பேற்றுக்கு முந்திய 4 வாரங்கள் பகுதி விருப்ப ஓய்வுக்கான கால அளவாகும். அந்தக் காலத்தில் ஒரு பெண் வேலை செய்து முழு ஊதியத்தையும் பெறலாம். அல்லது வேலைக்கு வராமல் இருந்து பேறுகால நல உதவியைப் பெறலாம்.'' *(தொ.49 : பக்.151)*

- மகப்பேறு நலச்சட்டத் திருத்த சட்ட முன்வரைவுகள் 1945, மார்ச்சிலும் 1945 ஏப்ரலிலும் கலந்துரையாடப்பட்டதை அறிகிறோம்.
- தொழிற்சாலைகள் (திருத்த) சட்ட முன்வரைவுகளும் கொண்டு வரப்பட்டன. 1934ஆம் ஆண்டுத் தொழிற்சாலைகள் சட்டத்தைத் திருத்தும் சட்ட முன்வரைவு கொண்டு வரப்பட்டது. இந்தச் சட்டத்தின் இரண்டாவது திருத்தச் சட்ட முன்வரைவு 1945 மார்ச்சில் கொண்டு வரப்பட்டது.
- நிலக்கரிச் சுரங்கங்கள் பாதுகாப்பு (பராமரிப்பு) திருத்தச் சட்ட முன்வரைவும் கொண்டு வரப்பட்டது. 1939இல் கொண்டு வரப்பட்ட சட்டத்தின் திருத்த முன்வரைவு இதுவாகும்.
- ஊதிய வழங்கீடு (திருத்த) சட்ட முன்வரைவும் கொண்டு வரப்பட்டது. இது 1936ஆம் ஆண்டு சட்டத்தைத் திருத்தும் நோக்கில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

அண்ணல் அம்பேத்கர் அவர்கள், அவர் பதவியில் இருந்த காலத்தில், முன்னரே உருவாக்கப்பட்ட தொழிலாளர்கள், தொழிற்சாலைகள், தொழிற்கூடங்கள் இன்ன பிற சட்ட விதிகளை, கால மாற்றத்திற்கு ஏற்ப மாற்றி புதிய சட்ட வரைவுகளைக் கொண்டு வந்தார். இதன் மூலம் தொழிலாளர்களுக்குக் கிடைத்த பயன்கள் சிறப்பானவை. இதற்குமுன் என்ன இருந்தது? அம்பேத்கர் என்ன மாற்றங்களைச் செய்தார்? என்ற விவரணப் பட்டியல் ஒன்றை உருவாக்குவதன் மூலம், அம்பேத்கர் தொழிலாளர்களுக்குச் செய்த அரும்பணிகளைத் தெரிந்துகொள்ள முடியும்.

இரண்டாம் உலகப் போரும், தொழிலாளர்களும்.

அம்பேத்கர் அரசப் பிரதிநிதி அவையில் தொழிலாளர்களுக்கான உறுப்பினராகச் செயல்பட்ட காலம் என்பது இரண்டாம் உலகப் போர் *(1939-1945)* நிகழ்ந்த காலம் ஆகும். போருக்கும் தொழிலாளர்களுக்கும் நேரடித் தொடர்பு இருந்தது. அவ்வகையான தொடர்புகள் குறித்த உரையாடலை அம்பேத்கர் வெகுவாக முன்னெடுத்துள்ளார்.

இரண்டாம் உலகப் போரை "வளங்களுக்கான போர்'' என்று அம்பேத்கர் வரையறை செய்கிறார். போரைச் சிறப்பாக முன்னெடுத்துச் செயல்படுத்த வேண்டுமெனில், அப்போரில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு ஆயுதங்கள், உணவு, எரிபொருள், மூலப்பொருள் ஆகியவை அடிப்படைத் தேவையாக அமைகின்றன. இவற்றை உற்பத்தி செய்வதில் தொழிலாளர்களே முதன்மையானவர்கள். இந்த வகையில் போர்ச்சூழலை வரையறை செய்கிறார் அம்பேத்கர். இது குறித்த அவரது பதிவு பின்வருமாறு அமைகிறது:

"இப்போதைய போர், வழங்கல் தொடர்பான போராகும். வழங்கலின் தேவையை நிறைவேற்றல் என்பது தொழிற்சாலைகளில் அமைதி நிலவுவதைப் பொறுத்துள்ளது. தொழிற்சாலைகளில் அமைதியை ஏற்படுத்துவது இன்று நம் முன் உள்ள ஓர் அவசரமான சிக்கலாகும். தொழிற்சாலைகளில் அமைதி நிலவுவது இரு பொருண்மைகளைப் பொறுத்தது. அப்படிச் சொல்வதில் எந்தத் தவறும் இல்லை.

- முதலாவதாக, தொழில்தகராறுகளை விரைவாகத் தீர்த்து வைப்பதற்கான ஓர் அமைப்பு இருப்பதைப் பொறுத்துள்ளது.

- இரண்டாவதாக, தொழில்துறையில் வேலை செய்பவர்களிடையே பதற்ற நிலையை ஏற்படுத்தக்கூடிய அனைத்து நிலைமைகளையும் நேரம் தவறாது போக்குவதைப் பொறுத்துள்ளது.

தொழிற்சாலைகளில் தொழில் தகராறுகளுக்கு இட்டுச்செல்லாத சிறிய சிக்கல்கள் நிறைய உள்ளன. ஆனால், அவை பதற்றத்தை ஏற்படுத்தக்கூடிய அளவுக்குப் பெரியவை. பதற்றத்தை ஏற்படுத்தக் கூடியவற்றில் பெரும்பான்மையானவை, சமூக நலனைப் பாதிக்கக் கூடியவை. இத்தகைய சிக்கல்களைக் கையாள்வதற்கு நம்மிடம் எந்த ஏற்பாடும் இல்லை. இதுபோன்றவற்றை அமைதியாகவும் மனநிறைவாகவும் தீர்த்து வைப்பதற்கு ஆட்சியாளருக்குப் பரிந்துரை வழங்க ஓர் அமைப்பை உடனடியாக ஏற்படுத்துவது அவசியம். இதுதான் இந்த மாநாட்டைக் கூட்டியதற்கான முதன்மையான காரணம்.” *(தொ.49:பக்.45)*

மேற்குறித்த பின்புலத்தில்தான், தொழிலாளர்களுக்கும் போருக்குமான உறவைப் பற்றிய உரையாடலை அம்பேத்கர் முன்னெடுக்கிறார். இந்தியாவை ஆட்சி புரியும் பிரித்தானியர்கள் நாஜிக்களை அழித்து, போரில் வெற்றி பெறவே இந்தியத் தொழிலாளர்கள் விரும்புவதாக, அதில் இந்திய பம்பாய் வானொலி நிலையத்திலிருந்து 1943இல் ஓர் உரை நிகழ்த்தினார். அவ்வுரையில் தொழிலாளர்களுக்கும் நடந்து கொண்டிருக்கும் இரண்டாம் உலகப் போருக்குமான உறவுகளை விரிவாகப் பதிவு செய்துள்ளார்:

“தொழிலாளர்கள் விரும்புவது என்ன?

போரின்போது, பல நன்மைகளைத் தொழிலாளர்கள் பெற்றுள்ளனர். இன்னும் பலவற்றை அடைவர் என்பது உறுதி. நான் அண்மையில் எடுத்துக்காட்டியது போல, தொழிலாளர்கள் சட்டத்தின் மூலம் பாதுகாப்பைப் பெற்றுள்ளனர். தொழிலாளர் நலன்களுக்காகப் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி முதலாளிகளை மத்திய அரசாங்கம் கட்டாயப்படுத்தியுள்ளது. இதன்மூலம், தொழிலாளர்கள் பாதுகாப்பையும் பராமரித்தலையும் கவனத்தையும் பெற்றுள்ளனர்.

போர் முயற்சியைத் தீவிரப்படுத்த அனைத்தையும் செய்ய தொழிலாளர் உறுதிபூண்டிருப்பதற்கு இத்தகைய உடனடி நன்மைகளைப் பெற்றிருப்பது மட்டுமே காரணமல்ல. இந்த உறுதிக்கு அடிப்படையாக அமைந்துள்ள நல்ல சூழ்நிலைகளைப் பெற்றுக் கொள்வதோடு தொழிலாளர்கள் மனநிறைவடையவில்லை. தொழிலாளர்கள் விரும்புவது, நல்ல வாழ்க்கை நிலைமைகளை. நல்ல வாழ்க்கை நிலைமைகள் என்று தொழிலாளர்கள் கருதுவது என்ன என்பதை விளக்குகிறேன்.

சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்

தொழிலாளர்கள் சுதந்திரத்தை விரும்புகின்றனர். இதில் எதுவும் புதியதாக இல்லாமலிருக்கலாம். சுதந்திரம் பற்றிய தொழிலாளர்களின் கண்ணோட்டத்தில் புதியது என்ன? கட்டுப்பாடு இல்லாதது என்ற எதிர்மறையான கண்ணோட்டமல்ல சுதந்திரம் பற்றிய தொழிலாளர்களின் கண்ணோட்டம். வாக்களிக்கும் உரிமையை மக்களுக்கு வழங்குவதோடு சுதந்திரம் பற்றிய தொழிலாளர்களின் கண்ணோட்டம் முடிவடைந்து விடுவதில்லை. அவர்களது கண்ணோட்டத்தில் சுதந்திரம் என்பது நேர்முறையானது.

மக்களாலான அரசாங்கம் என்ற கருத்தை அது உள்ளடக்கியுள்ளது. மக்களாலான அரசாங்கம் என்பது, தொழிலாளர்களின் கருத்துப்படி, நாடாளுமன்ற சனநாயகம் இல்லை. நாடாளுமன்ற சனநாயகம் என்பது ஓர் அரசு வடிவம். அதில் மக்களின் பங்கு தங்களின் ஆண்டைகளுக்கு வாக்களித்து, ஆட்சி செலுத்துவதை அவர்களிடம் விட்டுவிடுவதாகும். அத்தகைய அரசாங்க அமைப்பு, தொழிலாளர்களின் கருத்தில், மக்களாலான அரசு என்பதைக் கேலிக்கூத்தாக்குவதாகும். மக்களாலான அரசு, பெயரளவில் மட்டுமன்றி நடைமுறையிலும் இருக்க வேண்டும் என்று தொழிலாளர்கள் விரும்புகின்றனர்.

இரண்டாவதாக, தொழிலாளர்களின் கருத்துப்படி சுதந்திரம் என்பதில் சமவாய்ப்புக்கான உரிமையும், ஒவ்வொரு தனிநபரின் தேவைகளுக்கு ஏற்ப மேம்பாட்டுக்கான முழு வாய்ப்புகளையும் வழங்குவதற்கான அரசின் கடமையும் அடங்கும்..” *(தொ.49 : பக்.78-79)*

இவ்வகையில் பிரெஞ்சுப் புரட்சியோடு, பல்வேறு செய்திகளை இணைத்து இந்தியத் தொழிலாளர்கள் போர் பற்றிக் கொண்டுள்ள கண்ணோட்டத்தைப் பேசுகிறார். போரில் ஈடுபட்ட காயம் பட்ட தொழிலாளர்களுக்கான சட்ட முன்வரைவை 1943 இல் கொண்டு வருகிறார். நடைமுறையில் இருக்கும் போர் தொடர்பான சட்டங்கள். தொழிலாளர்களுக்குப் பெரிய அளவில் நலம் புரிவனவாகக் கருத முடியவில்லை. எனவே தொழிலாளர்கள் போரால் பெறும் காயங்களுக்கு உரிய இழப்பீட்டை வழங்கும் சட்டதிருத்த முன்வரைவை பின்காணும் முறையில் கொண்டு வந்தார். அப்பகுதி பின்வருமாறு அமைகிறது.

“போர்க் காயங்கள் குறித்த ஒழுங்குமுறையின் விதிகளை ஆய்வு செய்தபோது, ஒருவர் ஏறத்தாழ 24 ரூபாய் ஊதியம் பெறும் நிலையில், அந்த ஒழுங்குமுறையின்கீழ் வழங்கப்பட்ட தொகைகள் உதவியாக மட்டும் இல்லாமல், இழப்பீடாகவும் அமைந்தன என்று கண்டறியப்பட்டது. எனவே, 24 ரூபாய்க்கு மேல் ஊதியம் பெறும்

தொழிலாளர்களுக்கு அதிகப்படியான தொகை கொடுக்கப்பட வேண்டியது அவசியமாகிறது. இந்த அதிகப்படியான தொகை இழப்பீட்டுத் தொகையாகும். அதாவது, அவசரச் சட்டத்தின்கீழ் பெறும் தொகையுடன் இந்த அதிகப்படித் தொகையையும் சேர்ப்பது இழப்பீட்டுத் தொகையாக ஆகிறது. இந்தச் சட்டம் ஒரு துணைச் சட்டமாகும். இது 1941ஆம் ஆண்டின் போர்க் காயங்கள் ஒழுங்குமுறையின் வழிவகைகளுக்குக் கூடுதலாக அமைந்துள்ளது.'' (தொ.49 : பக்.131)

போர்க்கால நடவடிக்கைகளுக்கும் தொழிலாளர்களுக்கும் உள்ள பல்வேறு தொடர்புகள் குறித்து அம்பேத்கர் விரிவாகப் பேசுகிறார். முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் போர்க் காலங்களில் பல்வேறு தனித்த நிகழ்வுகள் உருப்பெறுவதாகவும் அதில் முதலாளிகளுடன் தொழிலாளிகள் சமரசம் செய்துகொள்ள வேண்டிய அவலம் நிகழ்ந்துவிடுவதாகவும் அம்பேத்கர் பேசுகிறார். போருக்குப் பின் உருவாகும் நெருக்கடிகளுக்கும், தொழிலாளருக்குமான தொடர்புகள் குறித்து, கல்கத்தாவில் நடைபெற்ற பயிற்சித் திட்ட ஆலோசனைக் கூட்டத்தில் அம்பேத்கர் பேசியுள்ளார். தொழில்நுட்ப அறிவியல் வளர்ச்சி, அரசாங்கம், தொழிலாளர்கள் என்ற கண்ணோட்டத்தில் அம்பேத்கர் உரை அமைந்துள்ளது (தொ.50 : பக்.82)

இவ்வகையில், தான் அதிகாரமிக்க ஒரு பதவியில் இருந்தபோது, சமகாலத்தில் நிகழ்ந்த போர் என்பது தொழிலாளர்கள் எனும் சமூகத்தோடு எந்தெந்த வகைகளில் தொடர்புடையதாக இருக்கிறது என்பதைப் புரிந்து அதற்கான நடைமுறைகளைக் கட்டமைத்தார்.

பிரித்தானியர் நடைமுறைப்படுத்திய திட்டங்கள்

காலனிய ஆட்சி மூலம் இந்தியாவில் நிகழ்ந்த பல்வேறு நிகழ்வுகள் முக்கியமானவை. அம்பேத்கரின் பிற்கால வளர்ச்சித் திட்டங்கள் குறித்தப் புரிதலுக்கு, பிரித்தானியர் நடைமுறைப்படுத்திய திட்டங்கள் குறித்து அறிவது தேவை.

- 1889இல், புயல், சூறாவளி ஆகியவற்றிலிருந்து கப்பல்களைப் பாதுகாக்கும் அறிவியல் முறை நடைமுறைப்படுத்தினர். இதனால் இறக்குமதி, ஏற்றுமதி அளவுகள் பெரிய அளவில் கூடின.
- 1876இல் பல்வேறு திசைகளில், தொடர்வண்டி செயல்படுவதற்கான தண்டவாளங்கள் உருவாக்கப்பட்டு, இந்தியா முழுவதும் தொடர்வண்டிகள் ஓடத் தொடங்கின. இருப்புப் பாதை உருவாக்குவதோடு 1873இல் பெரம்பூரில் தொடர்வண்டிப் பெட்டி உற்பத்தித் தொழிற்சாலையையும் உருவாக்கினர்.
- 1895இல் சென்னை நகருக்குள் டிராம் பாதை உருவாக்கப்பட்டது. சென்னையில் முதலிலும் பின்னர் தொடர்ந்து இந்திய நகரங்களில் டிராம் வண்டிகள் ஓடத் தொடங்கின.
- 1931இல் கடற்கரையிலிருந்து தாம்பரம் வரை மின்சாரத் தொடர்வண்டி ஓடத் தொடங்கியது. இது பின்னர் மும்பாய், கல்கத்தா நகரங்களிலும் விரிவுபடுத்தப்பட்டது.
- 1908இல் 'மதராஸ் எலக்ட்ரிக்' கார்ப்பரேஷன் உருவானது. இதனால் மின்சார உற்பத்தி நடைமுறைக்கு வந்தது.
- 1893இல் தொலைபேசி வசதி உருவானது 1855இல் சென்னையை மும்பாய், கல்கத்தாவுடன் இணைக்கும் விரைவுத் தந்தி நடைமுறைக்கு வந்தது.
- 1899 – பெட்ரோல் – எண்ணெய் விநியோக நிறுவனங்கள் உருவாயின.
- 1711இல் சென்னையில் முதல் அச்சகம் உருவானது. பின்னர் இந்தியா முழுதும் அச்சகங்கள் உருவாயின.

மேலே குறித்த அனைத்தும் தொழில்துறை தொடர்புடையவை. இதில் புதிய தொழிலாளர்கள் ஆயிரக்கணக்கில் உருவாயினர். இப்படியான வளர்ச்சிக் காலங்களில்தான் அம்பேத்கரின் வளர்ச்சிப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. அவற்றைப் பின்கண்டவாறு தொகுத்துக் கொள்ளலாம்.

- இந்தியாவில் மண்ணியல் மதிப்பாய்வு நிறுவனம் உருவானது. இதனைச் சிறப்பாக நடைமுறைப்படுத்த அம்பேத்கர் திட்டமிட்டார். மண்ணியல் ஆய்வு நிறுவனங்களின் பணிகளைப் பின்கண்டவாறு அம்பேத்கர் பட்டியலிடுகிறார்:

"1. மேவாரில் உதயப்பூர் சமஸ்தானத்திலுள்ள ஸாவர் ஈயம் மற்றும் துத்தநாகச் சுரங்கங்களை மீண்டும் திறப்பது
2. இராஜபுதனத்தின் மைக்காச் சுரங்கங்களை மேம்படுத்துவது
3. பலுச்சிஸ்தானின் கந்தகப் படிமங்களைப் பயன்படுத்திக் கொள்வது
4. வங்காளத்திலும் மத்திய மாகாணங்களிலும் உலோக வகைகளைத் தரும் தாதுப் பொருட்கள் பற்றி ஆய்வு செய்வது
5. பீகாரிலுள்ள படிவுகள் பற்றி ஆய்வு செய்வது
6. தாதுக்கள், கற்கள், உப்புகள், இவை போன்ற பிற பொருள்களைக் கண்டறிவது.'' (தொ.49 : பக்.70-71)

இவ்வகையில் இந்தியக் கனிம வளங்கள் குறித்த அக்கறை அம்பேத்கரிடம் இருந்ததைக் காண்கிறோம். 1943இல் நடைபெற்ற அவை உரையாடல்களில் ஈயம், கந்தகம், வெள்ளியம், தாமிரம் ஆகியவை குறித்து அறிக்கை தாக்கல் செய்துள்ளது.

இந்தியக் கனிமவளங்கள் குறித்து, அரசாங்கத்தின் கொள்கை என்ன? என்பதையும் விளக்கியுள்ளார். அப்பகுதி வருமாறு:

“இந்திய அரசாங்கத்தின் கனிமவளக் கொள்கையும் அந்தக் கொள்கையைச் செயல்படுத்த அது மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ள நடவடிக்கையும் இரண்டு பகுதிகளைக் கொண்டவை.

முதலாவதாக, அரசாங்கத்தின் கொள்கையைச் செயல்படுத்துவதற்காக இந்திய மண்ணியல் ஆய்வுத் துறையை முன்னிலும் ஆற்றல்மிக்க சாதனமாக மாற்றுவதற்கு அதனை மறுசீரமைக்கத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அது, நிருவாக அடிப்படையில் ஏற்கப்பட்டிருக்கிறது. நாங்கள் அமைக்க எண்ணியிருக்கும் மண்ணியல் ஆய்வின் புதிய கிளைகள் பொறியியல் சார்ந்த மண்ணியல், கனிமவளங்களைத் தொழில் துறைகளுக்குப் பயன்படுத்துதல், மத்திய கனிமவள வளர்ச்சி, புவிசார்இயற்பியல் பணி, எண்ணெய் வள மேம்பாடு போன்றவற்றில் கவனம் செலுத்தும். இவ்வகையில் என்ன செய்யப்படுகிறது என்பதைப் பொதுமக்கள் அறியும் பொருட்டு ஓர் இயற்கை வரலாற்று அருங்காட்சியகத்தையும், தகவல் நிறுவனத்தையும் அமைப்பதும் இதில் அடங்கும்.

எங்கள் கனிமவளக் கொள்கையின் இரண்டாவது பகுதியில் கனிமவளங்களின் மீது கட்டுப்பாடு செலுத்தும் நோக்கத்தோடு இந்திய அரசாங்கம் இயற்றத் திட்டமிட்டிருக்கும் சட்டங்கள் இடம்பெறும். கனிமவளங்கள் மீது சட்டப்படியான கட்டுப்பாட்டின் வரையறைகளைத் திட்டமிடுவதில் பின்வரும் கூறுகள் கணக்கிலெடுத்துக் கொள்ளப்படும்:

- ஒன்று, அகில இந்தியக் கனிமவளத்தின் முக்கியம்.
- இரண்டு, கனிமவளத்தின் தொழில்நுட்ப இயல்பு.
- மூன்று, கனிமவளம் பயன்படுத்தப்படும் நோக்கம்.
- நான்கு, கனிமவளத்தின் அல்லது கனிமவளத்தைக் கொண்டு தயாரிக்கப்படும் பொருள்களின் மதிப்பு..” *(தொ.50 : பக்.173)*

தாமோதர் அணைத் திட்டத்தின் கீழ், தாமோதர் பள்ளத்தாக்குத் திட்டம் குறித்து கல்கத்தாவில் நடந்த மாநாட்டில் விரிவாகப் பேசினார். மீண்டும் கல்கத்தாவில் நடந்த இரண்டாவது கூட்டத்தில் தாமோதர் பள்ளத்தாக்குத் திட்டம் பற்றிய அம்பேத்கர் பதிவுகள் பின்வருமாறு.

"தாமோதர் ஆற்று நீரைப் பயன்படுத்திக் கொள்வதற்கான திட்டத்தைப் பற்றி உரையாடுவதற்காக நாம் இரண்டாவது முறையாக இங்கே கூடியுள்ளோம். இது குறித்த முதல் கூட்டம், 1945ஆம் ஆண்டு ஜனவரி 3ஆம் நாள் நடைபெற்றது என்பது உங்களுக்கு நினைவிருக்கும். 1944ஆம் ஆண்டில் வங்காள அரசாங்கம் நியமித்த தாமோதர் ஆற்று வெள்ள விசாரணைக் குழுவின் அறிக்கை குறித்து அப்போது ஆராய்ந்தோம்.

இத்திட்டத்தை ஆற்றில் அணைகட்டி வெள்ளச் சேதத்தைத் தடுக்கும் திட்டமாக உருவாக்குவதா? பாசனம், மின் உற்பத்தி முதலிய நோக்கங்களையும் உள்ளடக்கிய, பல்நோக்குத் திட்டமாக விரிவாக்குவதா? இவையே, அன்று நம்முன் எழுந்த வினாக்களாகும். அம்மாநாட்டில் பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்து பல்நோக்குத் திட்டமே. அதற்கேற்றவாறு தேவையான தகவல்களைத் திரட்டி பல்நோக்கு திட்டத்தை வரைவதற்கு ஏற்பாடு செய்ய மாநாடு தீர்மானித்தது. இப்பணிக்குத் தேவையான தொழில்நுட்ப வல்லுநர்களின் உதவியை முழுமையாகத் தருவதென்று இந்திய அரசாங்கத்தின் சார்பில் நான் கூறினேன்.” *(தொ.51 : பக்.12)*

இத்திட்டத்தால், கிராமங்களைக் காலி செய்யும் தேவை உருவானது. அப்படி நேரும் போது எவ்வளவு பேர் காலி செய்கிறார்கள்? அவர்களது நிலங்கள் எவ்வளவு? அவர்கள் உரிமைகள் என்ன? ஆகியவற்றைக் கண்டறிய உள்ளோம். அது தொடர்பாக அரசாங்கம் அறிக்கை தாக்கல் செய்யும் என்று அம்பேத்கர் குறிப்பிடுகிறார் *(தொ.54 : பக்.95-96)*. தொழிலாளர்களோடு தொடர்புடைய இத்திட்டங்களில் அம்பேத்கர் அக்கறை செலுத்தினார். மேலும், ஒரிசாவில் ஆறுகளை உருவாக்கும் திட்டம், மின்விசை உற்பத்திக்கான நிலையங்கள் ஆகியவற்றை உருவாக்குவதிலும் அம்பேத்கர் அக்கறை செலுத்தினார்.

1942-1946 காலங்களில் பிரித்தானிய ஆட்சி சார்பில் நிருவாகத் துறையில், தொழிலாளர்கள் நலம் கருதி பல பரிமாணங்களில் அம்பேத்கர் செயல்பட்டார். இரண்டாம் உலகப் போரின் போது தொழிலாளர்களின் மீது அக்கறை எடுத்துக் கொண்டு செயல்பட்டதாகக் காண்கிறோம். அரசப் பிரதிநிதி அவையில், தனக்குரிய அதிகாரத்திற்குச் சரியாகப் பயன்படுத்தி, தொழிலாளர்களுக்கான ஏராளமான, சட்ட முன்வரைவுகளை, அதாவது பல ஆண்டுகளாக மாற்றம் செய்யாத சட்டங்களைத் திருத்தம் செய்து, நவீன தேவைக்கேற்ப கொண்டு வந்தார். இந்திய வளர்ச்சித் திட்டங்களில் அக்கறை செலுத்தினார். இவ்வகையில், பின்னர் உருவான இந்தியா என்ற சனநாயக நாட்டிற்கு முன்னரே திட்டங்களை, சட்டங்களை உருவாக்கிய அரும்பணியை அம்பேத்கர் நிறைவேற்றியுள்ளார்.

●

நூல்கள்: அண்ணல் அம்பேத்கர் மக்கள் பதிப்பு
தொகுதிகள் 49-54 வரை

அஞ்சலி

தென்றலுக்கு ஏது இறப்பு?

எஸ். ஜானகி

(1938 – 2026)

அண்மையில் காலம் சென்ற திரைப்படப் பாடகி திருமதி எஸ்.ஜானகி 1960களில் திரைப்படங்களுக்குப் பாடத் தொடங்கியவர்.

1970, 80 கள் தமிழகத்தின் புத்தொளிக் காலம் என்று கூறத்தக்க அளவுக்கு சற்று கூடுதலாகவே ஒளிர்ந்தவை. அந்த ஒளிர்வில் தமிழ்த் திரைப்படத் துறையின் தொழிற்பாடும் உண்டு. திரைப்படத் துறையின் இந்தத் தொழிற்பாட்டில் பாடகி திருமதி எஸ்.ஜானகி அவர்களின் சிறப்பான பங்களிப்பும் குறிப்பிடத்தக்கது.

ஜானகி இயற்கையில் கலந்தாலும், அவருடைய பாடல்கள் நமக்கு விழிப்பூட்டுவனவாகவும், இனிய ஓய்வு தருவனவாகவும் என்றென்றும் ஒலித்துக்கொண்டே இருக்கும். தென்றலுக்கு ஏது இறப்பு?

- ஜெய்கண்ணன்

உங்கள் நூலகம் சந்தாதாரர்களுக்கு ஒரு வேண்டுகோள்!

உங்கள் நூலகம் சந்தாவினைப் புதுப்பிக்காதவர்கள் தொடர்ந்து உங்கள் நூலகம் இதழினைப் பெற புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்

உங்கள் நூலகம்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை - 600 050.
தொலைபேசி எண் : 044-26251968, 26258410

ஆகஸ்ட் மாதத்துடன் முடிவடையும் சந்தாதாரர்களின் ரசீது எண்கள்

5433	5434	1926	5789	8918	3415
3708	5785	1662	5788	8919	3412
5331	6830	3414	5786	3768	3416
325	3766	5790	3363	7938	3417

தனி இதழ் ₹ 45.00 / ஆண்டு சந்தா ₹ 540.00
மாணவர்களுக்கு ₹ 500.00. / ஆயுள் சந்தா ₹ 5400.00
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 4050.00

சந்தாத் தொகையை
New Century Reader's Sangam
Central Bank of India
Ambattur Branch, Chennai - 600 050
A/c.No. 1035249018
IFSC Code : CBIN0282161
என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.

கிளைகள்

அம்பத்தூர் 044 - 2635 9906, ஸ்பென்ஸர் பிளாசா 044-28490027, மதுரை 0452 - 2344106, 4374106, திருநெல்வேலி 0462 - 2323990, 4210990, திண்டுக்கல் 0451-2432172, கோயம்புத்தூர் 0422 2380554, சேலம் 0427-2450817, ஈரோடு 0424-2256667, கிருஷ்ணகிரி 04343-234387, ஓசூர் 04344 - 245726, ஊட்டி 0423 - 2441743 திருச்சி 0431 - 2700885, தஞ்சாவூர் 04362-231371, புதுக்கோட்டை 04322-227773, விழுப்புரம் 04146-227800, பாண்டிச்சேரி 0413 2280101, வேலூர் 0416-2234495, நாகர்கோவில் 04652 - 234990.

கட்டுரை



“

பேரமைதியான அந்த நேரத்தில்,
தோட்டத்தின் பின்புறத்திலிருந்து
அழுகையும் அலறலும் கலந்து
பெருங்குரல் ஒன்று கேட்டது.
அந்த அலறல் துர்கனேவின்
மனதை உறுத்தியது. அவர்
மனம் பதபதைத்து விட்டது.
படித்துக்கொண்டிருந்த
புத்தகத்தை அப்படியே
கீழே போட்டுவிட்டு...

”

சிலுவையில் இருந்து இறக்குகிறார்
இவான் துர்கனேவ்

1

*ர*ஷ்யாவின் மத்தியப் பகுதியில் உள்ள ஓரியோல் மாநிலத்தில், ஸ்பாஸ்கோயே–லுடோவினோவோ என்ற சிறிய கிராமத்தில் துர்கனேவின் குடும்பத் தோட்டம் அமைந்திருந்தது. ‘பச்சைப்பசேல்’ என்ற பசுமையான மரங்கள் படர்ந்து விரிந்துகிடக்கும் அழகிய புல்வெளிகள், தொன்மையும் அழகும் கொண்ட மாளிகை – வெளியில் இருந்து பார்க்க மிக அழகாக இருந்த அந்த இடத்தின் உள்ளே, பலரின் வேதனையும்,அழுகுரலும், அடக்குமுறையும் புதைந்துகிடந்தன. இளம் வயதிலிருந்தே துர்கனேவ் அந்தத் தோட்டத்தில்தான் வாழ்ந்து வந்தார். ஒருநாள் அதிகாலை, பனி பொழிந்து மிதந்துகொண்டிருந்தது. பேரமைதியான அந்த நேரத்தில், தோட்டத்தின் பின்புறத்திலிருந்து அழுகையும் அலறலும் கலந்து பெருங்குரல் ஒன்று கேட்டது. அந்த அலறல் துர்கனேவின் மனதை உறுத்தியது. அவர் மனம் பதபதைத்து விட்டது. படித்துக்கொண்டிருந்த புத்தகத்தை அப்படியே கீழே போட்டுவிட்டு, அவர் அந்த அலறல் குரல் வந்த திசையை நோக்கிப் பதற்றத்துடன் வேகமாக நடந்தார்.

அங்கே, அவர்களின் வயலருகே உள்ள பழைய குடிசைகளின் பக்கத்தில், ஒரு வேலைக்காரச் சிறுவனை தோட்டத்தின்

பாரதிபாலன்

கண்காணிப்பாளர் கொடூரமாக அடித்துத்தாக்கிக் கொண்டிருந்தான். காரணம் மிகச் சிறியது. வேலையில் ஒரு சிறிய தவறு. இதற்கா இவ்வளவு பெரிய தண்டனை,! மனிதாபிமானமற்றது.! சிறுவனின் உடல் நடுங்கியது;, "ஐயோ... உதவுங்க உதவுங்க என்னைப் போட்டு அடிக்கிறாங்களே... உதவுங்க உதவுங்கள்" என்ற அழுகுரலும் அவனிடம் இருந்து வந்தது. ஆனால் யாரால் உதவமுடியும்? சுற்றிலும் மற்ற வேலைக்காரர்கள் பயத்தில் தலை துவண்டு நின்று கொண்டிருந்தார்கள். அவர்களின் முகத்தில் பீதி!. ஒருவருக்கும் எதுவும் பேச முடியவில்லை. அப்படியே உறைந்து போய் கிடந்தார்கள்.! துணிவு இல்லை. ஏனென்றால் அந்தத் தோட்டத்தில் அவர்கள் மனிதர்கள் அல்ல.. கொத்தடிமைகள்!

இந்தக் காட்சி துர்கனேவின் மனதை மிக ஆழமாகக் குத்தியது. தன் குடும்பம் வசிக்கும் இந்த அழகான தோட்டத்தின் மறுபக்கம் எத்தனை எத்தனை கொடூரமானது...! துன்பமானது... இவ்வளவு கொடுமைகளையா தாங்கி நிற்கிறது என்பதை அவர் முதன்முறையாக உணர்ந்தார். வீட்டுக்குத் திரும்பிய பிறகும், அந்தச் சிறுவனின் முகம் அவரின் கண்களிலிருந்து மறையவே இல்லை. அந்தக் காட்சி மீண்டும் மீண்டும் அவர் மனத் திரையில் விழுந்து கொண்டே இருந்தது! அந்த நாள் முழுவதும் அவரால் எதுவுமே செய்ய முடியவில்லை. இரவில் தூக்கமே வரவில்லை!.

அந்தத் தருணத்தில்தான், செர்ஃப்டம் (serfdom) எனும் கொத்தடிமை அமைப்பு மனிதர்களின் ஆன்மாவையே நசுக்குகிறது என்பதை அவர் தெளிவாகப் புரிந்துகொண்டார். ஆண்டுகள் கழிந்தன. துர்கனேவ் ஐரோப்பாவுக்குச் சென்று கல்வியையும் உலகளாவிய பார்வையையும் பெற்றார். ஆனால் ஸ்பாஸ்கோயே-லுடோவினோவோ தோட்டத்தில் அன்று கண்ட அந்தக் காட்சி மட்டும் அவரைவிட்டு ஒருபோதும் விலகவில்லை. தாய்-தந்தையின் கட்டுப்பாட்டில் இருந்து விலகியதும், அவர் தன் தோட்டத்தில் இருந்த கொத்தடிமைப்பணியாளர்களை விடுதலை செய்தார். அதன் பின் அவர் எழுதிய A Sportsman's Sketches போன்ற கதைத்தொகுப்புகள் ரஷ்ய கிராமங்களின் வெளித்தெரியாத கொத்தடிமைகளின் வேதனையும், எளியமனிதர்களின் நிலையையும் ஒடுக்கப்பட்ட வாழ்க்கையும் உயிர்ப்புடன் பேசத் தொடங்கின. அந்தக் கிராமத்தில், ஒரு சிறுவனின் கண்ணீரிலிருந்து தொடங்கிய அந்த உணர்வே, துர்கனேவை மனிதாபிமான எழுத்தாளராக உருவாக்கியது.

2

1843 ஆம் ஆண்டு.

அது ஒரு குளிர் காலம்...செயின்ட் பீட்டர்ஸ்பர்க் நகரம் புகை மூட்டத்தால் மூடப்பட்டிருந்தது . நெவா நதி பனியால் உறைந்திருந்தது. அந்த மாலை, நகரின் புகழ்பெற்ற இசை அரங்கில் ஒரு ஐரோப்பியப் பாடகி பாடவிருக்கிறாள் என்ற செய்தி நகரெங்கும் பரவியிருந்தது .மக்கள் ஆரவாரமாக இருந்தனர். இவான் துர்கனேவ், அப்போது இளம் எழுத்தாளர். ஆர்வமின்றி ஏதோ ஒரு மனநிலையில் அந்த இசை அரங்குக்குள் நுழைந்தார். ஆனால் அந்த இரவு, அவரது வாழ்க்கையின் திசையே மாறப் போகிறது என்பதனை அவர் அப்போது அறியவில்லை.

மேடைக்கு வந்தாள் அந்தப் பாடகி, அவர் பவுலின் வியார்டோ (Pauline Viardot). மேடையில் புதிய ஒளி, நிலவு போல் குளிர்ச்சியாக, அந்த ஒளி அரங்கில் பரவியது. அவள் பாடத் தொடங்கிய அந்தக் கணமே அரங்கம் அப்படியே உறைந்துபோனது. அவளின் குரல் மென்மையாகவும், காத்திரமாகவும் இருந்தது. அது உள்ளத்தை ஏதோ செய்தது. இயல்பாகவே இருக்க முடியவில்லை. ஏதோ அந்தரத்தில் மிதப்பது போல ஒரு உணர்வு. துர்கனேவ் அவளையே பார்த்துக் கொண்டே இருந்தார். அது பேரழகின் கவர்ச்சி மட்டுமல்ல, அதையும் தாண்டியது அவளின் அழகு , அவளின் அறிவின் தீச்சண்யம் எல்லாம் ஒன்று சேர்ந்து ஒரு புது ஒலியாக அந்த அரங்கில் பரவத் தொடங்கிற்று.

அந்த இரவிற்குப் பின், அவளின் குரல் துர்கனேவின் உள்ளத்தில் சதாஒலித்துக்கொண்டே இருந்தது. அவரால் நிம்மதியாக இருக்க முடியவில்லை. நெஞ்சில் எப்போதும் நிறைந்து கொண்டிருக்கும் அந்தக் குரலில் இருந்து அவரால் விடுபடவும் முடியவில்லை. எப்போதும் அது கேட்டுக்கொண்டே இருந்தது.

ஒரு பித்தனைப் போல் அவர் சுற்றிக்கொண்டு திரிந்தார். ஒரு கட்டத்தில் அவளைச் சந்தித்தார். அவளோடு பேசினார். இருவருக்கும் நட்பு ஏற்பட்டது. தொடர்ந்து உரையாடினார்கள்., இலக்கியம், இசை, ஐரோப்பியச் சிந்தனைகள் அனைத்திலும் பவுலின் வியார்டோ துர்கனேவுக்கு ஒரு புதிய உலகைத் திறந்துவைத்தாள். ஒவ்வொரு முறை சந்திக்கும் போதும் ஒரு புதிய வெளிச்சத்தைத் தந்தாள். இருவருக்கும் ஒரு ஈர்ப்பு ஏற்பட்டது ஆனால்: அவள் ஏற்கெனவே திருமணமானவள். அவளின் கணவர், லூயி வியார்டோ, அந்தக் கலை உலகின் ஒரு முக்கியமான மனிதர். துர்கனேவ்

அவள் மீது கொண்டுள்ள காதலை ஒருபோதும் அவளிடம் வெளிப்படையாகச் சொல்லவில்லை.

அவருக்கு அவளைப் பார்த்துக் கொண்டே இருந்தால் மட்டும் போதும். அவள் அருகில் இருக்க வேண்டும். அவரின் ஒவ்வொரு நாளையும் அவள் அழகாக்கிக் கொண்டிருந்தாள். அதுவே அவருக்கு அப்போது போதுமானதாக இருந்தது, பின்பு அவள் வாழ்ந்த நகரங்களுக்கெல்லாம் இவரும் இடம்பெயர்ந்தார். எங்குச் சென்றாலும், ஒரு நிழல் போல அவர் அவளைத் தொடர்ந்தார்.

இவான் துர்கனேவ் எழுதிய கதைகளில் எல்லாம் அடிக்கடி ஓர் ஆண் கதாபாத்திரம் வரும் அவன் ஒரு பெண்ணை நேசிப்பான், ஆனால் அதை அவளிடம் கடைசிவரை சொல்லவே மாட்டான். அவள் அருகிலேயே இருப்பான். அந்தச் சுகமே அவனுக்குப் போதுமானதாக இருக்கும் ஏனென்றால், அவள் அவனுக்கு உரிமையானவள் அல்லள். இப்படியான கதாபாத்திரங்களில் துர்கனேவ் தானே நிறைந்து இருந்தார்.

ஒரு நாள், பாரிசில், மாலை நேரத்தில், பவுலின் வியார்டோ ஒரு தோட்டத்தில் நடந்து கொண்டிருந்தபோது, துர்கனேவ் மெதுவாக அவளிடம் "உங்கள் குரல், மனிதர்களை மகத்துவமானவர்களாக்கி விடுகிறது அது எப்படி?" என்றார். அதற்கு அவள் பதில் சொல்லவில்லை. சிரித்தாள். ஒரு சிரிப்புதான் பதில். அது வழக்கமான சிரிப்பு அல்ல. அந்தச் சிரிப்பில் ஏதோ ஒரு புது உறவு இருந்தது. நெருக்கம் இருந்தது. அதைக் காதல் என்று சொல்ல முடியாது அதற்கும் மேல் அது,. அதுவே அவருக்குப் போதுமானதாக இருந்தது.

ஆண்டுகள் கடந்தன. துர்கனேவ் உலகப்புகழ்பெற்ற எழுத்தாளராக மாறினார். ஆனால் அவர் திருமணமே செய்து கொள்ளவில்லை. நிறைவேறாத அவருடைய அந்தக் காதல், அவரது தனிமையாக மாறியது. தன்னுடைய இறுதிக் காலத்தில், உடல்நலம் குன்றிய துர்கனேவ், பவுலின் வியார்டோவின் வீட்டருகிலேயேதான் வாழ்ந்தார். அவளின் அந்தக் குரலை, அவளின் சிரிப்பை அவரால் ஒருபோதும் மறக்க முடியவில்லை. அது அவர் மனதிலே உறைந்து விட்டது. அவர் இறந்த பொழுது அவரின் அந்த காதலும் அதனால் ஏற்பட்ட காயங்களும் காயங்கள் ஏற்படுத்திய வடுவும் வெளிஉலகிற்குப் பெரிய அளவில் தெரியாத அளவுக்குப் புதைந்து போய்விட்டது. ஆனால் அவருடைய கதைகள் ஒளிவுமறைவின்றி அவருடைய எல்லா ரகசியங்களையும் நமக்குச் சொல்லி விடுகின்றன.

3

ரஷ்ய இலக்கியத்தின் முகமாக விளங்குபவர் இவான் துர்கனேவ் (1818–1883). லியோ டால்ஸ்டாய், ஃபியோதர் தோஸ்தோயெவ்ஸ்கி போன்ற மகத்தான எழுத்தாளர்களின் சமகாலத்தவராக இருந்தாலும், துர்கனேவ் தன்னுடைய தனித்துவமான இலக்கியப் பாதையை உருவாக்கிக்கொண்டவர் . தீவிரமான தத்துவச் சிந்தனைகளோ, அதீத உணர்ச்சிவெளிப்பாடுகளோ இல்லாமல், மனித மனத்தின் நுண்ணிய அசைவுகளை, சமூக மாற்றங்களின் தாக்கங்களை மெல்லிய குரலில் பதிவு செய்தவர். சாதாரண மனிதர்களின் வாழ்க்கை வழியாகவே வரலாற்று மாற்றங்களை உணர்த்தியவர் துர்கனேவ். இதன் காரணமாகவே உலக இலக்கியத்தில் தனி இடம் பெற்றுள்ளார்.

துர்கனேவ் 1818ஆம் ஆண்டு ரஷ்யாவின் ஒரியோல் மாகாணத்தில் செல்வச்செழிப்பு மிக்க நிலப்பிரபு குடும்பத்தில் பிறந்தவர். வளமான சூழலில் வளர்ந்தாலும், அவரது இளமைக்காலம் மனஅழுத்தம் நிறைந்ததாகவே இருந்தது. அவரது தாய் வர்வாரா பெட்ரோவ்னா மிகவும் கடுமையானவர். மற்றவர்களை அடிமைபோல் நடத்துவார், மிக மோசமான மூர்க்கக்குணம் கொண்டவர். அடிமை விவசாயக் கூலிகளை மிகக் கொடூரமாக நடத்துபவர். இதையெல்லாம் பார்த்து துர்கனேவின் மனம் மிகவும் பாதிக்கப்பட்டது. சகமனிதர்களிடம் மனித நேயத்தோடு நடக்க வேண்டும் என்ற எண்ணம் அப்போதே அவர் மனதில் விழுந்து விட்டது. அதிகாரமும் செல்வச் செழிப்பும் மனிதர்களை எவ்வாறு கொடூரமாக மாற்றுகின்றன என்பதை அவர் சிறுவயதிலேயே உணர்ந்தார்.

கிராம வாழ்வின் அனுபவம், விவசாயிகளின் துயரமான நிலை, அடிமைத்தனத்தின் கொடுமைகள் அவரது எழுத்துக்களின் கருப்பொருள்களாக மாறின. மாஸ்கோ, செயின்ட் பீட்டர்ஸ்பர்க் பல்கலைக்கழகங்களில் கல்வி கற்ற அவர், பின்னர் பெர்லின் பல்கலைக்கழகத்தில் பயின்றார். ஜெர்மனியில் அவர் ஹெகல் உள்ளிட்ட மேற்குத் தத்துவஞானிகளின் கருத்துகளைக் கற்றறிந்தார். இதன் மூலம் மேற்கு அறிவுச் சூழலுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட "மேற்கத்தியச் சிந்தனையாளர்" (Westernizer) ஆக உருவெடுத்தார்.

துர்கனேவின் இலக்கியத்துடனான தொடர்பு கவிதையில் இருந்துதான் தொடங்குகிறது. ஆரம்ப காலத்தில் ரொமான்டிக் பாணியில் கவிதைகள் எழுதிய அவர், பின்னர் கவிதை என்ற வடிவம் தன் உள்ளார்ந்த எண்ணங்களை முழுமையாக

வெளிப்படுத்தப் போதுமானதாக இல்லை என உணர்ந்தார்.. அதன்பின் தான் அவர் சிறுகதை, நாவல் வடிவங்களுக்கு மாறினார். இதுவே அவரது உண்மையான இலக்கிய அடையாளமாக உருவாகிய காலம்.

இவான் துர்கனேவ் மென்மையானவர், எளிதில், உணர்ச்சி வசப்படக் கூடியவர். மற்ற மனிதர்களை நம்புவதிலும் தன்னம்பிக்கையோடு செயல்படுவதிலும் முடிவுகள் எடுப்பதிலும் மிகப் பலவீனமாக இருந்தார். இந்த அவரின் குணம் தான் அவருடைய பல கதைகளில் சிந்தனையிலும் செயலிலும் முடிவெடுப்பதிலும் தடுமாறும் கதாபாத்திரங்களாக வெளிப்பட்டன. அவரது வாழ்க்கையின் மிக வலி நிறைந்த ஒர் அனுபவம், ஓபரா பாடகி பவுலின் வியார்டோ மீது அவர் கொண்ட காதல்.

இவான் துர்கனேவின் முக்கியமான படைப்புகளில் ஒன்றாக "ஒரு வேட்டைக்காரனின் குறிப்புகள்" (A Sportsman's Sketches) என்ற சிறுகதைத் தொகுப்பு விளங்குகிறது. இந்த நூல் அவரது இலக்கிய வாழ்க்கையில் ஒரு முக்கியமான மைல்கல்லாக அமைந்ததோடு, ரஷ்ய சமூகத்தின் சிந்தனைப் போக்கிலும் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது. இந்தத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள கதைகள் கிராமப்புறங்களில் வாழ்ந்த சாதாரண விவசாயிகளின் அன்றாட வாழ்க்கை, துயரங்கள், கனவுகள், நம்பிக்கைகள், மனித உறவுகள் மற்றும் அவர்களின் உழைப்பின் மதிப்பை மிகவும் நுட்பமாகவும் மனிதநேயத்தோடும் சித்திரிக்கின்றன.

விவசாயிகளின் வாழ்க்கைச் சிக்கல்களை மனிதநேயத்துடனும் கண்ணியத்துடனும் வெளிப்படுத்தியதன் மூலம், ரஷ்ய சமூகத்தில் நிலவிய அடிமை விவசாய முறையின் அநீதியைப் பற்றிய விழிப்புணர்வை பரவலாக்கியது. இதன் விளைவாக, அடிமைத்தனம் ஒழிக்கப்பட வேண்டும் என்ற எண்ணம் பொதுமக்களிடையிலும் அறிவுஜீவிகளிடையிலும் வலுப்பெறத் தொடங்கியது.

பல வரலாற்றாசிரியர்களும் இலக்கிய ஆய்வாளர்களும், இந்த நூல் ரஷ்யாவில் சமூகச் சீர்திருத்த சிந்தனைகள் வளர்வதற்கு முக்கிய பங்காற்றியதாகக் கருதுகின்றனர். குறிப்பாக, 1861 ஆம் ஆண்டு ரஷ்யாவில் அடிமை விவசாய முறை (Serfdom) ஒழிக்கப்பட்டதற்கான சமூக மனநிலையை உருவாக்குவதில் இந்தப் படைப்பின் தாக்கம் குறிப்பிடத்தக்கதாக இருந்தது என்று மதிப்பிடப்படுகிறது.

துர்கனேவ் எழுதிய காலத்தில் ரஷ்யாவின் சமூகச் சூழல்

19ஆம் நூற்றாண்டு ரஷ்யா அரசியல், சமூக மற்றும் அறிவுசார் மாற்றங்கள் வேகமாக உருவாகிக் கொண்டிருந்த ஒரு முக்கியமான காலமாகும். நாட்டில் நீண்டகாலமாக நிலவிய அடிமை விவசாய முறை, அரசரின் முழுமையான அதிகார ஆட்சி மற்றும் சமூக ஏற்றத்தாழ்வுகள் குறித்துப் பல்வேறு தரப்பினரிடமிருந்து விமர்சனங்கள் எழத் தொடங்கின. ஒரு புறம், ஐரோப்பாவின் நவீன சிந்தனைகள், அறிவியல் முன்னேற்றங்கள் மற்றும் ஜனநாயகக் கருத்துக்களை ரஷ்யா ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தியவர்கள் இருந்தனர்; மறுபுறம், ரஷ்யாவின் பாரம்பரியக் கலாசாரம், மதிப்புகள் மற்றும் தேசிய அடையாளத்தைப் பாதுகாக்க வேண்டும் என்று வாதிட்டவர்களும் இருந்தனர். இதனால் ரஷ்ய சமூகத்தில் தீவிரமான கருத்து மோதல்கள் உருவாயின.

புதிய தலைமுறைக்கும் பழைய தலைமுறைக்கும் இடையே உருவான சிந்தனை மோதல்களை இவான் துர்கெனேவ் தனது புகழ்பெற்ற நாவலான "தந்தையரும் மகன்களும்" (Fathers and Sons) என்னும் படைப்பில் ஆழமாகச் சித்தரித்துள்ளார். இந்த நாவலில் இடம்பெறும் பசரோவ் என்ற கதாபாத்திரம், பழமைவாத நம்பிக்கைகள், சமூக மரபுகள் மற்றும் உணர்ச்சிவசப்பட்ட மதிப்பீடுகளைச் சவாலுக்கு உட்படுத்தும் புதிய இளம் தலைமுறையின் பிரதிநிதியாகக் காட்டப்படுகிறார். அவர் பகுத்தறிவு, அறிவியல் சிந்தனை மற்றும் மாற்றத்திற்கான விருப்பத்தை முன்னிறுத்துகிறார். ஆனால் துர்கனேவின் தனிச்சிறப்பு என்னவெனில், அவர் எந்த ஒரு தரப்பின் கருத்தையும் முழுமையாக ஆதரிக்கவோ அல்லது நிராகரிக்கவோ முயலவில்லை. மாறாக, சமூகத்தில் நிலவிய சிந்தனை மோதல்களை ஒரு நடுநிலைப் பார்வையாளராகப் பதிவு செய்கிறார்.

துர்கனேவின் தனித்துவம்

இவான் துர்கனேவின் எழுத்தின் சிறப்பம்சம் என்னவென்றால் மனித மனத்தின் நுண்ணிய அசைவுகளை ஆழமாக ஆராய்ந்து சித்தரிக்கும் திறனாகும். ஓர் ஓவியர் தனது தூரிகையால் உயிருள்ள ஓவியத்தை வரைவதுபோல், துர்கனேவ் தனது சொற்களின் வழியாக மனித மனத்தின் மறைந்திருக்கும் உணர்வுகளை உயிர்ப்புடன் வெளிப்படுத்துகிறார். அவரது படைப்புகளில் பெரும் சம்பவங்கள், பரபரப்பான திருப்பங்கள் அல்லது நாடகத்தன்மை நிறைந்த காட்சிகள் காணப்படுவதில்லை. அதற்குப் பதிலாக, மனித மனத்தில் மெல்லிய மாற்றங்கள், சொல்லப்படாத

உணர்வுகள் மற்றும் உள்ளார்ந்த போராட்டங்களே கதையின் மையமாக அமைகின்றன.

தயக்கம், ஏக்கம், தனிமை, தோல்வி, இழப்பு, நிறைவேறாத காதல், கடந்தகால நினைவுகளின் சுமை மற்றும் மனித மனம் அனுபவிக்கும் மெல்லிய துயரங்கள் போன்ற உணர்வுகளை மிக இயல்பாகவும் உணர்வுபூர்வமாகவும் அவர் வெளிப்படுத்துகிறார். இதனால் அவரது கதாபாத்திரங்கள் கற்பனையான இலக்கியப் பாத்திரங்களாக அல்லாமல், நம் வாழ்வில் நாம் சந்திக்கும் உண்மையான மனிதர்களைப் போலவே வாசகர்களுக்கு நெருக்கமாகத் தோன்றுகின்றன.

இயற்கையைச் சித்தரிப்பதிலும் துர்கனேவ் தனித்துவமான கலைஞராக விளங்குகிறார். அவரது எழுத்தில் இயற்கை வெறும் பின்னணிக் காட்சியாக மட்டுமே இருப்பதில்லை; அது கதையின் உணர்வுகளோடும் கதாபாத்திரங்களின் மனநிலையோடும் ஒன்றிணைந்து செயல்படுகிறது. மரங்கள், புல்வெளிகள், ஆறுகள், மாலைப் பொழுதுகள், பருவநிலையின் மாற்றங்கள் ஆகியவற்றை அவர் கவிதைநயத்துடன் அற்புதமாக விவரிக்கிறார். பல இடங்களில் இயற்கையும் மனித மனமும் ஒன்றையொன்று பிரதிபலிப்பதுபோலத் தோன்றும். கதாபாத்திரங்களின் மகிழ்ச்சி, துயரம், நம்பிக்கை அல்லது விரக்தி ஆகிய உணர்வுகள் இயற்கைக் காட்சிகளின் வழியாக மேலும் ஆழமடைந்து வாசகர்களின் மனதில் பதிகின்றன.

இவான் துர்கனேவின் சிறுகதைகள் சுமார் நாற்பது ஆண்டுகளுக்கும் மேலான காலப்பரப்பில் உருவாகியுள்ளன. எனவே அவை ஒரு தனிப்பட்ட எழுத்தாளரின் படைப்பாற்றலை மட்டுமல்லாமல், 19ஆம் நூற்றாண்டு ரஷ்ய இலக்கியத்தின் வளர்ச்சிப் பயணத்தையும் பிரதிபலிக்கின்றன. ரொமான்டிக் உணர்வுகளின் தாக்கத்திலிருந்து சமூக யதார்த்தவாதத்திற்கும், பின்னர் மனித மனத்தின் ஆழங்களை ஆராயும் உளவியல் யதார்த்தவாதத்திற்கும் ரஷ்ய இலக்கியம் எவ்வாறு வளர்ந்தது என்பதை அவரது சிறுகதைகள் தெளிவாகக் காட்டுகின்றன.

இந்தக் கதைகள் சமூக மாற்றங்கள், வர்க்க உறவுகள் மற்றும் மனித வாழ்க்கையின் சிக்கல்களைப் பதிவு செய்வதோடு மட்டும் நிற்கவில்லை; இலக்கியம் சமூகத்திடம் எழுப்பும் கேள்விகள், கதைசொல்லலின் புதிய வடிவங்கள், மனித வாழ்க்கையைப் புரிந்துகொள்ளும் தத்துவப் பார்வைகள் மற்றும் எழுத்தாளரின் சமூகப் பொறுப்பு ஆகியவை எவ்வாறு காலப்போக்கில் வளர்ச்சியடைந்தன என்பதையும் வெளிப்படுத்துகின்றன. எனவே துர்கனேவின் சிறுகதைகள் வெறும் இலக்கியப் படைப்புகளாக மட்டுமல்லாமல், ஒரு காலத்தின் சமூக வரலாறு, மனித மனத்தின் ஆழம் மற்றும் இலக்கிய வளர்ச்சியின் பரிணாமத்தைப் பதிவு செய்த முக்கியமான ஆவணங்களாகவும் கருதப்படுகின்றன.

காலவரிசை அடிப்படையில் அவரது சிறுகதைகளை ஆராயும்போது, அவை மூன்று முக்கியமான இலக்கியக் கட்டங்களாகப் பிரிக்கப்பட்டு ஆய்வு செய்யப்படுகின்றன. இந்த மூன்று கட்டங்களும் துர்கெனேவின் படைப்புலக வளர்ச்சியையும், ரஷ்ய இலக்கியத்தின் பரிணாமப் பயணத்தையும் புரிந்துகொள்வதற்கான முக்கியமான அடையாளங்களாக விளங்குகின்றன.

தொடக்க காலக் கதைகள்

1840களின் இறுதியிலும் 1850களின் தொடக்கத்திலும் எழுதப்பட்ட இவான் துர்கெனேவின் தொடக்ககாலச் சிறுகதைகள், அவரது இலக்கியப் பயணத்தின் அடித்தளமாகவும் ரஷ்ய சமூக யதார்த்தவாத இலக்கியத்தின் முக்கியமான எடுத்துக்காட்டுகளாகவும் விளங்குகின்றன. "கோர் மற்றும் கலினிச்" *(Khor and Kalinych, 1847)*, "யெர்மோலை மற்றும் அரிசி ஆலைக்காரனின் மனைவி" *(Yermolai and the Miller's Wife, 1847)*, "மாவட்ட மருத்துவர்" *(The District Doctor, 1847)*, "பாடகர்கள்" *(The Singers, 1850)*, "பெழின் புல்வெளி" *(Bezhin Meadow, 1851)* போன்ற கதைகள் இந்தக் காலகட்டத்தைச் சேர்ந்த முக்கியமான படைப்புகளாகும். இக்கதைகள் அனைத்தும் பின்னர் "ஒரு வேட்டைக்காரனின் குறிப்புகள்" *(A Sportsman's Sketches)* என்ற புகழ்பெற்ற தொகுப்பில் இடம்பெற்றன. இந்தக் கதைகளின் மூலம் துர்கனேவ், ரஷ்யக் கிராமப்புற வாழ்க்கையின் உண்மையான முகத்தை வாசகர்களுக்கு அறிமுகப்படுத்துகிறார்.

உள்மனப் பயணம்

1850களின் நடுப்பகுதியிலிருந்து *1860கள்* வரை எழுதப்பட்ட இவான் துர்கெனேவின் சிறுகதைகள், சமூக அமைப்புகளிலிருந்து தனிநபரின் உளவியல் உலகத்தை நோக்கி நகர்கின்றன. "மூமு" *(Mumu, 1854)*, "ஆசியா" *(Asya, 1858)*, "முதல் காதல்" *(First Love, 1860)*, "சந்திப்பு" *(The Rendezvous, 1850)* போன்ற கதைகள் இந்த உளவியல் யதார்த்தவாதக் கட்டத்தின் முக்கிய வெளிப்பாடுகளாகும். இக்கதைகளில் வெளிப்புற நிகழ்வுகளை விட மனித மனத்தின் நுட்பமான உணர்வுகளே மையமாக அமைகின்றன.

“மூமு” *(Mumu)* அடிமைத்தனத்தின் கொடுமைகளை வெளிப்படுத்தினாலும், அதன் மையம் சமூக அமைப்பின் விமர்சனமாக அல்ல; ஒரு தனிநபரின் துயரமும் உதவியற்ற நிலையும் ஆகும். “ஆசியா” *(Asya)* மற்றும் “முதல் காதல்” *(First Love)* போன்ற கதைகளில் தயக்கம், மன உறுதியின்மை, காலதாமதத்தால் இழக்கப்படும் வாய்ப்புகள், நிறைவேறாத காதல் மற்றும் பின்னர் ஏற்படும் வருத்தம் போன்ற உணர்வுகள் ஆழமாகச் சித்தரிக்கப்படுகின்றன. இதனால் இக்கதைகள் நவீன உளவியல் இலக்கியத்தின் தொடக்கப் படைப்புகளாகக் கருதப்படுகின்றன.

நிக்கோலை கோகோல், இவான் துர்கனேவ், ஆன்டன் செக்காவ் ஆகியோரின் படைப்புகளை ஒப்பிட்டுப் பார்க்கும்போது துர்கெனேவின் தனித்துவம் தெளிவாக வெளிப்படுகிறது. குறிப்பாக, “ஆசியா” *(Asya)* போன்ற கதைகள், பின்னர் செக்காவ் விரிவாகக் கையாண்ட, நிறைவேறாத காதல், தவறவிடப்பட்ட வாய்ப்புகள் மற்றும் வாழ்நாள் முழுவதும் நீளும் நினைவுகள் போன்ற கருப்பொருள்களுக்கான முன்னோட்டங்களாக அமைந்தன.

இறுதிக்காலக்கட்ட சிறுகதைகள்

1870களில் எழுதப்பட்ட இவான் துர்கெனேவின் இறுதிக்காலச் சிறுகதைகள் அவரது இலக்கியப் பயணத்தின் முதிர்ச்சியான கட்டத்தைப் பிரதிபலிக்கின்றன. இந்தக் காலகட்டத்தில் சமூகப் பிரச்சினைகள் மற்றும் தலைமுறை மோதல்கள் போன்ற கருப்பொருள்கள் பின்னுக்குத் தள்ளப்பட்டு, மனித வாழ்க்கையின் ஆழமான அனுபவங்கள் முன்னிலைக்கு வருகின்றன. முதுமை, காலத்தின் நிலையாமை, கடந்த கால நினைவுகள், இழந்தவாழ்வு, மனச்சுமைகள் மற்றும் வாழ்வின் அர்த்தம் போன்ற தத்துவச் சிந்தனைகள் அவரது படைப்புகளின் மையமாக அமைகின்றன.

“வசந்த வெள்ளம்” *(Spring Torrents, 1872)*, “உயிர்ப்பான நினைவுச்சின்னம்” *(Living Relic, 1874)*, “கனவு” *(The Dream, 1877)* போன்ற கதைகள் இந்தக் காலகட்டத்தின் முக்கியமான படைப்புகளாகும். இக்கதைகளில் மனிதன் தனது கடந்தகாலத்தை எவ்வாறு நினைவுகூர்கிறான், செய்த தவறுகளின் சுமையை எவ்வாறு சுமக்கிறான், காலம் மனித வாழ்க்கையை எவ்வாறு மாற்றுகிறது என்பன ஆழமாக ஆராயப்படுகின்றன. குறிப்பாக, பழைய நினைவுகள் மனித மனதில் ஏற்படுத்தும் தாக்கத்தையும், திரும்பப் பெற முடியாத காலத்தைப் பற்றிய ஏக்கத்தையும் துர்கெனேவ் மிக நுட்பமாக வெளிப்படுத்துகிறார்.

துர்கெனேவின் இறுதிக்காலச் சிறுகதைகள் வெறும் நினைவுகளையும் தனிப்பட்ட அனுபவங்களையும் பதிவு செய்வதல்ல; மனித வாழ்க்கை, காலம், நினைவு மற்றும் இருப்பின் அர்த்தம் குறித்து தத்துவப்பூர்வமாகச் சிந்திக்கத் தூண்டும் ஆழமான இலக்கியப் படைப்புகளாகவும் விளங்குகின்றன.

தன்னைத்தானே வரைந்து கொண்டவர்

இவான் துர்கனேவின் பெரும்பாலான கதாபாத்திரங்கள் அவரின் நேரடிவாழ்வின் பிரதிபலிப்புகளே அவர் தன் கதாபாத்திரங்களின் வழியாக தன்னையே பல இடங்களில் வெளிப்படுத்திக்கொள்கிறார். பெரும்பாலும் சிலர் அறிவுப்பூர்வமாகவும் ஆழமாகவும் சிந்திப்பவர்களாக இருந்தாலும், நடைமுறையில் வாழ்க்கையை எதிர்கொள்ளமுடியாமல் பின் தங்கிவிடுகின்றர் . ருடின் *(Rudin, 1856)* நாவலின் நாயகன் அப்படிப்பட்டவன் தான் , இவான் துர்கனேவும் இதே இயல்பு கொண்டவர் தான்.

இதே மனநிலை நிலப்பிரபு குடும்பம் *(A Nest of the Gentry, 1859)* நாவலிலும் வெளிப்படுகிறது; அங்கு லாவ்ரெட்ஸ்கியிடம் ஒழுக்கம், நேர்மை, அறிவு, உயரிய பண்பு என பல சிறப்பியல்புகள் இருந்தாலும், மனநிலை மற்றும் தயக்கம் காரணமாக அவரால் வாழ்க்கையில் பலநேரங்களில் மகிழ்ச்சியுன் இருக்க முடியாமல் போய்விடுகிறது. இதுவும் அப்படியே துர்கனேவின் குண இயல்புதான்

தன் தாயின் அதிகார மமதையும் அடக்குமுறைகளையும் நேர்மையான எண்ணம் கொண்ட இவான் துர்கனேவை ஆழமாகப் பாதித்தது. இதன் வெளிப்பாடே வேட்டைக்காரனின் குறிப்புகள் *(A Sportsman’s Sketches, 1847–1852)* தொகுப்பில் உள்ள பல கதைகளில் வெளிப்படுகின்றன. பண்ணையில் அடிமைகளாக இருப்பவர்களிடம் இருக்கும் மனிதநேயத்தையும் அன்பையும் நிலப்பிரபுகளிடம் காணமுடியவில்லை, அவர்களிடம் வன்மமும் கொடூரமும்தான் இருக்கின்றன என வெளிப்படுத்தியுள்ளார். குறிப்பாக மூமு *(Mumu, 1854)* கதையில், வாய்பேசமுடியாத அடிமையான ஜெராசியிடம் அவளது பிரியமான வளர்ப்பு நாயைக் கொல்லும்படி அவள் எஜமானி கட்டாயப்படுத்துவது, மனிதாபிமானமற்ற செயல் மட்டுமல்ல அதிகாரத்தின் உச்சம் எனக் காட்டுகிறார்

இவான் துர்கனேவின் ஐரோப்பியக் கல்வி அவரது பார்வையைக் கூர்மையாக்கியது மட்டுமல்ல; மாறுபட்ட சிந்தனை எண்ணத்தையும்

தோற்றுவித்தது, ஜெர்மனியில் அவர் பெற்ற கல்வி, மேற்குத் தத்துவம், யதார்த்தவாத இலக்கியம், சுதந்திரமான சிந்தனைப்போக்கை அவரது எழுத்துகளில் ஆழமாகப் பதித்தது. தந்தையரும் மகன்களும் (Fathers and Sons, 1862) நாவலில், மரபுச் சிந்தனைகளுக்கும் நவீன சிந்தனைகளுக்கும் இடையிலான மோதல் நடுநிலையோடு சித்தரிக்கப்படுகிறது. நிஹிலிஸ்ட் பசாரோவ் விமர்சிக்கப்படுகிறான்; அதே நேரத்தில் அவனது அறிவாற்றலும் நேர்மையும் மதிக்கப்படுகின்றன. இதே நடுநிலைப் பார்வை கன்னி நிலம் (Virgin Soil, 1877) நாவலிலும் காணப்படுகிறது;

இவான் துர்கனேவ் பவுலின் வியார்டோ மீது கொண்ட (நிறைவேறாத) காதல் அவரது காதல் சித்தரிப்புகளில் எல்லாம் மிக ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது. அவரது படைப்புகளில் காதல் பெரும்பாலும் நிறைவேறாத காதலாகவும், காதலை வெளிப்படுத்தத் தாமதிப்பதால் தவறுவதாகவும் . பெறும்பாலும் அது இழப்பில் முடிவதாகவும் , தாமதம், மௌனம் ஆகிய செயல்களால் எற்படும் அபாயங்களை அவை வெளிப்படுகின்றன. அஸ்யா (Asya, 1858) கதையில், காதலை வெளிப்படுத்த நாயகனின் காட்டும் தயக்கம நிரந்தர மான சோகத்தை அவனிடம் ஏற்படுததிவிடுகிறது. வசந்த வெள்ளம் (Spring Torrents / Torrents of Spring, 1872) நாவலில், மன உறுதி இல்லாமையே காதலை வீழ்ச்சிக்குத் தள்ளுகிறது. துர்கனேவின் காதல் கதைகள், பெரும்பாலும் மகிழ்ச்சியை வழங்குவதில்லை; மனவலியை ஊண்டாக்கி மன உணர்வுகளைப் பரிசோதிக்கின்றன

இறுதியாக, மரணம் மற்றும் அமைதி குறித்த துர்கனேவின் அணுகுமுறை அவரது நவீன உளவியல் பார்வையை வெளிப்படுத்துகிறது. உயிருடன் இருக்கும் பாழடைந்த உடல் (The Living Relic) மற்றும் மரணம் (Death) போன்ற கதைகளில், வேதனையும் மரணமும் எந்த உணர்ச்சி மிகைப்படுத்தலுமின்றி, மென்மையாகவும் மனிதாபிமானத்துடனும் சித்தரிக்கப்படுகின்றன. இந்த நுணுக்கமான நடை, பின்னாளில் உருவான செக்காவ் போன்ற எழுத்தாளர்களின் யதார்த்தவாதத்திற்கு முன்னோடியாக அமைந்தது.

இசை போல் கசியும் மொழிநடை

துர்கனேவின் மொழிநடை எளிமையானதும் நளினமானதும் ஆகும். சிக்கலான வாக்கியங்களையோ கனமான தத்துவச் சொற்களையோ அவர் பெரிதும் பயன்படுத்துவதில்லை. அவரது உரை ஓர் இசைபோல் ஒழுகுகிறது; எளிதாக வாசிக்க முடியும், அதே நேரத்தில் ஆழமான பொருளையும் கொண்டுள்ளது. இயற்கை வர்ணனைகள் அவரது எழுத்தின் சிறப்பாகும், நிலப்பரப்புகள், பருவநிலைகள், வானிலை ஆகியவை கதைமாந்தர்களின் உள்ளுணர்வுகளோடு இணைந்து வெளிப்படுகின்றன. கிராமப்புற இயற்கை வெறும் பின்னணியாக இல்லாமல், அடிமைகளின் துன்பமும் சுயமரியாதையும் வெளிப்படும் உயிர்ப்பான கூறாக அமைகிறது. அவரது மொழி கதையை ஆட்கொள்ளாது கதையின் உணர்ச்சிகளையும் கருத்துகளையும் துலங்கச் செய்கிறது

எடுத்துரைப்பு உத்தியில், துர்கனேவ் யதார்த்தவாதத்தையும் உளவியல் நுட்பமாக இணைத்துவிடுகிறார். ஆசிரியர் நேரடியாக எதற்கும் தீர்ப்பளிப்பதில்லை. மௌனம், இடைவெளி, முடிக்கப்படாத உரையாடல்கள் ஆகியவை அவரது எடுத்துரைப்பில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. இதனால் கதைகள் உணர்ச்சி ஆழம் பெறுகின்றன; வாசகர் சுயமாகச் சிந்திக்கத் தூண்டப்படுகின்றார். முதல் காதல் (First Love) கதையில் நினைவின் வழியாகவே கதை சொல்லப்படுவது, வாசகர்களிடம் உணர்வு எழுர்ச்சியை உருவாக்கிவிடுகிறது.

துர்கனேவின் எழுத்துமொழி மென்மையும் கவிதைநயமும் கொண்டது. ஆழமான உணர்ச்சிகளை மிக மென்மையான சொற்களால் வெளிப்படுத்தும் அவரது நடை, வாசகரை எளிதில் கதையின் உள்ளே இழுத்துச் செல்கிறது.

இவான் துர்கெனேவின் கதாபாத்திரங்கள் பெரும்பாலும் அறிவார்ந்தவர்களாகவும் ஆழமாகச் சிந்திப்பவர்களாகவும் இருப்பார்கள். ஆனால் வாழ்க்கையின் முக்கியமான தருணங்களில் முடிவெடுத்துச் செயல்படுவதில் அவர்கள் தயக்கம் காட்டுவார்கள். இந்த மனப்போராட்டம்தான் அவரது இலக்கியத்தின் முக்கியமான உளவியல் அம்சமாகும்.

சமூக மாற்றங்கள் வேகமாக நிகழ்ந்தாலும், மனித மனம் அவற்றை ஏற்றுக்கொண்டு செயல்படத் தயங்குகிறது என்பதை அவர் ஆழமாகப் பதிவு செய்கிறார். சமூக மாற்றத்தின் வேகத்திற்கும் மனித மனத்தின் தயக்கத்திற்கும் இடையேயான இடைவெளியை மிகத் தெளிவாகக் காட்டுவதே அவரது தனிச்சிறப்பாகும். இதனால்தான் இவான் துர்கெனேவின் படைப்புகள் ரஷ்ய இலக்கியத்தில் மட்டுமல்லாமல் உலக இலக்கியத்திலும் தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ளன.

●

கட்டுரையாளர்: பேராசிரியர் மற்றும் எழுத்தாளர்

மறையாத மாமனிதர் புவியரசு

கனல் மைந்தன்

மறைந்தாலும் மறையாத மாமனிதர்களில் ஒருவர் புவியரசு. இவர் மாணவப் பருவத்திலேயே தமிழில் மரபுப் பாக்கள் புனையும் ஆற்றல் பெற்றார். தமிழ் மொழி, காதல், புத்திலக்கியம், சமூகம் என பாரதி, பாரதிதாசன் தாக்கத்தில் பாக்களைப் புனைந்தார். சி.கே. ஆறுமுகம் உதவியல் 1964இல் 1½ அணா விலையில் ஒரு தொகுப்பை வெளியிட்டார். வள்ளுவரும் இளங்கோவும், ஔவையும் மூவேந்தரும், காவலரும் பாவலரும், காமராஜ், திருக்குறள் தெளிவுரை ஆகிய தலைப்புகளில் குறைந்த விலைகளில் நூல்கள் எழுதினார்.

இளமைப் பருவத்தில் வறுமையை எதிர்கொண்டவர், திண்ணைப் பள்ளியில் தமிழைக் கற்றவர். திராவிட இயக்கத்தின் தாக்கத்தால் அக்காலத்தில் நூல்களைத் திருமணப் பரிசாக வழங்கும் பழக்கத்தால் நூல்கள் ஏராளமாக விற்பனையாயின. ஆனால் திராவிட இயக்கத்திற்கு மாற்றாக ஓர் எதிர் இயக்கமாகச் சொல்லப்பட்ட தமிழரசு இயக்கத்தில் இவர் ஈடுபாடு உற்றதால், சிலம்புச்செல்வர் ம.பொ.சி.யைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு தமிழிசை ஞானமடைமாற்றப்படுத்தும் கவிதையாகவே இளைஞராற்றுப்படை வெளிவந்தது. உடுமலைப்பேட்டைக்கருகிலுள்ள லிங்கவ நாயக்கன் புதூரில் சுப்பையா - தாயம்மாள் இணையருக்கு ஒரே புதல்வராகப் பிறந்தவர், சு.சகந்நாதன், தமிழின் தாக்கத்தாலும் தமிழரசு இயக்கத்தின் தாக்கத்தாலும் புவியரசு ஆனார்.

காலம் தோறும் கவிதை எரியும் எரியும் கணலை கண்ணீர் தணிக்கும் – என்ற புவியரசின் வரிகள் ‘ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளொக்கும்’ என்ற மொழியை நினைவூட்டுகின்றன.

கோவை நகரை நிலைக்களனாகக் கொண்டு தம் வாழ்வை அமைத்துக் கொண்டவர் புவியரசு. இவர் ஒரு பெருநகரக் கவிஞராகத் தம்மை உருப்பெருக்கம் செய்துகொண்டார். திராவிட இயக்கத்தின் பழம்பெருமை பேசும் நடையைக் கைவிட்டு, பழைய உள்ளடக்கங்களை, உவமைகளை, உத்திகளைக் கைவிட்டு, சொல் புதிது, பொருள் புதிது, வளம் புதிது, என்ற பாரதியின் பழக்கங்களை வழிமொழிந்து, மாற்றத்தை எதிர்நோக்கி புதிய தேடல்களில் தம் கவனத்தைச் செலுத்தினார். அவருடன் தன்னை அடிக்கடி புதுப்பித்துக்கொள்ள வேண்டிய வரலாற்றுச் சூழலைச் சரிவரப் புரிந்து கொண்டு தம் நண்பர் இளமுருகுடன் இணைந்து ‘தேனீ’ சிற்றிதழை நடத்தினார். மரபு, மரபில் புதுமை, புதுமையில் மரபு, புதுமை எனத் தம் கவிதைப் பரிமாணத்தை வளர்த்துக் கொண்டார் புவியரசு.

சமத்துவச் சிந்தனைகள் வயப்பட்ட கவிஞர் தம் தேடலை சோவியத் இலக்கியத்தின் பால் மேற்கொண்டார். மயாகவ்ஸ்கி, பாப்லோ நெருதா ஆகியோரின் படைப்புகளில் தொடங்கிய அவரது ஆர்வம் தால்த்தாய், மாக்ஸிம் கார்க்கி, தஸ்தாயேவ்ஸ்கி, ஆண்டன்செகவ் போன்ற மகத்தான சோவியத் ஆளுமைகளின் பால் ஈர்க்கப்பட்டது. மேலும், கிழக்கு ஐரோப்பியக் கவிஞர்களின் கவிதைகளிலும் தென்அமெரிக்கக் கவிதைகளிலும் தம் ஈடுபாட்டை வளர்த்துக் கொண்டார். மரபுக்கவிதைகளில் கொடிகட்டிப் பறந்தவர், தம் முனைப்பைப் புதுக்கவிதைகளில் செலுத்தினார்.

படைப்பிலக்கியத்தில் இவரது 12 கவிதைத் தொகுப்புகள் வெளிவந்துள்ளன. சேக்சுபியர், ஓசோ, கலில் கிப்ரான், காசி நஸ்ரூல் இஸ்லாம், தஸ்தயேவ்ஸ்கி போன்றோரின் படைப்புகளையும் இவர் மொழியாக்கம் செய்துள்ளார்.

மார்க்ஸ் கூறியபடி மாற்றம் ஒன்றே மாறாதது என்பதை வானம்பாடிகள் எளிதாய்ப் புரிந்துகொள்ள இலக்கிய வரலாறும் சமூக வரலாறும் உதவியதே காரணமாகும். கோவையில், ஞானி, சக்தி, புவியரசு, சிற்பி, கி.வேங்கடசாமி, இளமுருகு, முல்லை ஆதவன், அக்கினிபுத்திரன், மு.மேத்தா நித்திலன், தேனரசன் போன்றோர் தமிழாசான்களாக இருந்தது. ஒரு வழியில் மரபை அறிந்து மரபைப் படைக்கும் உத்தியில் வல்லவர்களாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

புவியரசின் முத்திரை பதித்த சில கவிதைகளில் முதலாவது, இறைவா என்னை ஏன் கைவிட்டு விட்டாய் என்பது.

இசுரேலிய விமானங்கள் வீசும் குண்டு மாதா கோவிலில் விழுந்து அங்கிருந்த ஏசுவின் சிலையை உடைத்துவிட்டது. சிலுவையை ஒரு கையில் பிடித்தபடி தொங்கிக் கொண்டிருக்கும் ஏசுவைப் பார்த்து கவிஞன் கேட்கிறான்.

"ஏசுவே. உன்னை இக்கதிக்கு உள்ளாக்கியவன் யார்?
இசுரேல் விமானிகள் என்று கூறினர்.
இரத்த சம்பந்தம் உடையவர் ஆயிற்றே.
கொலைக்களங்கள் இனியில்லை என்றெண்ணினேன்.
அவை தொடர்கின்றன.
மீண்டும் சிலுவையில் அடைய நான் பிளாத்து மன்னனல்ல
ஏசுவே தேவகுமாரா.
உன் பரமபிதா
உன்னை ஏன் இப்படிக் கைகழுவி விட்டான்?

இது உலகளாவிய கவிதையாக இன்றளவும் புவியரசை அடையாளப் படுத்திக் கொண்டிருக்கிறது.

புதிய வரவு

நாஞ்சி வெண்பா

பதிப்பாசிரியர்: அ.கா.பெருமாள்

தமிழறிஞர் கே.என்.சிவராஜ பிள்ளை சென்னைப் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சித் துறையில் இருந்த காலத்தில் (1926 – 1936) எழுதிய நூல் நாஞ்சி வெண்பா. 240 வெண்பாக்களைக் கொண்ட இந்த நூல் 1935ஆம் ஆண்டு வெளிவந்திருக்கிறது. நீண்ட இடைவெளிக்குப் பிறகு, நாஞ்சி வெண்பா மீண்டும் இலக்கியத் தளத்திற்கு வருகிறது. இதன் பதிப்பாசிரியர்: திரு.அ.கா.பெருமாள்.

வெளியீடு: என்சிபிஎச் விலை: ரூ.100/-

புதிய வரவு

இப்படிக்கு வாழ்க்கை – பாகம் – 2

M. ஜான் கென்னடி

ஓய்வும் பயன்படுத்தவே', 'பொறுமையும் போராட்டமே', 'கழுகும் கற்றுத் தரும்', 'கோபம் கொள்', 'கோபத்தைக் கொல்', 'சுதந்திர அடிமைகள்', 'போலி வாழ்க்கை' உள்ளிட்ட 34 தலைப்புகளிலான வாழ்வியல் கட்டுரைகளைக் கொண்டது – இப்படிக்கு 'வாழ்க்கை. பாகம்-2' என்னும் தலைப்பிலான நூல். பட்டறிவு மிக்க கல்வியாளரான M.ஜான் கென்னடி எழுதியுள்ள இந்த நூல் நம்மை நாமே ஆய்வு செய்து, மேம்படுத்திக் கொள்ள உதவும்.

வெளியீடு: என்சிபிஎச் விலை: ரூ.130/-

எர்னஸ்ட் ஹெமிங்வே

ஆறு சொற்களில் ஓர் உலகம்

அஜயன் பாலா

அமெரிக்க எழுத்தாளர் ''எர்னஸ்ட் ஹெமிங்வே (Ernest Hemingway)'' உலக இலக்கியத்தில் சிறந்த எழுத்தாளர்களில் ஒருவராக மதிக்கப்படுகிறார். அவரது எழுத்துகள் கச்சிதமானவை. அவருடைய இலக்கியப் பெருமைகளுக்குக் காரணம் அவரது கற்பனைத்திறனோ அல்லது பாத்திரப் படைப்பாக்கங்களோ அல்லது உரையாடலோ இல்லை.

மாறாக, அவரது இலக்கியப் பெருமை மொழியை அவர் கச்சிதமாகக் கையாளும் விதத்திற்காக இன்றும் போற்றப்படுகின்றது. ஒரு தச்சன் இழைப்பதைக் போல தன் படைப்புகளை அவர் வடிவ ரீதியாக செதுக்கியபின்பே அச்சுக்கு அனுப்புவார் . குறைவான சொற்களால் மட்டுமே ஆழமான உணர்ச்சியைத் தொட முடியும் என்பதில் அழுத்தமான நம்பிக்கை கொண்டவர். அவர் சொன்னது போலவே அவரது அளவில் பெரிய நாவல்களான 'போரே நீ போ', 'யாருக்காக மணி ஒலிக்கிறது', 'கிளீமாஞ்சாரோ' போன்ற நாவல்களுக்குக் கிடைக்காத நோபல் பரிசு அவரது மிகச் சிறிய - 100 பக்கங்களுக்கும் குறைவான - கடலும் கிழவனும் நாவலுக்குத்தான் கிட்டியது.

அவர் குறைவான சொற்களில் எழுதிய சிறுகதை அவருக்கு நோபல் பரிசைவிடவும் அதிகப் புகழைப் பெற்றுத் தந்தது. அந்தச் சிறுகதை இதுதான்

"For sale: baby shoes, never worn."

யாரும் இது கதையின் தலைப்போ அல்லது கதையின் முதல் வரியோ என நினைக்க வேண்டாம். கதையே இதுதான்! இவ்வளவுதான்! வெறும் ''ஆறு சொற்கள்'' அவ்வளவுதான் மொத்த கதையும்!

"For sale: baby shoes, never worn."

"விற்கப்படுகின்றன: குழந்தை காலணிகள், ஒருபோதும் அணியப்படாதவை."

இந்த ஆறு சொற்கள் - உலகம் முழுவதும் இதுவரை எழுதப்பட்டவற்றில் மிகமீச் சிறுகதை - ''shortest story ever written'' எனப் புகழ்பெற்றது.

1930களில் ஒரு விருந்தில் கலந்து கொண்ட ஹெமிங்வே தன் நண்பர்களுக்கு ஒரு பந்தயம் வைக்கிறார். வெறும் குறைவான சொற்களில் ஒரே வரியில் கதை எழுதப் படவேண்டும் என சொல்ல, அனைவரும் ஆளுக்கொரு மூளைக்கு துண்டு காகிதங்களுடன் பறந்தனர்.

அவர் இப்படி ஒரு பந்தயம் வைக்கக் காரணம் மிகக் குறைந்த வார்த்தையைப் பயன்படுத்தி கதை எழுதுவதில் அவருக்கு இருந்த தீவிரமான ஈடுபாடு. அவருக்கு இந்த ஆர்வத்தை உண்டாக்கியவர் ஜெரார்டு ஸ்டெயின் . இவர்தான் உலகப் புகழ்பெற்ற "ரோஸ் ஈஸ் தி ரோஸ் ஈஸ் தி ரோஸ் ஈஸ் தி ரோஸ் ஈஸ் " என்ற வரிகளை எழுதிய பிரான்ஸ் தேசத்துப் பெண் கவிஞர்

பிரான்சில் ஹெமிங்வே 1922 இல் ஜெரார்டு ஸ்டெயினைச் சந்திக்கும் போது அவருக்கு வயது 23. ஸ்டெயினுக்கு வயது 48. அவர்தான் விவரணைகளைக் குறைத்து நேரடியாக, கதையைக் குறைந்த சொற்களில் எழுதும் புது உத்தியை அவருக்குப் போதித்தார் அதுதான் புகழ்பெற்ற "Iceberg Theory" அதாவது, ''பதினைந்து சதவீதம் மட்டும் சொல்லவும், மீதியை வாசகர் உணர வேண்டும்.'' இதுதான் அந்தத் தியரியின் உட்கிடக்கை. கொள்கை - கோட்பாடு.

இந்த ஆறு சொற்களும் அந்தக் கொள்கையின் மிகச் சிறந்த சான்று.

இதைத் தொடர்ந்து அவருக்குள் குறைவான சொற்களைப் பயன்படுத்துவதில் ஓர் ஆர்வம் உண்டானது. இந்த ஆர்வத்தின் விளைவுதான் ஹெமிங்வே தன் இலக்கிய நண்பர்களுக்கு அந்தச் சவாலை விடுத்தார் . ஆனால் அவர்கள் யாராலும் ஒரு வரியில் முழுமையான கதையை எழுத முடியவில்லை. பிறகு அவரே தான் எழுதிவிட்டதாகக் கூறி அனைவரிடமும் இந்தக் கதையை வாசித்தார். அனைவரும் மௌனமாகிப் போனார்கள். ஐஸ்பெர்க் அவர்களை அபரிதமாகத் தாக்கியிருந்தது . அந்த ஆறு சொற்களுக்குள் ஒரு வாழ்க்கை, ஒரு துயரம், ஒரு மரணம், ஒரு கனவு — அனைத்தும் நுழைந்திருந்தது.

"For sale: baby shoes, never worn."

- "For sale" — விற்பனை செய்யும் கட்டாயம், ஓர் இழப்பு.

- "Baby shoes" — புதிய உயிரின் சின்னம்.

- "Never worn" — அந்த உயிர் பிறக்காதது அல்லது வாழாதது.

இவ்வாறு ஒரு சொல் கூட ''மனித உணர்வின் பெரும் வலியைத்'' தாங்கிக் கொள்கிறது.

ஹெமிங்வே, ஒரு வரியிலேயே, ''மனித வாழ்வின் நொடியை நித்தியமாக்கினார்.'' அந்தச் சொற்கள் ஒரு தாயின் அழுகையையும், ஒரு தந்தையின் நிம்மதியின்மையையும், ஓர் உலகத்தின் மௌனத்தையும் ஒலிக்கச் செய்கின்றன.

அவை வெறும் ஆறு சொற்கள் அல்ல —

''ஒரு வாழ்வின் முழுக் கதை.''

இன்று, "six-word story" என்ற வகைமை, இலக்கியத்தில் ஒரு புதிய பரிமாணமாக வளர்ந்துள்ளது.

பல எழுத்தாளர்கள், வாசகர்கள் தங்கள் சொந்த ஆறு சொற்களால் கதைகளை உருவாக்குகிறார்கள் — ஆனால் அவையெல்லாம் ஹெமிங்வேயின் கதையைப் போல ஆழமான உணர்வைத் தருவது அரிது.

●

கட்டுரையாளர்: எழுத்தாளர், திரைப்பட இயக்குநர்.

செவ்வியல் இலக்கிய மீள்வாசிப்பின் இன்றைய தாக்கம்!

அன்பரசி

தமிழில் பதிப்பியல் நெறி 18 ஆம் நூற்றாண்டில் தோன்றினாலும், அந்தப் பின்புலத்திலான வாசிப்பு 20 ஆம் நூற்றாண்டின் இறுதியில்தான் அதிகமாக வழக்கத்துக்கு வரத் தொடங்கியது. தமிழுக்குச் செவ்வியல் தகுதி கிடைத்த பின்னர் இத்தகைய வாசிப்புகள் மேலும் வளர்ச்சி பெற்றன. ஓரிரு ஆய்வுகள் தொல்லியலோடு தொடர்புப்படுத்திச் செவ்வியல் பனுவல்களை அணுகியது 20 ஆம் நூற்றாண்டுச் சூழல். இந்நிலையில், கீழடி அகழாய்விற்குப் பிறகு, செவ்வியல் பனுவல்களோடு தொடர்புப்படுத்திப் பார்க்கும் நெறி அகழாய்வுகளில் தீவிரமானது. அதையொட்டி, செவ்வியல் பனுவல்களின் உள்ளடக்கம் மேலும் விரிவான ஆய்வுகளுக்கு இடமளிக்கிறது.

இந்தச் சூழலில் திருச்சியில் செயல்படும் ‘விழி’ ஆய்வு மன்றம் செவ்வியல் நூல்களை மீள்புரிதல் நோக்கில் ஆய்வு செய்யும் முனைவில் ஈடுபட்டது.

- முதல் கட்டமாக, ஏராளமான முன்திட்டமிடுதல்கள் மேற்கொள்ளப்பட்டு, நோக்கம் வரையறுக்கப்பட்டது.
- ஒரு கருத்தை, விளக்கத்தைப் புதிதாக இன்றைய தமிழாய்வுச் சூழலுக்கு வழங்குதலை நோக்கமாகக் கொண்டு செவ்வியல் இலக்கியங்களைத் தெரிவு செய்தது.
- பதிப்பு வரலாற்றுப் பணியிலும் உரைவேறுபாட்டுப் பணியிலும் பங்காற்றிப் பட்டறிவு பெற்ற நபர்கள் ஒன்றிணைக்கப்பட்டு எவ்வகையிலான தலைப்புகள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும் என்று ஆலோசனை செய்தது.
- அனைத்துப் பணிகளும் ஒருங்கிணைக்கப்பட்டு, ஏறக்குறைய ஒத்த தன்மை வாய்ந்த பொருண்மைகளில் ஒவ்வொரு செவ்வியல் நூலையும் சார்ந்த கட்டுரைகளைப் பெறுதல் என்று முடிவு செய்யப்பட்டது.
- கட்டுரையாளர்கள் தேர்வுசெய்யப்பட்டனர்; பணிகள் தொடங்கப்பட்டன. சுவடு-பதிப்பு-வெளியீடு- உரை மரபு, பிற துறைகள் அழகியல் – வடிவியல் (இலக்கியக் கொள்கை) மொழியாக்கம் என வகைப்படுத்தப்பட்டு கட்டுரைகள் பெறப்பட்டன.
- அறிஞர் குழுவின் பார்வைக்குக் கொண்டு சென்று திருத்தங்கள் செய்யப்பட்டன.
- கூகுள் மீட் வழியாக கட்டுரைகள் வாசிக்கப்பட்டு, விவாதிக்கப்பட்டுப் பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

- இவையெல்லாம் நிறைவுற்று, கட்டுரைகள் நூலாகத் தொகுக்கப்பட்டு, நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தால் பன்னிரண்டு நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இந்நிலையில், மீள்புரிதல் என்றால் என்ன என்று பார்ப்போம்.

"நறுவீ உறைக்கும் நாக நெடுவழிச்

சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய..."

இவை சங்க இலக்கியமான பத்துப்பாட்டில் உள்ள சிறுபாணாற்றுப் படை நூலில் இடம்பெற்றுள்ள வரிகள். 'வண்டுகள் மொய்க்கும் நறுமணம் கமழும் நாக மரங்கள் நிறைந்த நீண்ட வழியினில், தன்னுடைய பெரிய தேரை, படர இடமின்றித் தவித்த சிறுமுல்லைக்கு ஈந்து உதவிய'வன் வள்ளல் பாரி என்று போற்றப்படுகிறான்.

ஒரு முல்லைக்கொடி படரத் தவிக்கக்கூடாது என்று இரங்கிய குழந்தை மனம் வள்ளல் பாரிக்கு. இது செய்தி!

பாரி பயணம் செய்யும் வழியில் வண்டுகள், நாக மரங்கள், முல்லைக்கொடி ஆகிய மூன்று உயிர்கள் மட்டுமே சுட்டப்பட்டிருந்தாலும், இன்னும் எத்தனையோ உயிர்கள் இருக்கலாம். ஒருயிரைச் சார்ந்து இன்னோர் உயிர் என்பது இயற்கைச் சுழற்சிதான். இந்நிலையில், நெடுவழியில் முல்லை செழித்து வளர வேண்டும் என்று விரும்பி, அதற்கு உதவுவது சுற்றுச்சூழலைப் பேணும் உயர்ந்த வழி.

பாரியை மையமாகக் கொண்ட 'உலகு புரப்பவர் பாரி' என்கிற கவிதை நூலில் பாவலர் அறிவுமதி இவ்வாறு சுட்டிக் காட்டியிருக்கிறார்.

ஆம், பழைமையான இலக்கியங்களை மரபுவழிப் போக்குக்கு மாறாக, விமர்சன நோக்கில் ஆய்வு செய்து, அந்த இலக்கியங்களை இன்றைய காலத்துக்குப் பொருத்திப் பார்ப்பதுதான் மீள்புரிதலின் அடிப்படை நோக்கமாகும்.

அவ்வகையில், ஏற்கெனவே பல உரைகளைக் கண்டு பயணித்து வந்திருக்கிற செவ்வியல் இலக்கியங்கள் மீள்புரிதலுக்கு உள்ளாக்கப் பட்டிருக்கின்றன.

குறுந்தொகை

மீள்புரிதல் நோக்கில் குறுந்தொகை என்னும் நூலைப் பதிப்பித்திருக்கிறவர் இரா.அறவேந்தன்.



இந்த நூலில் இரா. அறவேந்தன் எழுதியிருக்கிற

1. 'குறுந்தொகைப் பதிப்பியல்கள் இதுவரையும் இனியும்' என்னும் கட்டுரையுடன் நூல் தொடங்குகிறது.

இந்நூலில் இடம்பெற்றுள்ள பிற கட்டுரைகள்:

2. தொல்காப்பிய விதிமீறலா? மொழி மாற்றமா? குறுந்தொகைச் சான்றுகள்,
3. லக்கான் நோக்கில் குறுந்தொகை,
4. அகவன் மகளை ஆங்கிலப்படுத்துதல்: மொழிபெயர்ப்புகளின் ஊடாக ஒரு சிறு பயணம்,
5. குறுந்தொகையில் கடவுட் கொள்கை ஒரு வரலாற்று வளர்ச்சி நோக்கு,
6. குறுந்தொகை 259 ஆவது பாடலின் ஆசிரியர் யார்?
7. குறுந்தொகை ஆங்கில மொழிபெயர்ப்புகளும் அவற்றின் தன்மையும்,
8. குறுந்தொகை-தொடரியல் பகுப்பாய்வு,
9. தொல்காப்பிய முன்னம் நோக்கு அடிப்படையில் குறுந்தொகைப் பாடல்கள்.

இந்நூலின் கட்டுரைகள் பதிப்பியல், மொழிபெயர்ப்பியல், மானுடவியல், மொழியியல், யாப்பியல், உளவியல் உள்ளிட்ட வகைகளில் ஆராய்ந்து எழுதப்பட்டுள்ளன.

ஐங்குறுநூறு

இந்த நூலைப் பதிப்பித்திருக்கிறவர் முனைவர் ம. லோகேஸ்வரன்.

இந்நூலில் இடம்பெற்றுள்ள கட்டுரைகள்:

1. ஐங்குறுநூறு : பதிப்பு வரலாறும் உரைப்போக்கும்,
2. கவிதையில் நோக்கில் ஐங்குறுநூறு,
3. ஐங்குறுநூறு, மன்யோசு வேனிற் பாடல்களில்

கருப்பொருள் பண்பாட்டு வயமாக்கல்,

4. முன்ன நோக்கில் ஐங்குறுநூற்றுக் கூற்றுகள்,
5. பெயரெச்சங்களின் தொடரமைப்பு: ஐங்குறுநூற்றை முன்வைத்துச் சில விளக்கங்கள்.

இந்த நூலில் ஜப்பானியப் பனுவலுடன் ஐங்குறுநூறு ஒப்பிட்டு ஆராயப்பட்டுள்ளது. இலக்கண, மொழியியல் தொடர்பான புதிய பார்வைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அகநானூறு

இந்நூலின் பதிப்பாசிரியர்: முனைவர் மா. பரமசிவன்.

இந்நூலில் இடம் பெற்றிருக்கும் கட்டுரைகள்:

1. அகநானூற்றுப் பதிப்பியல் அறிமுக நோக்கு,
2. அகநானூறு: செவ்வியல் பொருத்தப்பாடு,
3. அகநானூற்றுக் கவிதைகளில் மொழிப் பயன்பாடு: சில கூறுகள்,
4. அகநானூற்றின் வடிவம்: நேரிசையும் நிலைமண்டிலமும்,
5. அகநானூற்றுப் பாலைத்திணைப் பாடல்களும் மலையான மொழி பெயர்ப்புகளும்.

அகநானூற்றுப் பதிப்பு, உரை வரலாறு குறித்த செய்திகளோடு அகநானூற்றுப் பாடல்களின் செவ்வியல் தன்மைகள், அகநானூற்று மலையாள மொழிபெயர்ப்புகளின் சிறப்புகள், அவற்றில் காணப்பெறும் சிக்கல் ஆகியவற்றை மையமாகக் கொண்டு இந்தத் தொகுப்பு நூல் வெளிவந்திருக்கிறது.

புறநானூறு

இந்த நூலின் பதிப்பாசிரியர் அ. செல்வராசு. நூலில் இடம்பெற்றிருக்கும் கட்டுரைகள்:

1. புறநானூறு – பதிப்பும் பாடல் வைப்பும்,
2. புறநானூற்றில் உந்தும் உத்தும்,
3. புறநானூற்றிலும் ரோலானிலும் கருத்துப் புலப்பாடு,
4. சீறூர்ச் சமூக அமைப்பும் இனக்குழுப் பண்புகளின் சிதைவும்.

சாதாரண வீரர் தொடங்கி அரசர் வரையிலான அனைவரது புற வாழ்க்கையையும் பதிவு செய்துள்ளது, இந்த நூல். புறநானூற்றைப் பதிப்பு நோக்கிலும் இலக்கண நோக்கிலும் ஒப்பீட்டு நோக்கிலும் சமூகவியல் நோக்கிலும் புதிய பார்வையைத் தமிழுலகிற்கு அறிமுகப்படுத்துகிறது, இந்நூல்.

மதுரைக்காஞ்சி–நெடுநல்வாடை–பட்டினப்பாலை

நூலின் பதிப்பாசிரியர் அ.புவியரசு. இந்நூலில் நான்கு கட்டுரைகள் இடம்பெற்றிருக்கின்றன. அவை:

1. பதிப்பியல் நோக்கில் மதுரைக்காஞ்சி நெடுநல்வாடை பட்டினப்பாலை,
2. பட்டினப்பாலை - ஆங்கில மொழிபெயர்ப்பு,
3. திணைவெளி அழிவும் தெய்வீக வெளிக்கட்டமைப்பும்,
4. கவர்ந்திழுக்கும் தலைமைத்துவம்: நெடுநல்வாடைப் பாட்டுடைத் தலைவனின் வேலை வாழ்க்கைச் சமநிலை.

பட்டினப்பாலை ஆங்கில மொழிபெயர்ப்பாளர்கள் மூலத்தின் உட்கருத்து, பின்புலம், மரபுக் கோட்பாடு போன்ற கூறுகளை உள்வாங்கி வெளிப்படுத்தியுள்ள திறத்தை ஆய்கிறது இந்த நூல். திணைவெளியைத் தெய்வீக வெளியாக மாற்றிக் கட்டமைக்க முயலும் மதுரைக்காஞ்சியின் கருத்தியல் மாற்றத்தை முன்வைக்கிறது. அறத்தலைமையை முன்னிறுத்தும் தமிழ்ப் பண்பாட்டுச் சூழலில், கவர்ந்திருக்கும் தலைமைத்துவம் உடையவனாக நெடுநல்வாடைத் தலைவனை நக்கீரர் படைத்துக் காட்டியுள்ள திறத்தை வெளிப்படுத்துகிறது.

கலித்தொகை ரூ.115/–

இந்நூலின் பதிப்பாசிரியர்: மு.முனீஸ்மூர்த்தி.

இடம்பெற்றுள்ள கட்டுரைகள்:

1. கலித்தொகைப் பதிப்பு: வரலாறும் செல்நெறியும்,
2. மானிடவியல் நோக்கில் முல்லைக்கலி,
3. கலித்தொகையில் மொழியமைப்பு,

4. கலித்தொகையில் கருத்தாடலியல், நகர்வுகள்,
5. முப்பொருள் இயக்க வரலாறு: நிலமும் பொருளும் கலித்தொகையும்.



கலித்தொகையிலுள்ள மானுடவியல் தரவுகளைச் சமகால நிலவியல் அடையாளங்களுடன் பொருத்திக் காட்டுதல், கலித் தொகையின் திணைவைப்பு முறையின் பொருத்தப் பாட்டினை விவாதத்திற்கு உட்படுத்துதல், நாடகப் பாங்கிலான இந்நூற்பாடல்களைப் புலவர்(கள்) வாசகர்க்கு எடுத்துரைப்பதற்கு நடையியல் சார்ந்து கையாண்டுள்ள மொழி முறைமையை அடையாளப் படுத்துதல், கலியின் மொழியமையமைப்பு அதன் முந்தைய, பிந்தைய கால இலக்கியங்களோடு ஒத்தும், உறழ்ந்தும் வந்துள்ள பாங்கினை ஒப்பிட்டறிவித்தல் என்னும் நிலைகளிலான ஆய்வுக் கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

நற்றிணை ரூ.125/-

இந்நூலின் பதிப்பாசியர்: முனைவர் க. பாலாஜி.

இடம்பெற்றுள்ள கட்டுரைகள்:

1. நற்றிணைப் பதிப்பாக்கமும் மரபுரைகளும்,
2. நற்றிணையும் நல்ல திணையும்: சில கேள்விகள்,
3. நற்றிணையில் கிளைமொழி,
4. யாப்பியல் நோக்கில் நற்றிணை,
5. நாடக நிகழ்த்துதல் நோக்கில் நற்றிணைத் தனிமொழிப் பாடல்கள் முன்னிறுத்தும் தனிமனித உடல்.

நற்றிணைப் பனுவல்களைப் பல்வேறு கோணங்களில் அணுகுவது இந்நூலில் முதன்மைப் படுத்தப்பட்டுள்ளது. நற்றிணை என்னும் அகவொழுக்கம் சார்ந்த ஒற்றைச் சொல்லின் கவிதையியல் பின்புலம் தொடங்கி, பதிப்பு முறையியல், பா மரபு, நாட்டார் வழக்காற்றியல், நிகழ்த்துகலை எனப் பல தளங்களில் ஆய்வு செய்துள்ளன, இந்த நூலின் கட்டுரைகள்.

பரிபாடல் ரூ.95/-

இந்நூலின் பதிப்பாசிரியர்: ம.லோகேஸ்வரன்.

இடம்பெற்றுள்ள கட்டுரைகள்:

1. பரிபாடல் பதிப்பு வரலாறும் உரைப் போக்கும்,
2. பரிபாடலில் மொழியாக்கக் கூறுகள்,
3. வையைப் பாடல்களில் கிருதுமால்: வைதீகத்தை முரணிக்கும் நாட்டு மரபு.

பரிபாடல் பதிப்பு - உரைகளைப் பற்றியும், வையைப் பாடல்களில் குறிப்பிடப்பட்டுள்ள கிருதுமால் நதியின் ஓட்டப்பாதை, கடலில் கலக்கும் இடத்தைப் பற்றியும் பரிபாடலின் சொல்லாளுகையைப் பற்றியும் மாற்றுச் சிந்தனைகளை எடுத்துரைக்கின்றன இந்நூலில் இடம் பெற்றுள்ள கட்டுரைகள்.

பதிற்றுப்பத்து ரூ.150/-

இந்நூலின் பதிப்பாசிரியர்: முனைவர் இரா. மகிழேந்தி.

இடம்பெற்றுள்ள கட்டுரைகள்:

1. பதிற்றுப்பத்து: பதிப்பு - உரை - உரை மரபு,
2. பதிற்றுப்பத்து வெளி: குடியழிப்பும் வெளி விரிவாக்கமும்,
3. காக்கைபாடினி நச்செள்ளையாரின் பதிற்றுப்பத்துப் பாடல்களில் பெண்மொழிக் கூறுகள்,
4. வீரநிலை இலக்கிய ஆய்விற் பதிற்றுப்பத்து,
5. அழகியல் நோக்கில் பதிற்றுப்பத்து,
6. வேற்றுமைத் தொடர்களில் வேற்றுமைப் பொருள் புலப்பாடு: பதிற்றுப்பத்தின் இரண்டாம் பத்தை முன்வைத்து....

பதிற்றுப்பத்துப் பாடல்களில் இடம்பெறும் ‘வெளிகள்’ ஆக்கத்தோடும், பெண்மையோடும், அழிவோடும், ஆண்மையோடும் பொருந்தி நிற்கின்றன. இப்பாடல்கள் பதினான்கு வாய்பாடுகளில் வீரநிலை இலக்கியத் தன்மையை வெளிப்படுத்திக் காட்டுகின்றன; அழகற்றவையே அழகியலாக மாறி நிற்கும் பேரழகை விவரிக்கின்றன;

பேரளவிலான இலக்கணப் புணர்ச்சி நுட்பங்களைத் தமக்குள் கொண்டுள்ளன என அரிய செய்திகளை இந்த நூல் விளக்குகின்றன.

முத்தொள்ளாயிரம் ரூ.110/–

இந்நூலின் பதிப்பாசிரியர்: அ.செல்வராசு.

இடம்பெற்றுள்ள கட்டுரைகள்:

1. முத்தொள்ளாயிரம்: பதிப்பும், பாடுபொருளும்,
2. முத்தொள்ளாயிரத்தில் பகைப்பெண்டிர் குறித்த சித்திரிப்புகள்,
3. முத்தொள்ளாயிரம் முத்துமாலை ஆன கதை,
4. முத்தொள்ளாயிர உரை வரலாற்றில் ஒரு மைல்கல்: சி. கணேசையர் உரைக்குறிப்புகள்.

முத்தொள்ளாயிரப் பாடல்கள் அழகியல் சார்ந்த பாடல்கள் என்னும் பொதுப் பார்வையிலிருந்து மாறி, அவற்றை வெவ்வேறு கோணங்களில் ஆராய்ந்துள்ள கட்டுரைகள் இந்த நூலில் இடம்பெற்றுள்ளன.

முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு ரூ.175/–

இந்நூலின் பதிப்பாசிரியர்: நித்தியா அறவேந்தன்.

இடம்பெற்றுள்ள கட்டுரைகள்:

1. முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு: பதிப்பு வரலாறு,
2. முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு – யாப்பியல்,
3. வேறுபட்டு நின்றாய் முருகா! மீள் பார்வையில் குறிஞ்சி,
4. பெருங்குறிஞ்சி (குறிஞ்சிப்பாட்டு)ச் சுவடிகள்,
5. குறிஞ்சிப்பாட்டு: மீள்மொழிபெயர்த்து மதிப்பிடல்,
6. முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டில் பெண்கள்,
7. முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டில் ஆக்கப்பெயர்கள் – ஒப்பீடு.

முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு என்னும் இரு நூல்களைப் பதிப்பியல், மொழிபெயர்ப்பியல், சுவடியியல், மொழியியல், இலக்கணவியல் என்னும் நோக்குநிலைகளில் ஆராய்ந்துள்ள கட்டுரைகளைக் கொண்ட நூல் இது.

தொல்காப்பியம் ரூ.170/–

இந்நூலின் பதிப்பாசிரியர்: மா. ஆசியாதாரா.

இந்நூலில் இடம் பெற்றிருக்கும் கட்டுரைகள்:

1. ஆத்திரையனின் பொதுப்பாயிரமும் தொல்காப்பியப் பிரதிகளும்,
2. தொல்காப்பிய நோக்கில் யூங்கியம்,
3. தொல்காப்பிய யாப்பு,
4. தொல்காப்பியத்தில் நாநிலப் பூதம்,
5. தொல்காப்பியர், அரிஸ்டாட்டில் அடையாளங்கண்ட இயற்கைக் கூறுகள்,
6. வினையெச்சம் – வினைமுதல் உறவின் ஐந்து நிலைகள்: தொல்காப்பியப் பின்னணியில் சங்க இலக்கிய வினையெச்சத் தொடர்கள்,
7. தொல்காப்பியப் பதிப்புகள்: வளர்ச்சியும் வரலாறும்.

'இலக்கியமுறை உளவியலின் தந்தை' தொல்காப்பியர், தொல்காப்பியம் ஒரு பூதநெறி நூல், ஓர் உத்தியாகப் பயன்படுத்தப் பட்டிருக்கும் யாப்பு, வைதிகப் பனுவல் என்ற அடையாளத்தைக் கடந்ததற்குத் துணையாகி நின்ற பதிப்புகள் என்பனவாக, தொல்காப்பியம் குறித்து ஆழ்ந்த ஆய்வுரைகளைக் கொண்ட நூல் இது!

மீள்புரிதல் என்பது பழைய பனுவலை, புதிய கண்ணாடியைக் கொண்டு பார்ப்பது. அதாவது, இக் கட்டுரையின் தொடக்கத்தில் பார்த்ததைப் போல, பாரியை வெறுமனே ஒரு முல்லைக் கொடியின் மீது இரக்கம் கொண்டவனாக மட்டும் பார்க்காமல், சுற்றுச் சூழலைப் பேணும் அக்கறை கொண்டவனாகப் பார்ப்பத்.

சிலப்பதிகாரத்தை எடுத்துக் கொண்டால், கண்ணகி 'கற்பின் இறைவி' என்று கொண்டாடப்பட்டார். மீள்புரிதலில் நீதிக்காகக் குரல் கொடுத்த புரட்சிப் பெண்ணாகப் பார்க்கப் படுகிறார்.

மீள்புரிதல் என்பது இன்றைய இலக்கியத் தளத்தில் ஓர் அறிவார்ந்த பயணமாகும். காண்கின்றவரின் அறிவாற்றலுக்கேற்ப எந்த ஓர் இலக்கியத்தையும் நெகிழ்த்திப் பார்க்க முடியும். ●

அஞ்சலி

ஆவணப் பதிப்பின் முன்னோடி

ர.பூங்குன்றன்



கல்வெட்டுகள் குறித்த ஆர்வத்தை உருவாக்கவும், கல்வெட்டுகள் மூலம் வரலாற்றை அறியவும் இளம் தலைமுறையினருக்கு வழிகாட்டும் பணியில் ஈடுபட்டுவந்த கல்வெட்டு ஆய்வாளர் க.இராசகோபாலின் மறைவு வரலாற்று ஆய்வுத் துறைக்குப் பேரிழப்பு.

சிறந்த வழிகாட்டி

ஒருங்கிணைந்த ராமநாதபுரம் மாவட்டத்தின் ஆத்தங்குடியில், 1954 மார்ச் 5இல் இராசகோபால் பிறந்தார். திருச்சி பெரியார் கல்லூரியில் முதுகலை வரலாறு பயின்றார். 1974இல் தமிழக அரசு தொல்லியல் துறை நடத்திய கல்வெட்டியல், தொல்லியல் முதுபட்டய வகுப்பில் சேர்ந்து படித்தார். அதே ஆண்டு, கல்வெட்டு ஆய்வாளராகப் பணியில் சேர்ந்தார். பல கல்வெட்டுத் தொகுதிகளை வெளியிட்டிருக்கும் இவர், நூற்றுக்கும் மேற்பட்ட ஆய்வு உரைகளையும் உருவாக்கினார்.

எந்த ஆய்வை எழுதினாலும் அதற்கான எல்லாத் தரவுகளையும் கணக்கில் கொள்வது இராசகோபாலின் சிறப்பம்சம். தொல்லியல் துறை கல்வெட்டுப் பயிற்சி நிறுவனத்தின் ஆசிரியராகப் பொறுப்பேற்ற பின் சிறந்த மாணவர்களை உருவாக்கிய அவர், பல மாணவர்களுக்கு வேலையும் வாங்கித் தந்தார். 'கல்வெட்டுகளில் இடம்பெறும் அளவீடுகள்' என்கிற தலைப்பில் முனைவர் பட்ட ஆய்வு செய்தார்.

பெருவழிக் கல்வெட்டு

தொல்லியல் துறை வெளியிட்டுவரும் 'கல்வெட்டு காலாண்டு' இதழில் ஏராளமான கட்டுரைகளை இராசகோபால் எழுதியிருக்கிறார். தருமபுரிக்கு அருகில் அதியமான் பெருவழி என்கிற பெருவழிக் கல்வெட்டைக் கண்டுபிடித்தார். அந்தக் கல்வெட்டில் 'அதியமான் பெருவழி நாவற்றாவலத்திற்கு காதம் 29, என்கிற வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது. அந்த எண் பழைய தமிழ் எழுத்து முறையில் எழுதப்பட்டுள்ளது. இந்த காதம் 29 என்பதைப் படிக்காதவர்களும் தெரிந்துகொள்ள இரண்டு பெரிய வட்டங்களையும் ஒன்பது சிறிய வட்டங்களையும் வரைந்து காட்டியுள்ளனர். பெரிய வட்டம் பத்து என்கிற எண்ணையும், சிறிய வட்டம் ஒன்று என்கிற எண்ணையும் குறிக்கும். அவர் இந்தப் பெருவழியைப் பற்றி விரிவாக ஆய்வுசெய்துள்ளார்.

மாணவர்களுக்கு உறுதுணை

தொல்லியல் துறையில் கல்வெட்டுப் பயிற்சி நிறுவனத்தின் ஆசிரியராகப் பொறுப்பேற்ற பிறகு, அவரிடம் படித்த மாணவர்கள் தமிழ்நாட்டு அருங்காட்சியகங்கள், தொல்லியல் துறை கிளை அலுவலகங்களில் பணியாற்றினர் – பணியாற்றி வருகின்றனர். தன்னுடைய மாணவர்களுக்குப் பணிவாய்ப்பு பெற்றுத் தருவதில் முனைப்பு காட்டினார். சில தொல்லியல் சார்பான திட்டங்களில் (Projects) பணி அமர்த்தினார். மாணவர்கள் படிக்கும்போதே பொருளுதவி, நூல் உதவி உள்ளிட்ட பல்வேறு உதவிகளைச் செய்தார்.

அவருடைய அரவணைப்பில் மாணவர்கள் மகிழ்ச்சியாகக் கல்வெட்டுப் பயிற்சி பெற்றனர். சில மாணவர்கள் கல்வெட்டு ஆய்வில் இன்றும் மேலோங்கி நிற்கின்றனர். இதற்குக் காரணம், மாணவர்களை அவர் வழி நடத்திய முறை எனலாம். மாணவர்கள் மீது அவர் காட்டிய நேசமும் மாணவர்கள் அவர் மீது காட்டிய அன்பும் குறிப்பிடத்தக்கவை. ஒரு பொருள் பற்றிப் பாடம் எடுக்கும்போது எல்லாத் தரவுகளையும் தொகுத்து ஆய்வுசெய்த பிறகே பாடம் நடத்துவார்.

இறுதிவரை உழைத்தவர்

தமிழகத் தொல்லியல் கழகம் உருவானபோது தொல்லியலாளர் குழுவுடன் இணைந்து பல ஆலோசனைகளைக் கொடுத்துக் கழகம் உருவாகப் பாடுபட்டார். அக்கழகத்தின் வளர்ச்சியில் இறுதிவரை ஆர்வம் காட்டியுள்ளார். 'ஆவணம்' என்கிற இதழை உருவாக்கும்போது ஓய்வின்றி உழைத்தார். புதிய இதழ் பணியைச் செய்து கொண்டிருந்தபோது அவர் காலமானார்.

நன்றி: இந்து தமிழ்திசை

●

கட்டுரையாளர்: தொல்லியல் அறிஞர்

அஞ்சலிக் கட்டுரை

கரிசலின் வெக்கையை எழுத்துகளின் வேட்கையாகப் புனைந்தவர் பூமணி

முனைவர் நா.சுலோசனா

மண்ணுக்கும் மனிதனுக்குமான உறவு எவ்வளவு நெருக்கமானது என்பதைப் படைப்பாளர்களின் எழுத்துகளில் காணலாம். அதிலும் எழுத்தாளனுக்கு மண் மீதும், மண்ணுக்கு எழுத்தாளன் மீதும் உள்ள உறவு தீராக் காதலாகத் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. பூமணி, தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி அருகேயுள்ள ஆண்டிப்பட்டி என்னும் சிற்றூரைச் சேர்ந்தவர். இவரது இயற்பெயர் பூ.மாணிக்கவாசகம். பெற்றோர் பூலித்துரை, தேனம்மாள். பூ.மாணிக்கவாசகம் என்ற தன்னுடைய இயற்பெயரை எழுத்துலகிற்காகப் பூமணி என்று புனைந்துகொண்டவர்.

பூமணி, இளையரசனேந்தலில் தன் தொடக்ககாலப் பள்ளிப்படிப்பையும், விருதுநகர் செந்திக்குமார நாடார் கல்லூரியில் இளநிலை இயற்பியல் பட்டப் படிப்பையும் பயின்றவர்.

தமிழ்நாடு அரசு கூட்டுறவுத் துறையில் முதுநிலை ஆய்வாளராகப் பணியில் சேர்ந்த இவர், கூட்டுறவு துறைத் துணைப் பதிவாளராக உயர்ந்து, சென்னையில் முப்பது ஆண்டுகள் பணியாற்றி பணி நிறைவுக்குப்பின் தன் சொந்த ஊரிலே வாசம் செய்து வந்தார்.

அம்மா என்னும் கதைசொல்லி:

பூமணி கல்வி அறிவும் இலக்கிய அறிவும் பெற்றதற்கு அவர் அம்மாவே முதன்மைக் காரணம் என்று பல நேர்காணல்களில் பதிவு செய்திருக்கிறார். சிறுவயதில் தன் அம்மாவிடம் கேட்டறிந்த நூற்றுக்கணக்கான மாயமந்திரக் கதைகள்தான் அவரின் கற்பனையை வளர்த்து இலக்கியத்திற்கு ஆட்படுத்தியிருக்கின்றன. 'மழைக்கஞ்சியாக கதைகளைக் கரைத்து ஊட்டிய அம்மாவுக்கு' என சாகித்ய அகாதெமி விருது பெற்ற ‘அஞ்ஞாடி’ நாவலைத் தனது தாய்க்குச் சமர்ப்பணம் செய்திருக்கிறார். ‘அஞ்ஞாடி’ என்றால் அம்மாடி என்று பொருள். கரிசல்காடு என்று அழைக்கப்படும் கோவில்பட்டியைச் சுற்றியுள்ள பகுதியின் வாழ்க்கையை, குறிப்பாக சமூகத்தால் ஒடுக்கப்பட்டு, பொருளாதாரத்தால் நசுக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையைத் தன் படைப்புகளின் பின்னணியாகக் கொண்டிருந்தார் பூமணி. தன் அம்மா ஒரு தேர்ந்த கதை சொல்லி என்கிறார் பூமணி. நிகழ்ச்சிகளைச் சிறிய சிறிய தகவல்களாகக் கோத்துக் கண்ணெதிரே காட்ட முடியும். அதுவே பூமணியின் அழகியலாக விரிந்தது. இன்று வரையில் நீடித்தது. எது

சாராம்சமானதோ, எது சுவாரசியமானதோ அதை மட்டுமே சொல்லவேண்டும் என்ற கதை சொல்லும் வித்தையை பூமணி தன் அம்மாவிடமிருந்தே கற்றிருக்கிறார்.

இலக்கிய அடிநாதம்:

பூமணியின் இலக்கிய வாழ்க்கையின் வழிகாட்டியாகத் திகழ்ந்தவர் கல்லூரியில் அவருக்கு ஆசிரியராக இருந்த சி.கனகசபாபதி ஆவார்.

“யதார்த்தம்னு ஒரு வார்த்தையை அவர்தான் சொன்னார். இலக்கியத்தையும் யதார்த்தத்தையும் பிரிக்க முடியாதுன்னு எங்கிட்ட அவர்தான் நிறுவினார். அதோட எனக்குள்ள அட்டைக்கத்தி வீசிட்டிருந்த கல்கி, அகிலன், நா.பா. எல்லாரும் காணாமப் போயிட்டாங்க. இலக்கியம்னா என்னைச் சுத்தி உள்ள வாழ்க்கையோட மொழிப்பதிவுதான்னு புரிஞ்சுக்கிட்டேன்” என்று குறிப்பிட்டிருக்கிறார் பூமணி. "எந்த விளக்கமும் இல்லாமலேயே எனக்கு யதார்த்தம்னா என்னன்னு புரிஞ்சது. எங்க அம்மா எனக்குச் சொன்ன வாழ்க்கை நிகழ்ச்சிகள்தான் யதார்த்தம். எங்க ஊர்ல நான் கேட்டு வளர்ந்த மனுஷங்களோட கதைகள்தான் யதார்த்தம்” என்று பூமணிக்கு வாழ்வின் யதார்த்தத்தை விளக்கியவர் சி.கனகசபாபதி.

எழுத்தாளன் யார்?

பூமணியின் இலக்கிய வாழ்க்கையில் எழுத்தாளர் கி. ராஜநாராயணன் மூன்றாவது பெரிய ஆளுமையாக இருந்திருக்கிறார். கி. ராஜநாராயணனின் கதைகள் அளித்த கொந்தளிப்பைப் பலமுறை பல வகைகளில் பூமணி பதிவு செய்திருக்கிறார்.

கதையின் கருவை, அது சொல்லும் செய்தியை, அப்படியே யார் வேண்டுமானாலும் சொல்லிவிடலாம். அதை ரத்தமும் சதையுமான மனித வாழ்க்கையாகச் சட்டகத்துக்குள் செதுக்கப்பட்ட ஓவியமாகச் சொல்லவே எழுத்தாளன் தேவைப்படுகிறான். அந்த எழுத்துத் தச்சன்தான் பூமணி.

ஊக்கமும் ஆக்கமும்:

தான் பார்த்துப் பழகிய மண்ணும் மக்களுமே ஒரு படைப்பாளிக்குக் கதைக் களங்களாகின்றன. அப்படித்தான் பூமணிக்கும். வயலில் அறுவடை நடந்து கொண்டிருந்த வரப்பு வழியாக நடந்து சென்ற பூமணி அறுவடை செய்து கொண்டிருந்த பெண்களைக் கவனித்திருக்கிறார். அதில் ஒரு பெண்ணின் கழுத்தில் மட்டும் தாலியில்லை. அவள் அறுத்தவள். அக்கணத்தில் என்னென்னவோ நிகழ்ந்தது என்கிறார் பூமணி. 1971இல் பூமணியின் முதல் சிறுகதை ‘அறுப்பு’ தாமரை இதழில் வெளிவந்திருக்கிறது. அதன் பிறகு தாமரை இதழின் ஆசிரியராக இருந்த தி.க.சிவசங்கரன் பூமணியைத் தொடர்ந்து எழுத ஊக்குவித்திருக்கிறார்.

இலக்கியச் சிந்தனை பரிசு, விளக்கு விருது, அக்னி விருது, திருவனந்தபுரம் தமிழ்ச் சங்க விருது, விஷ்ணுபுரம் விருது, சாகித்திய அகாதெமி விருது என தன்னுடைய ஆக்கங்களுக்குப் பெற்ற விருதுகளைப் பற்றிக் கூறும்பொழுது, "விருதுகள் மீது எனக்கு விருப்போ வெறுப்போ கிடையாது. அதை எதிர்பார்த்து எழுதினால் அது இலக்கியத்திற்குச் செய்யும் பெரிய துரோகம். என் எழுத்து என்னைச் செழுமைப்படுத்தணும், முழுமைப்படுத்தணும். பிறர் சிந்தனையைக் கிளறணும். என் வலியை, வாதையை, இன்ப - துன்பத்தை அவர்களுக்கு உணர்த்தணும். அந்த வெற்றிதான் எனக்குக் கிடைக்கும் பெரிய விருது" என்று தன்நிலைப்பாட்டைப் பிரகடனப்படுத்தியிருக்கிறார்.

பூமணி தேசிய திரைப்பட நிறுவனம் (NFDC) நிதியுதவி பெற்று தன் 'கருவேலம்பூக்கள்’ என்னும் நீண்ட கவிதையை அதே தலைப்பில் ‘கருவேலம்பூக்கள்’ என்னும் திரைப்படமாக எழுதி இயக்கினார்.

'வெக்கை' நாவல் இந்தியில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. 1982ஆம் ஆண்டு எழுதப்பட்ட இந்நாவல், 2019இல் திரு.வெற்றிமாறன் இயக்கத்தில் 'அசுரன்' என்ற பெயரில் தமிழ்த் திரைப்படமாக வெளிவந்துள்ளது. தெலுங்கில் இப்படம் 2021 ஆம் ஆண்டு 'நாரப்பா’ என்ற பெயரில் மறு ஆக்கம் செய்யப்பட்டது.

சிறுகதை, நாவல், திரைப்பட ஆக்கம் என்பதுடன் கவிஞர் என்ற அடைமொழியும் பூமணியுடன் பற்றிக் கொண்டது. 1966ஆம் ஆண்டு முதல் தொடங்கிய எழுத்துப் பயணம் கவிதைகள், சிறுகதைகள், நாவல், திரைப்பட இயக்குநர் என்று விரிந்திருக்கிறது. வயிறுகள், ரீதி, நொறுங்கல்கள், நல்லநாள் இவை பூமணியின் சிறுகதைகளாகும். பூமணி எழுதிய எட்டு சிறுகதைகள் ’எட்டு கதைகள்’ என்ற தலைப்பில் க்ரியா பதிப்பகத்தால் வெளியிடப்பட்டு இலக்கியக் கவனம் பெற்றிருக்கிறது. பூமணியின் 51 சிறுகதைகள் அடங்கிய தொகுப்பு “அம்பாரம்” என்ற தலைப்பில் பொன்னி பதிப்பகத்தால் 2007இல் வெளியிடப்பட்டது.

பூமணியின் முதல் நாவலான 'பிறகு' 1979ஆம் ஆண்டு வெளியானது. தொடர்ந்து வெக்கை, நைவேத்தியம், வரப்புகள், வாய்க்கால், அஞ்ஞாடி, கொம்மை ஆகிய நாவல்களை எழுதியிருக்கிறார்.

'அஞ்ஞாடி', க்ரியா பதிப்பகத்தால் 2012ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சமணர் கழுவேற்றம், பாண்டிய மன்னர்களின் வீழ்ச்சி, நாயக்கர்களின் வருகை, பாளையக்காரர்களிடையே நடைபெற்ற மோதல், சிவகாசி பகுதியில் நடந்த சாதிக் கலவரம் ஆகியவற்றை 'அஞ்ஞாடி' பதிவு செய்திருக்கிறது. கரிசல் நிலத்தில் நிகழ்ந்த சமூக மாற்றங்களை, சாதிய உறவுகளைக் கூறும் நாவலாகத் திகழ்கிறது. 'அஞ்ஞாடி', 2014ஆம் ஆண்டு சாகித்ய அகாதெமி விருது பெற்றது.

கி.ரா. குறைவாக எழுதிய ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வியலை நிறைவாக எழுத்துகளால் நிரப்பியவர் பூமணி.

பூமணி காட்டும் புனைவுலகில் சாதியின் ஏற்றத்தாழ்வுகளும் சுரண்டல்களும் மானுட உறவுகளும் நிறைந்துள்ளன.

கரிசல் வாழ்வின் ஆவணங்கள்:

கரிசலைப் பற்றிய சித்திரத்தைத் தீட்டியதில் கி.ரா.வும் பூமணியும் முக்கிய ஆளுமைகள். கரிசல் காட்டின் வெக்கைக்கு வேப்ப மரங்களும் கருவேல மரங்களும் மட்டுமே நீடித்து நிலைத்திருக்கும். அதேபோலத்தான் கி.ரா., 'வேம்பு' என்றால் பூமணி 'கருவேலம்' என நெகிழ்வாகச் சொல்லியிருக்கிறார் எஸ்.ராமகிருஷ்ணன்.

சமூகத்திற்குக் கடத்தியது:

“அவனுக்கு நாய் போச்சுன்னு கஷ்டமாயிருக்கு.. எனக்கு நாயோட போச்சேன்னு ஆறுதலாயிருக்கு..”, “காடு இருந்தா எடுத்துக்கிடுவானுவ.. ரூபா இருந்தா புடுங்கிக்கிடுவானுவ.. ஆனா, படிப்ப மட்டும் நம்மகிட்ட இருந்து எடுத்துகிடவே முடியாது.. .” எவ்வளவு பெரிய செய்தியை எழுத்தின்மூலம் மிக எளிதாகக் கடத்தும் திறன் படைப்பாளருக்கே உரியதாகும்.

"பூ உதிர்ந்தாலும்
மணி மணியான எழுத்துகளால்
வாசகன் மனத்தில்
வாசமாக நிறைந்திருப்பார்
பூ. மாணிக்கவாசகம் என்ற பூமணி"

இப்படித்தான் பூமணி என்னும் பொன்மணி ஒலித்துக் கொண்டேயிருக்கும் வாசகனிடம் எழுத்துகளாக.

●

கட்டுரையாளர்: ஆய்வாளர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

புதிய வரவு

வெளியீடு: கற்பகம் புத்தகாலயம்
விலை: ரூ.220/-
தொடர்புக்கு: 044-24314347

தமிழ் இலக்கியங்களில் அறிவியல் தொழில்நுட்பம்

நடராஜன் அறவாழி

தமிழ் இலக்கியங்களை அழகுணர்வு கொண்டவையாக மட்டும் பார்க்காமல் அவற்றில் உள்ள அறிவியல் கூறுகளைப் பல நிபுணர்கள் பல்வேறு காலகட்டங்களில் எடுத்துரைக்கிருக்கிறார்கள். தமிழ இலக்கியங்களில் காணப்படும் மேலாண்மைக் கருத்துகள், வேளாண் தொழில்நுட்பம் பற்றிய செய்திகள், அவற்றில் இடம்பெற்றுள்ள மலர்கள், பறவைகள், விலங்குகள் போன்ற செய்திகள் நுட்பமானவை. நம் முன்னோர்கள் எந்த அளவிற்கு இயற்கையை உற்றுநோக்கி வாழ்ந்திருக்கிறார்கள் என்பதை நம்மால் அறிந்துகொள்ள முடிகிறது. அந்த வகையில் இன்னொரு மேன்மையான வரவாக திரு. நடராஜன் அறவாழி அவர்கள் நுண்மாண் நுழைபுலத்துடன் ஆக்கித் தந்திருக்கிற 'தமிழ் இலக்கியங்களில் அறிவியல் தொழில்நுட்பம்' என்கிற நூல் மிகவும் முக்கியமானது.

மதிப்புரை

கடுகும், கற்பூரமும் கமழும் கதைவனம்



விலை: ரூ.210 |
வெளியீடு: என்சிபிஎச், சென்னை

முனைவர் சந்திரன் கடுகின் காரம் என்கிற தலைப்பில் 100 கதைகளை எழுதி தொகுத்து புத்தகமாகியுள்ளார். அவை அனைத்தும் அளவில் சிறுத்தாலும் கருத்தில் குறையாத கதைகளாக நிறைகின்றன. என்.சி.பி.ஹெச். நிறுவனம் இந்த நூலை அழகுற பதிப்பித்து உள்ளது.

பொதுவாக, கதை சொல்வது உலகப்பரவலான ஒன்று போல் தோன்றலாம். ஆனால், சொல்லிப் பார்த்தால்தான் தெரியும், கதைகளை உற்பத்தி செய்வதன் பின்னிருக்கும் கடினம். சிறு வயதிலிருந்து, தமிழ்ச்சமூக வாழ்வு என்பது முற்றிலும் கதைகளால் பின்னப்பட்டது. கதைகளை அகற்றிவிட்டு ஒரு பால்யகாலத்தை யாராலும் கற்பனை செய்ய முடியாது. பண்டைய பழக்கவழக்கங்களில் தொடங்கி, இன்றைய கல்வி முறைக்குள் தன் செல்வாக்கை இழந்துவிடாமல் தொடர்ந்துகொண்டிருக்கும் வெகுசில அம்சங்களில் கதை சொல்லுவதும் ஒன்று.

கல்விப்புலத்தில் கதைகளுக்கான மரியாதை அதிகம். மாணவர்கள் மனதில் 'பிடித்தமான ஆசிரியர்' என்று ஒருவர் மாறுவதற்கு முதன்மைச் குணச்சித்திரமாக முன்வைப்பது ஆசிரியரின் கதைசொல்லும் திறனைத்தான் . நூற்றாண்டு கண்டு மிளிர்ந்து கொண்டிருக்கும் மதுரையின் பாரம்பரியமிக்க , நான் உள்பட பலரும் பயின்று வந்திருக்கும் எங்கள் பள்ளியில் பயின்று தற்போது ஆசிரியராகப் பணிபுரியும் முனைவர் ஞா.சந்திரன் நேர்த்தியான கதைசொல்லி என்பது இந்தப் புத்தகத்தின் மூலமாக நன்கு புலப்படுகிறது.

ஆத்மார்த்தி

நேர்த்தியான தலைப்புகள், சுருக்கமான கதைத் திருப்பங்கள், ஒவ்வொரு கதையிலிருந்தும் வாழ்வுக்கு எடுத்துச் செல்வதற்கான குன்றாத வைர நிகர் விஷயங்கள் எனப் பார்த்துப் பார்த்துச் செதுக்கியிருக்கிறார். தன் கதைகளை. மனிதனின் ஆதார நற்குணங்களுக்கு வாழ்வு பல பரிசுகளை தனக்குள் ஒளித்து வைத்திருப்பதைப் போலவே பொறாமை போன்ற அவனது கீழ்மைகளுக்காக காலமெல்லாம் தூக்கித் கிடப்பதற்கான தண்டனைகளையும் தயாரித்துத் தருகிறது என்பதை ஆணித்தரமாக விளக்குகிற பல கதைகள் இதில் இடம்பெற்றுள்ளன. உதாரணமாக, கூழும் குச்சியும் என்கிற கதை அப்படிப்பட்டது. அதன்

முடிவில் மனைவியின் அறிவற்ற தன்மை கணவன் காலமெல்லாம் தேடிக் கொண்டிருந்த அரிய மூலப் பொருளை நெருப்பிலிட்டு வீணடித்து விடுவதை எடுத்துச் சொல்கிறது. சிந்தித்தால் பலர் வாழ்விலும் கூழும் குச்சியும் வந்து கொண்டே இருக்கின்றன என்பதை உணரலாம்.

மனிதனின் நினைவுத்திறன், எழுத்தும் அச்சும் கண்டறியப்படும்வரை வாய்மொழி இலக்கியங்களாகவே சகலத்தையும் கடத்திவந்தது. பதிப்பிக்கப்படும்வரை பல நூறாண்டுகால நினைவாற்றலின் மூலமாகச் சேமித்து வைக்கப்பட்ட கலை வடிவங்களுக்கு முன்னோர்களை நோக்கி நன்றி சொல்வது நமது கடமை.

கதைகளின் மூலமாகத்தான் காத்திரம் மிகுந்த பலவும் தப்பிப் பிழைத்தன என்பது முழுமுதல் உண்மை என்பதைப் போலவே, காலம் கடந்து பாய்ந்துகொண்டிருக்கும் வெள்ள நிரந்தரமாகவே சந்திரனின் இந்தத் தொகுப்புக் கதைகளைப் புரிந்துகொள்ள முடிகிறது.

ஏற்கெனவே எல்லாமே சொல்லப்பட்ட கதைகள் என்ற கூற்று எப்போதும் உண்டு. இருப்பவற்றை மாற்றி மாற்றிச் சொல்லிக்கொண்டிருப்பது ஒருபுறம். இல்லாப் புதியவற்றைக் கற்பனித்துக் காண்பது ஒருபுறம், என்னைப் பொறுத்தமட்டில் கதை என்பது கலைப்பூர்வமான சகமனித வாஞ்சை, ஒரு மனிதன் சமூகத்தின் மேல் தெளிக்கும் ஆதுரம். கூட்டுப் பிரார்த்தனைக்கு ஒப்பான தனிநபர் மெனக்கெடல். அப்படித்தான் கதை ஆசிரியர் பல கதைகளைச் செதுக்க முனைகிறார்.

கடவுளும் லாட்டரியும் என்கிற கதை இந்த நூற்றாண்டின் தற்கணத்தைக் கதைப்படுத்தினாற் போல் மினுங்குகிறது. கடைசி வரை தனக்கு லாட்டரி சீட்டில் பரிசு விழாததற்காகக் கடவுளை நொந்து கொள்கிறான் ஒருவன். அவன் முன் தோன்றும் கடவுள் அவனிடம்" நீ ஒரு முறையாவது லாட்டரி சீட்டு வாங்கினால் தானே அப்பா என்னால் உனக்கு உதவ முடியும்?" என்று கேட்டு மறைகிறார்.

வாழைப்பழத்தைத் தந்தால் போது அது யாராவது உரித்து அதை ஊட்டியும் விட வேண்டும் என்று எதிர்பார்க்கும் குணம் மிகுந்த பலரும் பெருகிக் கிடக்கும் காலத்தை சவுக்கால் அடிக்கும் கதை இது.

வலுத்த கதைகள் வாழும் என்பது நியதி. சொல்லும் திறனும் எழுதும் திறனும் மிகுந்து ஒளிர்வது இந்தக் கதைகளின் சிறப்பு. ஆழ்ந்து சிந்திப்பதற்கான முடிச்சுகளைத் தன்னகத்தே கொண்டிருக்கும் இக்கதைகள் எளிதில் எடுத்துச்சொல்லுகிற இயல்போடும் இருப்பது சிறப்பு. அந்த வகையில், இந்தத் தொகுப்பில் காணப்படுகிற சந்திரனின் பல கதைகள் கட்டி வெல்லங்களைப் போல் மட்டுமல்லாது நாட்டுச்சர்க்கரை போலும் இனிக்கின்றன. ஏற்கெனவே நன்கு அறிந்த கதைகளை முன்பு பார்த்திராத இன்னொரு கோணத்தில் காணத்தருவதன் மூலமாக புதிய கதைகளாக மாற்றிவிடும் வல்லமை சந்திரனுக்கு வாய்த்திருக்கிறது. தேர்ந்த மாயாஜால நிபுணர்கள் கையிலிருக்கிற ஒரே பொருளை விதவிதமான பொருட்களாக மாற்றுவது போல் உருமாற்றம் பெறுகிற அத்தகைய கதைகள் ஈர்க்கின்றன.

அதிர்ஷ்டமா துரதிஷ்டமா என்கிற தலைப்பை கேள்வியாக்கி அந்தக் கதை முடிகிறது. அந்தக் கேள்வி பலரும் தங்களுக்குள் கேட்டுக் கொள்வதற்கானது. உண்மை எது என்கிற கதையும் அதன் புத்திசாலித்தனமான அணுகுமுறைக்காக ரசிக்க வைக்கிறது. சந்திரனின் பெரிய பலம் இந்தக் கதைகளில் வரக்கூடிய வசனப் பகுதிகள் நடைமுறை பேச்சு வழக்கில் அமைத்து இருப்பது. ஒருவேளை செந்தமிழில் வசனங்கள் இருந்திருக்குமேயானால் கொஞ்சம் செயற்கை நெடி தட்டி இருக்கும் என்பது என் கருத்து.

குழந்தைகளுக்கு மட்டுமின்றி, பெரியவர்களுக்காகவும் இவற்றில் பல கதைகள் விஷயதானம் அளிப்பது கூடுதல் சிறப்பாகிறது. சொல்லப்போனால், 2000-க்குப் பின்னதான தலைமுறையில் குழந்தைகளோடு பெரியவர்களும் கதைகளைக் கேட்கவேண்டியவர்களாகவே இருக்கிறார்கள். காணொளிகளிலேயே குவிந்து கிடக்காமல் காகிதங்களை நோக்கித் திருப்புகிற நற்காரியத்தையும் இக்கதைகள் மேற்கொள்ளக்கூடும். அதற்கு சந்திரன் இவற்றில் சில கதைகளை காணொளிகளாக்கி, கவனம் திருப்பவும் முயலலாம்.

இந்தத் தொகுப்பில் என்னை மிக மிகக் கவர்ந்த கதை என "தேங்காய், வாழைப்பழம், கற்பூரம்" என்ற தலைப்பில் ஆன கதையைச் சொல்லுவேன். ஒரு புத்தகத்தை வாசிக்கும் நிறைந்த தருணம் அஃது. இந்தக் கதையை என் மனம் அப்படியே முழுவதுமாக மனனம் செய்து வைத்துக் கொண்டது. ஞானப் பிழிச்சலும் தத்துவச் செறிவும் நெடுங்கால வாசிப்பின் பயனாக மனத்தில் நிறைந்து ததும்பினால் ஒழிய இத்தகைய கதைகளை எழுத முடியாது.

இனிய நண்பர் முனைவர் சந்திரன் இன்னும் பல கதைத் தொகுதிகளை இனியும் இதுபோலும் படைத்து, இனிமை கூட்டி, புகழில் பலதூரம் தொடுவார் என்பதில் இரு கருத்தில்லை.

கதைகள் வாழ்க.

●

கட்டுரையாளர்: எழுத்தாளர்

கட்டுரை

நாளைய தலைவர்கள்!

நவமணி

ஏடு தூக்கிப் பள்ளியில்
இன்று பயிலும் சிறுவரே
நாடு காக்கும் தலைவராய்
நாளை விளங்கப் போகிறார்
- அழ. வள்ளியப்பா

"இன்று பாடநூல்களுடன் பள்ளிக்குச் சென்று படிக்கிற சிறார்கள்தான் நாளை இந்த நாட்டையே காக்கிற தலைவர்களாக விளங்கப் போகிறார்கள் என்கிறார், புகழ்பெற்ற இந்தத் குழந்தைக் கவிஞர்.

சிறார்கள் நல்ல பழக்கத்துக்கு உட்பட்டு, நல்ல சூழலிலே வளர்ந்தால்தான், வருங்காலச் சமுதாயம் மேன்மையுறும்.

எனவே, சிறார்கள் பள்ளிக்குச் சென்று படிக்கத் தொடங்கும் போதே பாடநூல்களுடன், பிற வாழ்வியல் நூல்களையும் வாசித்துப் பண்பட்டு வளர வேண்டும். அவ்வாறு சிறார்கள் வாசிக்க வேண்டிய நூல்கள் சிலவற்றை இங்கே பார்ப்போம்.

முதலில் பாவலர் கருமலைப் பழம் நீ எழுதியுள்ள *நத்தை மாமா* என்னும் குழந்தைப் பாடல்கள் நூலைப் பார்ப்போம். பெரியவர்களுக்கான இலக்கியங்களை மட்டுமின்றி குழந்தைகளுக்கும் சிறுகதை, கட்டுரை, கவிதை, குறுங்கவிதைகளை எழுதி வருகிறவர் இவர்.

"அதோ ஓடி வருகிறாள் / அழகு தங்கை வருகிறாள்" என்பவை 'என் தங்கை' எனும் தலைப்பிலான பாடலின் வரிகள்.

அண்ணன் ஒரு சிறுவன். அவனைக் கண்டதும் அவனுடைய தங்கை பாசத்துடன் ஓடி வருகிறாள். அவனுடைய தங்கை அழகான தங்கை. இப்போது சொல்கிறான்.

"என்னைத் தேடி வருகிறாள், என்ன கேட்க வருகிறாள்?" தன்னைக் கண்டதும் ஓடி வருகிற தங்கை தன்னிடம் ஏதோ கேட்க வருகிறாள் என்று ஆவலோடு எதிர்பார்க்கிறான். இப்படி தொடங்கி பதினாறு வரிகளில் நிறைவுறுகிறது - இந்தப் பாடல்.

"புத்தகங்கள் போதி மரங்கள் / வித்தகராய் நம்மை மாற்றும்" உள்ளிட்ட வரிகளைக் கொண்ட பாடல் ஏன் வாசிக்க வேண்டும் என்று இதமாக உரைக்கிறது.



நத்தை மாமா – குழந்தைப் பாடல்கள்;
நெஸ்லிங் புக்ஸ்; விலை: ரூ 120/-

இவ்வாறாக, குட்டிக் குட்டிப் பாடல்களை வாசித்துப் பாடி மகிழலாம்.

அடுத்து, **வித்தை செய்யும் நத்தை** – சிறார் கதைகள். இந்த நூல் கன்னிக்கோவில் இராஜா எழுதியது. இவர் சிறார் இலக்கியத்தில் அறுபதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியவர்.

வெளியீடு: நெஸ்லிங் புக்ஸ்; விலை ரூ.85/-

குருவி சொன்ன ரகசியம், தூண்டிலில் மாட்டாத மீன்கள் உள்ளிட்ட எட்டு சின்ன கதைகளைக் கொண்டது இந்த நூல்.

"மத்தவங்க சுதந்திரத்தில் தலையிடுவது அநியாயம்னு சொல்ற மக்கள்தான், நமக்கு ஆபத்தைத் தராங்க" என முழங்கும் ஒரு குருவி அணில்களைக் காப்பாற்ற வேண்டும் என்று கூட்டம் போடுகிறது. எல்லாக் குருவிகளும் அலைந்து திரிந்து பாம்புகளிடம் உதவிகேட்க அந்தப் பாம்புகள் வந்து மனிதர்களிடம் இருந்து அணில்களை எப்படி காப்பாற்றுகின்றன என்றொரு கதை. இவ்வாறு ஒவ்வொரு கதையிலும் நல்ல கருத்துகள் எளிமையாகக் கூறப்பட்டுள்ளன. பேரெழுத்துகளுடன், அழகிய வரைபடங்களுடன் இந்த நூல் தயாரிக்கப்பட்டுள்ளது. குழந்தைகள் விரும்பிப் படிப்பர்.

அழ. வள்ளியப்பா விருது பெற்ற எழுத்தாளர் சுகுமாரன் எழுதிய நூல், **சுடர் முகம் காட்டு** என்பது.

சங்கத் தமிழ் நூலைப் படி, பாரதிதாசன் ஆத்திசூடி, அனைவரும் உறவினர், உள்ளிட்ட 12 தலைப்புகளில் சின்ன சின்ன பாடங்கள் எழுதப்பட்டுள்ளன. சிறார்கள் இந்தப் பாடங்களைப்

வெளியீடு: அறிவுப் பதிப்பகம்; விலை.ரு.95/–

படித்தால், பண்புடன் வாழ்வதற்குக் கற்றுக் கொள்வதுடன், நல்ல மொழிப் பயிற்சியையும் பெற முடியும். ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள சொல்லும் பொருளும், வினாக்கள், பயிற்சிகள் ஆகியன மாணவர்களைச் செதுக்கும்.

வீரச் சிறுமி முலன் என்னும் சீனதேசத்துக் கதை. இதை சிறார்களுக்கு எளிய தமிழில் அளித்திருக்கிறவர் முனைவர் ஜெயந்தி நாகராஜன். நெடுங்காலத்துக்கு முன்பு சீன இராணுவத்தில் ஆள் பற்றாக்குறை ஏற்பட்ட நெருக்கடியான சூழல். முலன் என்னும் சிறுமி ஆண் வேடமிட்டு இராணுவத்தில் இணைந்து எதிரிகளுடன் போராடுகிறாள். இந்தக் கதைச் சூழல் வாசித்துச் சுவைக்கத் தகுந்து.

வெளியீடு: அறிவுப் பதிப்பகம்; விலை.ரு.65/–

அத்துடன், பெண்கள் மென்மையானவர்கள் மட்டுமல்லர்; வீரம் நிறைந்தவர்களும் கூட என்றும் சுட்டிக்காட்டுகிறது – இந்தக் கதை. அழகிய படங்களுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது – இந்த நூல்.

சிறார்கள் படிக்க வேண்டிய நாவல் ஒன்றை எழுதியிருக்கிறார் அண்டனூர் சுரா. நாவலின் பெயர்: ***டம் டும் வகுப்பறை.*** “வானவில்லைத் தகரத்தால் அடித்து நிறுத்திவைத்ததைப் போலிருந்தது அப்பள்ளியின் நுழைவு வாயில். நீர்ச்சத்துக் குறைபாட்டால் வரும் பித்த வெடிப்புகளைப் போல தகரத்தின் விளிம்புகள் வெடித்திருந்தன” – இவ்வாறு மழைக்கால வானத்தையும் உடல்நோயையும் உவமைகளாகச் சுட்டித்தான் இந்த நாவல் வாகர்களுக்கு நுழைவாயிலைத் திறக்கிறது.



வெளியீடு: நெஸ்லிங் புக்ஸ்; விலை ரூ.85/–

தமிழாசிரியர் விடுப்பு எடுத்த நாளில், தமிழ் வகுப்பு லீடர். இங்கிலீஷ் வகுப்பு லீடர், அறிவியல் வகுப்பு லீடர், என வகுப்பு லீடர்கள் எல்லோரும், நான்தான் இன்று வகுப்புக்குப் பொறுப்பு என்று கூறி ஆரவாரம் செய்கின்றனர். அறிவியல் வகுப்பு, கணித வகுப்பிலும் முறையே சூத்திரங்களும், கணக்குகளுமாக மிகுந்த அரட்டைகளுடன் பாடம் நடத்தப்படுகிறது. முழுக்க முழுக்க குதூகலமான பள்ளியறைகள் படம்பிடித்து, இந்நாவலில் காட்டப்பட்டிருக்கின்றன. மாணவர்கள் மட்டுமல்ல, ஆசிரியர்களும் இந்த நாவலை வாசித்து சிரிக்கலாம்; சிரித்துக்கொண்டே கல்வி கற்பிக்கலாம். நாவலில் பொருத்தமான படங்கள் இடம்பெற்றுள்ளன.

இங்கே நாம் பார்த்த நூல்கள் ஐந்தும் வெவ்வேறு தன்மையுடையவை. பாடல்கள், சிறுகதைகள், இன்னும் கற்று ஆழமாக சங்கத் தமிழ்ப் பாடல் உள்ளிட்ட பேரிலக்கியங்களைப் பாடமாக்கித் தரும் நூல், பெண்ணின் வீரத்தைச் சுட்டிக் காட்டி, மாணவப் பருவத்திலேயே சிறுமியரைத் தட்டியெழுப்பும் சீனதேசத்துக் கதை, இறுதியில் வகுப்பறையில் நடக்கும் மகிழ்க் கூடச்சல்கள் எனப் பல்சுவையுடைய நூல்கள் இவை. இந்த நூல்களை வாசிக்கும் மாணவர்கள், தமிழ்மொழியைக் கற்றுக்கொள்வதோடு பண்பாடு, வீரம், சொல்லாடும் திறன் போன்றவற்றையும் கற்றுக்கொள்ள முடியும். இவ்வாறு கற்கிறவர்கள் நாளைய தலைவர்களாக உருப்பெறுவர் என்பது உறுதி!

ஆப்பிரிக்க நாட்டுப்புறக் கதைகளுள் ஒன்றான ‘அனான்சி சிலந்தியும் அறிவுப் பானையும்’ என்னும் கதையை இங்கு பார்ப்போம்.

ஒரு காலத்தில் உலகின் எல்லா அறிவும் வானத்தில் ஒரு மண்பானையில் அடக்கி வைக்கப்பட்டு, அந்தப் பானையைப் பாதுகாக்கும் பொறுப்பு அனான்சி என்னும் புத்திசாலி சிலந்திக்குக் கொடுக்கப்பட்டது. சுயநலக்காரனான அனான்சி ‘இந்த அறிவு எல்லாருக்கும் பரவினால், எனக்கு என்ன இருக்கிறது?’ என்று யோசித்தான். அந்தப் பானையைத் தன் வயிற்றின் முன்பக்கத்தில் இறுக்கிக் கட்டிக் கொண்டு, ஓர் உயரமான மரத்தின் உச்சியில் மறைத்து வைக்க மரத்தில் ஏறினான். முன்பக்கம் பானை இருந்தால், அவனால் அதைச் சரியாகப் பிடிக்க முடிய இயல வில்லை; சறுக்கி சறுக்கி விழுந்தான்.

அதைப் பார்த்துக் கொண்டிருந்த அவனுடைய சிறிய மகன் நான்குவே என்பான், ‘அப்பா, பானையை உங்கள் முதுகின் பின்பக்கம் கட்டிப் பாருங்கள்; அப்போது உங்கள் கைகள் சுதந்திரமாக மரத்தைப் பிடிக்கும்' என்றான். அனான்சி அப்படியே செய்தான். அவன் எளிதில் மரத்தின் உச்சியை அடைந்தான். அவனுக்கு ஓர் உண்மை புரிந்தது. ‘நான்தான் உலகத்தின் எல்லா அறிவையும் வைத்திருக்கிறேன். ஆனால், மரத்தில் ஏறும் விஷயத்தைப் பார்த்தால், என் சிறு மகன் என்னைவிட அதிக அளவு அறிவாளியாக இருக்கிறானே…’ என்று உணர்ந்து மிகவும் வெட்கமடைந்த அனான்சி அந்தப் பானையைக் கீழே தூக்கியெறிந்துவிட்டான். பானை உடைந்து, உள்ளே இருந்த அறிவு முழுவதும் காற்றில் பறக்க உலகெங்கும் பரவியது.

கதை சொல்லும் நீதி: உண்மையான அறிவு என்பது ஒருவருக்கும் மட்டும் சொந்தமானது அல்ல. அதைப் பகிர்ந்து கொள்ளும் போதுதான் அது மதிப்பு வாய்ந்ததாகிறது.

●

கட்டுரையாளர்: எழுத்தாளர்.

குழந்தைப் பருவத்தை எவன் திருப்பிக் கொடுப்பான்?

சா. ஜெயராஜ்

தமிழ் இலக்கியத்தில் சிறார் நூல்கள் தொடர்ந்து படைக்கப்பட்டுப் புழக்கத்துக்கு வந்துகொண்டே இருக்கின்றன. அவையெல்லாம் பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன; பலன் கொடுத்துக்கொண்டே இருக்கின்றன . எப்படி? உண்மையைப் பேச வேண்டும், நன்மையைச் செய்ய வேண்டும் என்று மழலைகளுக்குப் பாடம் கற்பிக்கிறவையாக.

இவையெல்லாம்... வறுமையிலேயே வாழ்ந்தாலும் கூட ஓரளவுக்காவது அமைதியை சுவாசிக்கிற குழந்தைகளுக்கு . ஆனால், நாம் இங்கே பார்க்கப் போவது போரினால் பாதிக்கப்பட்டு பன்னிரண்டு வயதிலேயே போரில் கலந்து கொண்டு எதிரிகளை வீழ்த்திய சிறுவனின் கதையை.

உண்மை நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு ரஷ்ய எழுத்தாளர் விளதீமிர் பகமோலவ் அவர்களால் எழுதப்பட்டது - “இவான்” என்னும் குறும் புதினம். விளதீமிர் எழுதிய இந்தக் குறும் புதினத்தை எளிய தமிழில் மொழிபெயர்த்துள்ளார் நா.முகமது செரீபு. இதில் இடம்பெற்றுள்ள படங்களை வரைந்திருப்பவர்: ஒரேஸ்த் வெரெய்ஸ்கி.

இரண்டாம் உலகப் போரில் இவான் என்னும் ரஷ்ய நாட்டுச் சிறுவனின் குடும்பத்தினர் ஜெர்மானிய நாஜிப் படையினரால் கொல்லப்பட்டு விட்டனர்.

அதன்பிறகு அந்தச் சிறுவனின் வாழ்க்கை என்ன ஆனது?...

ரஷ்யாவின் போர் அணிப்பிரிவின் உதவிப் படைத்துறைக் களத்தில் கதை தொடங்குகிறது.

கால்த்ஸெவ் என்னும் இருபத்தொரு வயது நிரம்பிய இராணுவ அதிகாரி சொல்வதாக இந்தக் கதை புனையப்பட்டுள்ளது. அதிகாலை நேரம் அவர் துயில் எழுப்பப்படுகிறார். பன்னிரண்டு வயதுச் சிறுவன் ஒருவன் சிப்பாயால் அறிமுகப்படுத்தப்படுகிறான்.

“கரையோரத்து நீரில் இவன் ஊர்ந்துகொண்டிருந்தான். எந்த விளக்கமும் கொடுக்க மறுத்துவிட்டான். மேலும், தலைமையிடத்திற்கு அழைத்துப் போகும்படியும் கோரினான். எந்தக் கேள்விக்கும் இவன் பதில்

பேச மாட்டான். தலைமை அதிகாரியிடம் மட்டுமே நான் பேசுவேன் என்று கூறுகிறான். களைத்துப்போய்க் காணப்படுகிறான். ஆனால், இவன் ஏமாற்றுகிறவனாகத் தான் இருக்க முடியும். ஜூனியர் லெப்டினண்ட் இவனை இங்கே அழைத்துப் போகும்படி எனக்குக் கட்டளையிட்டார்'' என்றான் அந்தச் சிப்பாய்.

உடன் அழைத்து வந்து அறிமுகப்படுத்திய சிப்பாய் வசீலியெவை வெளியே அனுப்பும்படி கால்த்ஸெவ்விடம் கண்டிப்பான தொனியில் சொன்னான் சிறுவன். அதன்படி, கால்த்ஸெவ் அந்தச் சிப்பாயை வெளியே சென்று காத்திருக்கும்படி கூறினார் .

அப்படியே அமைதியாக இருந்த சிறுவனிடம் "நல்லது, ஏன் பேச மாட்டேன் என்கிறாய்? எங்கிருந்து நீ வந்தாய்?'' என்று கேட்கிறார், அதிகாரி.

"நான் போன்தரெவ் . பணித் தலைமையிடம் எண் ஐம்பத்தி ஒன்றுக்கு, நான் இங்கிருக்கிறேன் என்று உடனடியாக அறிவியுங்கள்.'' என்று பதில் அளிக்கிறான். "அப்படியா? பிறகு?'' என்றார் அதிகாரி.

"அது அவர்களுடைய வேலை; என்ன செய்வதென்று அவர்களுக்குத் தெரியும்.''

சிறுவனை உற்று நோக்குகிறார் அதிகாரி கால்த்ஸெவ் சிறுவன் சட்டையைக் கழற்றினான். புழுதியில் புரண்டு அழுக்குப் பிடித்த மேனி. எலும்பிருக்கிறது, தோலிருக்கிறது, தசையில்லை.

அவனுக்கு இராணுவத்தில் யாரைத் தெரியும் என்று கேட்க... இராணுவ வேவுத் துறைத் தலைவர் லெப்டினண்ட் – கர்னல் கிரியச்னோவ் என்று பதிலளித்தவன் பிறகு சிடுசிடுப்பான தோற்றத்தோடு "காப்டன் ஹோலின்'' என்று முணுமுணுத்தான்.

இராணுவத் தலைமையிடத்தின் ஆணையின்படி கால்த்ஸெவ் அவனை உபசரித்தார். "சிவக்கப் பழுத்த அடுப்புப் பக்கம் தனது முதுகைக் காட்டிய படி பெஞ்சின் ஓரத்தில் பையன் உட்கார்ந்திருந்தான். மூலையில் அவன் தூக்கி எறிந்த ஈரமாய்ப் போன காற்சட்டை இப்பொழுது அவனது காலடியில் கிடந்தது. மூடியிருந்த பையிலிருந்து ஓர் அழுக்கேறிய கைக்குட்டையை வெளியே இழுத்தான். அதை விரித்து மேசையின் மீது உதறினாள். கோதுமை , ரை தானியங்கள், சூரிய காந்தி விதைகள், பைன், ஃபிர் இவற்றின் ஊசிவடிவ இலைகள் ஆகியவற்றைச் சிறுசிறு குவியல்களாகத் தனித்தனியாக ஒழுங்குபடுத்தினான். பிறகு, கூர்ந்த நோக்கோடு ஒவ்வொரு குவியலிலும் இருந்தனவற்றை எண்ணிக் காகிதத்தில் எழுதினான்'' என்கிறார், கதைசொல்லும் கால்த்ஸெவ்.

பின்னர் , தாளில் வரிசையாகக் கோடுகளும் கட்டங்களும் போட்டு இடப் பக்க ஓரத்திலிருந்து குழந்தையின் கையெழுத்து போன்று அப்பையன் எழுதினான்: " 2... 4 , 5 ...'' இந்த எண்கள் எதைக் குறிக்கின்றன என்பதையோ, அவன் வேறு என்ன எழுதுகிறான் என்பதையோ கால்த்ஸெவால் சிந்திக்க முடியவில்லை.

"நீண்ட நேரம், ஏறத்தாழ ஒரு மணி நேரம் வரை தனது பேனாவால் காகிதத்தில் கிறுக்கியபடி அவன் எழுதினான். பலமாக மூச்சு விட்டுக்கொண்டு தனது மணிக்கட்டால் தாளை மறைத்துக் கொண்டான் . அவனது விரல்கள் கீறப்பட்டும் கன்றிப் போயுமிருந்தன. அவனது கழுத்தும் காதுகளும் நீண்ட காலமாகக் கழுவப்படாதவையாக இருந்தன. அவ்வப்பொழுது உணர்ச்சிவசப்பட்டுத் தனது உதடுகளைக் கடித்தபடியும், எதையோ சிந்திப்பதற்கவும் , நினைவுபடுத்திப் பார்க்கவும் எழுதுவதை நிறுத்தினான். பிறகு மீண்டும் எழுதத் தொடங்கினான் .வெந்நீரும் தண்ணீரும் உள்ளே கொண்டு வரப்பட்டன. உள்ளே யாரையும் வர விடாமல் கால்த்ஸெவ் தானே வாளிகளையும் நீர்மொள் கலத்தையும் நிலவறைக்குள் கொண்டு போய் வைத்தார். ஆனால், அவன் இன்னமும் தனது பேனாவால் எதையோ கிறுக்கிக் கொண்டிருந்தான்''. *(பக்கம்: 27, 28)*

அவனைக் குளிக்க வைத்து விருந்தோம்பும் பணியில் ஈடுபட்டார், அதிகாரி கால்த்ஸெவ்.

உடலில் அழுக்கு கழுவப்பட்டதும், அவனுடைய நெல்நிறம் வெளியே தெரிந்தது. குளித்தும் அவன் குளிரவில்லை.

★★★

ரஷ்ய எல்லையில் உள்ள நீப்பர் நதியிலிருந்து அரை கிலோமீட்டர் தொலைவில் உள்ள அடிவளர்ச்சி கொண்ட புதரில் கால்த்ஸெவின் நிலவறை இருந்தது. நதி ரஷ்யர்களுக்கும் ஜெர்மானியர்களுக்கும் இடையே இருந்தது. எதிரே இருந்த உயரமான கரை தனித் திறங்களுடைய நிலப் பகுதியாகக் கருத்தப்பட்டது. ரஷ்யாவின் முக்கியப் பகுதி மிகவும் வாய்ப்பான பகுதியின் பின்னணியில் இருந்தது. நதியின் பார்வையில் ரஷ்யாவின் புறக்காவல் அரணின் கிளைப் பிரிவுகள் இருந்தன.

ரஷ்ய எல்லை நெடுகிலும் ஜெர்மானியர்கள் சுட்டுக்கொண்டே இருந்தார்கள். இரவின் அமைதியைக் குலைத்துக் கொண்டு எந்திரத் துப்பாக்கிகள் அவ்வப்பொழுது வெடித்துச் சிதறின.

சிறுவன் உறங்கியும், உறங்கவில்லை. தகவல் அறிந்து இராணுவ உளவுப் பிரிவு அதிகாரியான காப்டன் ஹோலின் வந்து சேர்ந்தார். ஹோலினைப்



விலை: ரூ. 100 | வெளியீடு: என்சிபிஎச்

பார்த்த உடனேயே பையன் உயிர் பெற்றவன் போலாகிச் சிரித்தான். அவன் சிரித்தது அதுதான் முதல் முறை.

“இவான், நீ இளைஞர்களுக்கான இராணுவப் பள்ளியில் சேர்ந்து படிக்க வேண்டும்” என்று கேட்டுக் கொண்டார் ஹோலின். இவான் மறுத்துப் பேசினான். ஹோலின் இவானைத் தலைமையகத்துக்கு அழைத்துச் சென்றார்.

புதினத்தின் அடுத்த சில பக்கங்களை ஆக்கிரமித்துக் கொண்டது – கால்த்ஸெவ் இராணுவத்தில் பணியாற்றிய ஒரு பெண் மருத்துவ அதிகாரியுடன் கொண்ட காதல்.

அடுத்து, இவான் ஓய்வெடுத்து, உடல் நலம் தேறிய பிறகு, அவனைச் சந்திக்கிறார், கதைசொல்லியான கால்த்ஸெவ்.

“இன்று அவன் அடையாளம் தெரியாதபடி மாறி இருந்தான் விளையாட்டாகவும், அவ்வப்பொழுது சிரித்துக் கொண்டும், என்னை நட்பு முறையில் பார்த்துக் கொண்டும், ஹோலினையும் கதசோனையும் அழைக்க, நெருக்கத்தைக் குறிக்கும் ‘நீ’ என்ற சொல்லையே என்னை அழைப்பதற்கும் பயன்படுத்திக் கொண்டு இருந்தான்” என்று இவான் மீது கொண்ட அன்பைப் பகிர்ந்து கொள்கிறார்.

இவானின் அத்தனை அசைவுகளும் ஏராளமான செய்திகளை வெளிபடுத்துகின்றன. இடையிடையே அவன் சிரிக்கிறான். அப்போதெல்லாம் அவனிடம் குழந்தைமை தெறிக்கிறது. பிறகு கடமை என்று வந்தவுடன் முதிர்கிறான். தெறித்த சிரிப்புகளெல்லாம் முதிர்ச்சியில் உறைகின்றன.

அவன் ஏராளமாகப் பேசுகிறான் – பேசாமலே!

வாசகர்கள் கூர்ந்து கவனிக்கிறபோது, தாங்களாகவே காட்சிகளையும் கதைத்தல்களையும் படைத்துக் கொள்வர்.

இராணுவத்தில் இருக்கிற இவான் ஐந்தடி உயரம் இல்லை, ஐம்பது கிலோ எடையில்லை, காளையல்லன், கன்றுக்குட்டி!

இவான் போன்தரெவ் கால்த்ஸெவ்விடம் இருக்கும் கத்தி ஒன்றைப் பார்த்து, அதைத் தனக்குத் தரும்படி ஆசையுடன் கேட்கிறான். ஆனால், கால்த்ஸெவ் அந்தக் கத்தியைத் தன் நண்பன் கன்ஸ்தந்தீனின் நினைவாக வைத்திருப்பதாகக் கூறி, கத்தியை போன்தரேவுக்குத் தர மறுத்து விடுகிறார். சிறுவனின் வாழ்க்கை வரலாற்றை அறிந்து கொள்ளத் துடிக்கிறார் கால்த்ஸெவ்.

அதையொட்டி, காப்டன் ஹோலின் கால்த்ஸெவ்விடம் போன்தரேவைப் பற்றிச் சொல்கிறார்.

“போன்தரெவ் கோமெல் என்ற நகரத்திலிருந்து வந்தவன். போருக்கு முன்பு பால்டிக் பகுதியில் எங்கோ ஓர் எல்லைப் புறத்தில் தனது பெற்றோருடன வசித்திருக்கிறான். எல்லைப்புறக் காவலாளியாகிய அவன் தந்தை போரின் முதல் நாளன்றே கொல்லப்பட்டார். பின்வாங்கிச் செல்கின்றபோது பதினெட் மாதமே நிரம்பிய அவனது தங்கையும் கொல்லப்பட்டாள். சகோதரனுடைய கைகளில் அவள் இருந்தபோது ஜெர்மானியக் குண்டு ஒன்றினால் கொல்லப்பட்டாள். நீயோ நானோ ஒரு போதும் கற்பனையே செய்து பார்த்திராதவற்றை அவன் கடந்து வந்திருக்கிறான்.”

ஹோலினின் குரலில் ஒலி அளவு குறைந்தது.

“அவன் கொரில்லாக்களோடும் இருந்திருக்கிறான். திரொஸ்தியானேத்ஸ் சாவு முகாமிலும் இருந்தான். அவன், மனத்தில் ஒன்றே ஒன்றுதான் இருக்கிறது. கடைசி மனிதன் வரை பழிவாங்க வேண்டும்! முகாமைப் பற்றியோ அவனது தந்தை அல்லது சகோதரியைப் பற்றியோ அவன் பேசத் தொடங்குகின்றபோது, அவன் நடுநடுங்கத் தொடங்கிவிடுகிறான். ஒரு குழந்தை இதுபோல வெறுக்கும் என்று நான் ஒருபோதும் எண்ணியதில்லை”.

முதிர்ந்தவன் குழந்தைப் பருவத்தை அசைபோட்டு குழந்தையாகலாம். அப்படி, குழந்தை முதிர்ந்தவனின் செயல்பாட்டைக் கற்பனை செய்ய முடியுமா? அதற்குப் போதுமான அளவுக்கு அவனிடம் பட்டறிவு இருக்குமா?

ஒரு குழந்தை கொஞ்சலாம், கொஞ்சப்படலாம், கெஞ்சலாம், கெஞ்சப்படலாம். இத்தகைய செய்வினைகளையும் செயப்பாட்டு வினைகளையும் துய்ப்பதைத் தொடர முடியாமல் துறந்தவன் இவான் போன்தரெவ்.

ரஷ்யாவின் உளவுப் பிரிவு முழுவதும் சேகரிப்பதைவிட்டு கூடுதலான தகவல்களைக் கொண்டு வருகிறான். இவான் கத்திப் பேசவில்லை, கம்பு சுற்றவில்லை, துப்பாக்கி தூக்கவில்லை, வெடிகுண்டு வீசவில்லை; அமைதியாகவே போர்ப் பணியாற்றிக் கொண்டிருக்கிறான்.

இப்போது புறப்பட்டு விட்டான் - ஜெர்மானியப் பகுதியில் உளவுப் பணியாற்ற. காப்டன் ஹோலின் அறிவுறுத்துகிறார்.

“இடுக்கு வழியில் ஓரமாகவே நெருங்கிச் செல். அடிப்பகுதி முழுவதுமே வெடிகள் வைக்கப்பட்டது என்பதை மறந்து விடாதே... அடிக்கடி நின்று கவனி. திடீரென்று நின்று கவனி! மறைகுழிகள் எல்லாம் காவல் போடப்பட்டிருக்கின்றன. ஆகவே ஊர்ந்து, செல், பொறுத்திரு.... சுற்றி வரும் காவலர்கள் கடந்த உடனேயே, மறைகுழியைத் தாண்டிச் சென்று, மேற்கொண்டு முன்னேறிச் செல்....”

கரடு முரடான பயணம்... நீப்பர் நதியைக் கடந்து, ஈரமான சதுப்பு நிலத்தைக் கடந்து, எல்லையின் உள்ளே நுழைகிறான். இவான் போன்தரெவ்.

மழை மெதுவாக ஒரே மாதிரியாகப் பெய்கிறது. ஆற்றிலிருந்து ஈரஞ்செறிந்த காற்று வீசத் தொடங்கியது.

இறுதியில், எதிரிப் படையினரிடம் சிக்கிக் கொண்ட இவான் பொன்தரேவ் என்னும் இரும்பு மலர் என்ன ஆனது என்பதை ஆவணங்களின் மூலம் அறிந்து கொள்கிறார், கதை சொல்லியான சீனியர் லெப்டிமைன்ட் கால்த்ஸெவ்.

அவருடைய மனம் கனத்துப் போவதைப் போல, யாருடைய மனமும் கனத்துப் போகும் - இந்தக் குறும் புதினத்தை வாசித்தால்!

எந்தக் கண்ணாடியை அணிந்து பார்த்தாலும், போர் மிகக் கொடூரமானது! போரினால், இந்த இவான் போன்தரெவைப் போன்ற குழந்தைகளிடமிருந்து சூறையாடப்படும் குழந்தைப் பருவத்தை எவன் திருப்பிக் கொடுப்பான்?

●

கட்டுரையாளர்: மொழிபெயர்ப்பாளர்

அஞ்சலி

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது

அண்மையில் காலமான **ர.ஜார்ஜ், சே.ச.** என்பார் திருச்சி புனித வளனார் கல்லூரியிலும், கருமாத்தூர் புனித அருளானந்தர் கல்லூரியிலும் துணை முதல்வராகவும், பொருளாளராகவும் பணியாற்றியவர். திண்டுக்கல் அருகிலுள்ள மெட்டூரில். இறக்கும் நிலையிலுள்ள அனாதைகளுக்கான கருணை இல்லத்தில் துணை நிர்வாகியாகவும் பணியாற்றியிருக்கிறார்.

இவ்வாறு கல்விப் பணியிலும் சமூகத் தொண்டிலும் சிறந்து விளங்கிய ர.ஜார்ஜ் கழுகுமலையில் கிளர்ச்சியும் வளர்ச்சியும் – 1895 என்னும் தலைப்பில் நூல் ஒன்றை எழுதி, தமிழ்ச் சமூகத்தில் குறிப்பிடத்தக்க எழுத்தாளர் என்று அறியப்பட்டவர்.

தனது சொந்த ஊரான கழுகுமலையில் 1895 இல் நிகழ்ந்த கொடுமையான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வை ஆய்வு செய்து, இந்த நூலை உருவாக்கினார். கல்விப்புலம் சார்ந்த அறிஞர்களால் புறக்கணிக்கப்பட்ட ஓர் வரலாற்று நிகழ்வை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்தவர், வரலாற்றாய்வாளரும் எழுத்தாளருமான ஜார்ஜ்.

– சிவா



kindle edition Rs 249

கல்லூரி வளாக நாவல்களின் மத்தியில்..

சுப்ரபாரதிமணியன்

அரவிந்த் பாரதி எழுதிய "வென் தி கேட் குளோஸ்டு" When the gate closed நாவல் அமேசான் போன்ற சமூக வியாபாரத்தளங்களில் குறிப்பிட்ட இடத்தைப் பெற்றிருப்பதால் பலரின் கவனத்திற்குச் சென்றிருக்கிறது.

இன்றைக்கு நாவல் உலகம் மற்றும் திரைப்பட உலகங்களில் கல்லூரி சார்ந்த வாழ்க்கையை எழுதுவது வியாபார ரீதியாக வெற்றிகரமானதாக இருக்கிறது.

பல மொழிகளில் இதுதான் கடைவிரிக்கப்படுகிறது. இந்திய அளவில் கூட. சேட்டன் பகத் உட்பட பல எழுத்தாளர்கள் இதில் வெற்றிகரமாக இருக்கிறார்கள் கல்லூரி வாழ்க்கையை எழுதுவதில் மற்றும் புத்தகங்களை வெளியிடுதல் பலருக்கு உவப்பாக இருந்தாலும் அதில் சமூக ரீதியான விஷயங்களைக் கொண்டு வருவது என்பது சிலருக்கு மட்டும் கைகூடுகிறது

ஈரோட்டைச் சேர்ந்த இளைஞர் அரவிந்த் பாரதி இந்த வகையில் ஆங்கிலத்தில் எழுதி வெளிவந்திருக்கும் நாவல், கல்லூரிக் களத்தைக் கொண்டது. கல்லூரி இளைஞர்களின் மனப்போக்கையும் அவர்களின் வாழ்வியலையும், உணர்வுகளையும் சொல்லும் நாவலாகும்.

இந்த நாவலில் வருகிற கதாநாயகனின் சொந்த ஊர் கோவையாக இருந்தாலும் வெளியூரில் சென்று படிக்க ஆசைப்படுகிறான் ஆனால் பெற்றோர் அங்கேயே படிக்க வற்புறுத்துகிறார்கள் அவர்களுடைய வார்த்தைகள் எல்லாம் அவனுக்கு கட்டுப்பாடுகளை விதிக்கின்றன. அந்தக் கல்லூரி வாழ்க்கையை அவன் எப்படி மேற்கொண்டான் என்பது நாவலில் பெரும்பாலும் இருக்கிறது

அந்த அனுபவங்களை, விமானத்துக்காகச் சென்னை விமான நிலையத்தில் காத்திருக்கிற போது எண்ணிப் பார்ப்பதும் அது பற்றி எழுதியதை படித்துப் பார்ப்பதும் என்று நிகழ்கிறது

கல்லூரிவிடுதிநாட்கள்முதல்கண்டதும்காதல்,கல்லூரி நண்பர்கள் உலகம் என்று இந்த நாவல் அமைந்திருக்கிறது. இதில் வருகிற கதாநாயகன் வினித் இரண்டு பேர்களால் தன் வாழ்க்கையின் ஒரு பகுதியைச் செம்மையாக்கிக் கொள்கிறான். அதில் ஒரு பெண் வருகிறாள். அவனுடன் பழகுகிறாள். ஆனால் அவள் மீது வைக்கப்படுகிற வீணான குற்றச்சாட்டுகளால் கல்லூரியில் இருந்து வெளியேறினாள். இன்னொருவர் நண்பர் வாகன விபத்தில் இறந்து போகிறார். இவர்கள் இருவரும் அந்த இளைஞரை எப்படி வாழ்வியல் அனுபவங்களுக்குக் கொண்டு போனார்கள், அவனை எப்படி செம்மைப்படுத்தினார்கள் என்பது பல அனுபவங்களால் இந்த நாவலில் நிரப்பப்பட்டு இருக்கிறது. தாயின் அன்பு, தந்தையின் லேசான கண்டிப்பு, கல்லூரிப் பருவ விஷயங்கள், நண்பர்கள் கல்லூரி விடுதி வளாகம் என்று இந்த நாவல் அமைந்திருக்கிறது. வித்யா, அருண் போன்ற முக்கிய கதாபாத்திரங்கள் அவர்களது உணர்வுகளோடு இது வெளிப்படுகிறது.

எந்த உடை உடுத்துவது என்பதில் உள்ள சர்ச்சை கூட முக்கியமானதாகிறது. சேலை என்பது எப்படி கௌரவமானது என்று பல சமயங்களில் பொதுப்புத்தியில் வளர்க்கப்படுகிறது. சுடிதார் என்பதைத் தவிர்த்து விடுவதும் அப்படித்தான். அதேபோல சாப்பாட்டு விஷயத்தில் உள்ள தேர்வு என்பதும் சொல்லப்படுகிறது.

இந்த இளைஞர்கள் மத்தியில் காணப்படும் விரக்தியும் குடும்பமும் சுற்றத்தில் இருந்து விடுதலை ஆகிற திடீர் எண்ணங்களும் இந்த நாவலை ஆக்கிரமிக்கின்றன. கல்லூரிப் பருவங்கள் சரியாகப் பதிவு செய்யப்பட வேண்டியவை, கேளிக்கை அம்சங்கள் அல்ல என்பதன் பார்வையை இந்த நாவல் வலியுறுத்துகிறது

ஆங்கிலத்தில் எளிமையாக உருவாக்கப் பட்டிருக்கிறது அங்கங்கே கவித்துவமான வாக்கியங்கள் சிறப்பு செய்கின்றன. கல்லூரி வளாகம் சார்ந்த ஆங்கில நாவல்களில் வரிசையில் இந்த நாவலுக்கு ஒரு முக்கிய இடம் உண்டு... கொஞ்சம் சமூகவியல் அக்கறையோடு கதாபாத்திரங்களின் இயல்புகள் சித்திரிக்கப்படுவது என்பதால், மற்றைய கல்லூரி வளாக நாவல்களிலிருந்து இது வேறுபட்டு ஒளிர்கிறது...

●

கட்டுரையாளர்: எழுத்தாளர்

நேர்காணல்

மார்க்சிய அறிஞர் ந. முத்துமோகனும் அவர்தம் தத்துவ விசாரணைகளும்

முனைவர் எம்.பி. டெரன்ஸ் சாமுவேல் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் ந.முத்துமோகன் அவர்களின் மாணவர். மேற்குவங்கத்திலுள்ள சாந்திநிகேதன் பல்கலைக்கழகத்தின் தத்துவத் துறையில் உதவிப் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார்.

முனைவர் எம்.பி. டெரன்ஸ் சாமுவேல்
அவர்களிடம் நேர்காணல்

நேர்காணல் நிகழ்த்தியவர்கள்

எஸ்.கே.கங்கா

நா.இராமச்சந்திரன்

கே.: கல்விப்புல ரீதியாக மார்க்சியத் தத்துவப் பேராசிரியராக முத்துமோகன் அவர்களது பணியின் பரிமாணங்களும் பங்களிப்புகளும் யாவை?

டெரன்ஸ்: பேராசிரியர் முத்துமோகன் அவர்கள் எனக்கு அறிமுகமானது நான் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் முதுகலைத் தத்துவம் கற்கச் சென்ற போதுதான். அப்போது முதுகலைத் தத்துவப் பட்டப் படிப்பு மட்டுமே பல்கலைக்கழகத்தில் இருந்தது. மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் சமயம், தத்துவம், மனிதநேயச் சிந்தனை என்ற பள்ளியின் கீழ் தத்துவம் மட்டுமல்லாமல் காந்தி மற்றும் வள்ளலார் துறை, Inter-religious Dialogue, சைவ சித்தாந்தம், இஸ்லாம், கிறித்தவம் போன்ற துறைகளும், திருக்குறள், சீக்கியம் போன்ற ஆய்வு இருக்கைகளும் இருந்தன. இந்தத் துறைகளையெல்லாம் ஒருங்கிணைத்துத் ‘தத்துவமும் சமயமும்’ என்ற பாடத்திட்டத்தைக் கொண்டுவந்தது முத்துமோகன் சாருடைய முக்கியமான பங்களிப்பு. அந்தப் பாடத்திட்டத்தில் இடம்பெற்ற தாள்கள் மிகவும் முக்கியமானவை. குறிப்பாக, ‘மார்க்சியம், பகுத்தறிவுச் சிந்தனை’

என்பது ஒரு தாளின் பெயர். 'பெண்ணியம் மற்றும் தலித்தியச் சிந்தனை' என்பது இன்னொரு தாள். இந்தியாவில் பெரும்பாலும் இவை போன்ற தாள்கள் கல்விப்புலப் பாடத்திட்டத்தில் இடம்பெறுவதைப் பார்க்க முடியாது; அப்படியே இருக்குமானால், அவை விருப்பத் தாள்களாக மட்டுமே இருக்கும். ஆனால் தத்துவத் துறையில் இவை விருப்பத் தாள்களாக இல்லாமல், முக்கியத் தாள்களாகவே இடம் பெற்றிருந்தன என்பது குறிப்பிடத் தகுந்தது. இது அவருடைய மிக முக்கியமான பங்களிப்பு.

முத்துமோகன் Cultural studies என்ற ஒரு புதிய பாடத்திட்டத்தினை உருவாக்கினார். அதில் பண்பாடு குறித்த பிரச்சினைகள், கோட்பாடுகள் ஆகியவற்றை உள்ளடக்கினார். தலித்திய ஆய்வாளாராக, செயல்பாட்டாளராகத் திகழும் ஜெகநாதன் இந்தப் பட்டப் படிப்பின் முதல் அணியில் பயின்று பட்டம் பெற்றவர்.

'சீக்கியம் மற்றும் ஒப்பீட்டுச் சமயம்' என்ற ஒரு பட்டயப் படிப்பினை, குருநானக் ஆய்வு இருக்கை வாயிலாகத் தொடங்கினார். இதில் சீக்கியம் மட்டுமல்லாமல் சமூகவியல் ரீதியாகச் சமயங்களை எவ்வாறு புரிந்து கொள்வது என்பது முக்கியத் தன்மை பெற்றதாக அந்தப் பட்டயப் படிப்பில் இருந்தது. அந்தப் படிப்பு எடுத்துப் படிப்பவர்களுக்கு இறுதியில் ஓர் ஆய்வேடும் இருந்தது. இந்தப் பட்டயப் படிப்பைத் தேர்ந்தெடுத்துப் படிப்பவர்களுக்குக் கல்வி உதவித்தொகையையும் ஏற்பாடு செய்திருந்தார். சீக்கிய அமைப்பு ஒன்று இதற்காக உதவி செய்தது. ஏராளமான மாணவர்கள் இந்தப் பட்டயப் படிப்பில் சேர்ந்தார்கள். சிறந்த ஆய்வேடுகள் உருவாயின. இந்த ஆய்வேடுகள் பெரும்பாலும் சீக்கியச் சமயத்தையும் தமிழ்ச் சூழலையும் ஒப்பீடு செய்வனவாக, மற்றும் சமூகவியல் ரீதியாக சமயங்களை, சமய இயக்கங்களை அணுகுபவையாக இருந்தன; சமூக அக்கறை கொண்டவையாக இருக்கும் விதத்தில் அப்படிப்பட்ட ஆய்வுகளை ஊக்குவித்தார்.

அந்தப் பள்ளியில் பயில்வோருக்கு ஏதுவாக புதன் வட்டம், வியாழன் வட்டம் ஆகியவற்றை அவர் தொடங்கினார். ஆய்வு மாணவர்கள் இக்கருத்தரங்குகளில் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பிக்க வேண்டும். கல்விப்புலம் சார்ந்த அறிவார்ந்த சூழலை இந்தச் செயல்பாடுகளின் மூலம் முத்துமோகன் உருவாக்கினார். இந்தச் செயல்பாடு, ஆய்வு மாணவர்களை அறிவுப்புல ரீதியாக ஊக்கப்படுத்தியதோடு மட்டுமல்லாமல், ஆய்வு மாணவர்களுக்கு இடையில் உரையாடலை உருவாக்கியது; ஓர் ஆய்வு மாணவரின் ஆய்வினைப் பிற மாணவர்கள் அறிந்து கொள்வதற்கும், புதிய விடயங்களை அவற்றின் மூலம் அறிந்து கொள்வதற்கும், மாணவர்களிடையே சமூக அக்கறை சார்ந்த அறிவுப்புலச் சூழல் அமைவதற்கும் அது பக்கபலமாக இருந்தது.

குருநானக் ஆய்வு இருக்கையைக் குருநானக் ஆய்வுத் துறையாக மாற்றியமைத்ததில் முத்துமோகனின் பங்களிப்பு முக்கியமானது. குருநானக் ஆய்வுத்துறையின் வாயிலாகப் பல்வேறு புத்தகங்கள் வெளிவந்தன. மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் பதிப்புத்துறையின் முக்கியமான வெளியீடாக, ***சீக்கியமும் தமிழ்ப் பண்பாடும்*** என்ற நூல் வெளிவந்தது. ஆய்வு மாணவர்களின் ஆய்வுகள் குறுநூல்களாக இத்துறையின் மூலம் வெளிவந்தன. குறிப்பாக, குருமார்களின் கதைகள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வெளிவந்தன. தமிழ்நாட்டில் ஆளுநராக இருந்த சுர்ஜித் சிங் பர்னாலா எழுதிய தன்வரலாற்று நூலை முத்துமோகன் மொழிபெயர்த்தது முக்கியமானது. ஏனெனில், பர்னாலா ஒரு பணக்காரக் குடும்பத்தில் பிறந்தாலும் எளிமையானவர். ஏழைக் குடிமகனின் வாழ்க்கையை வாழ்ந்து பார்த்தவர். இந்த அனுபவங்களைத் தம்முடைய தன்வரலாற்று நூலில் அவர் பதிவு செய்திருக்கிறார்.

தனிப்பட்ட முறையில் முத்துமோகன் அவர்களின் வகுப்புகள் தத்துவங்களை அப்படியே பேசுவது என்பதை விட ஒடுக்கப்பட்ட மக்கள் குறித்த அக்கறையோடு, மாணவர்களின் அறிதிறன்களுக்கு ஏற்றவகையில், சமகாலச் சூழலுக்குப் பொருத்திப் பார்த்து மாணவர்களைத் சிந்திக்கத் தூண்டுவதாக இருக்கும். ஒரு தத்துவத்தைப் படிக்கிறோமென்றால் அதை வாலாற்றுப் பூர்வமாக எப்படிப் படிப்பது - காலச் சூழலைப் புரிந்து கொண்டு விளக்குவது என்பது முக்கியமானதாக இருக்கும். இன்னும் அதிகமாக, அந்தத் தத்துவங்களின் பின்னால் ஒளிந்து கிடக்கும் அரசியல் என்ன? அந்த அரசியல் ஆளும் வர்க்கக் கருத்தியல்களை எவ்வாறு சுமந்து நிற்கிறது என்பதை எளிய முறையில் மாணவர்களுக்கு விளக்குவது அவரின் தனிப் பாணியாகும்.

தனிப்பட்ட முறையில் எனக்கு ஓர் அனுபவம் இருக்கிறது. உண்மையிலேயே என்னுடைய வாழ்க்கையை மாற்றிய ஓர் அனுபவம் அது. முதுகலைத் தத்துவப் பாடத்திட்டத்தில் இந்தியத் தத்துவம் என்கின்ற ஒரு பாடப்பிரிவு. அதில் அத்வைதம் குறித்த ஒரு வகுப்பினை இன்னொரு பேராசிரியர் எடுத்தார். அந்தப் பேராசிரியர்



அகமே பிரம்மம் என்ற அடிப்படையில் பேசினார். ‘இது நல்லா இருக்குதே...' என்று நான் ஆர்வத்துடன் யோசித்தேன். பேராசிரியர் முத்துமோகன் அவர்களிடம் இது குறித்துப் பேசினேன். புறவுலகம் அமைதியில்லாமல் இருக்கும் பொழுது தனக்கு மட்டும் அமைதி கிடைத்து விடும் என்பது எப்படிச் சாத்தியமாகும்? என்றார். சின்ன கேள்விதான் அது. அதற்குள் நிறைய அர்த்தங்கள் புதைந்து கிடக்கின்றன. தனி மனிதனுக்கும் சமூகத்துக்கும் இடையிலான இயங்கியல் உறவு, அதில்தான் தனி மனிதனுடைய வாழ்வின் அர்த்தங்கள், அவனுடைய அமைதி, சுயம் குறித்த தேடல் போன்றவை உள்ளன. இது மார்க்சிய ரீதியான தேடல். இது என்னுடைய வாழ்வில் மார்க்சிய ரீதியாக, தனிமனிதன்-சமூகம் இரண்டுக்கும் இடையிலான இயங்கியலைப் புரிந்துணர்ந்து சிந்திப்பதற்குரிய மாற்றத்தை ஏற்படுத்தியது.

தத்துவத்துறையில் அவருடைய பரிமாணங்கள் குறித்துக் கூறுக.

தத்துவவாதிகள் பெரும்பாலும் மேற்கத்தியத் தத்துவங்களைப் பேசுவது, வைதீகத் தத்துவங்களைப் பேசுவது, அவைதீகத் தத்துவங்களைப் பேசுவது, ஆளும் வர்க்கக் கருத்தியல்களை, ஒத்திசைவுகளைப் பாடத் திட்டத்தின் மூலமாகப் பேசுவது என்பதையே பெரும்பாலும் நாம் பார்க்க முடியும்; சமூக அக்கறை கொண்ட விமர்சன ரீதியான சுணக்கம் கொண்டவையாகவே இருப்பதைப் பார்க்க முடியும். இதனை அப்படியே புரட்டிப் போட்டவர் முத்துமோகன்.

சமூக அக்கறை கொண்டு தத்துவங்களைப் புரிந்து கொள்வது என்பதுதான் முத்துமோகன் அவர்களின் முக்கியமான பரிமாணம் என்று கருதுகிறேன். அறிவு சீவிகள் அல்லது உயர்ந்தோர் பேசுவதுதான் தத்துவம் என்ற தன்மையை மாற்றி, சாதாரண மக்களின் வாழ்க்கையிலிருந்து, செயல்பாடுகளில் இருந்து, பிரச்சினைகளில் இருந்து, தத்துவத்தை எவ்வாறு புரிந்து கொள்வது என்பதை விளக்கியவர் முத்துமோகன். தத்துவத்தைப் பேசும்போது அவரிடம் பல்புல அணுகுமுறை எப்போதும் இருக்கும். தத்துவம் என்பது சாதாரண மனிதர்களின் அறிவுக்கு எட்டாத ‘உயர்ந்த’ அறிவையும் ஞானத்தையும் பேசுவது என்பதை மறுத்து, சாதாரணப் பிரச்சினைகளிலிருந்து தத்துவங்களைப் புரிந்து கொள்வது என்பதை வலியுறுத்தியவர் அவர். இந்தப் பார்வை பேராசிரியர் நா.வா. அவர்களிடமிருந்து அவர் பெற்றது. அதனால் அவர் தமிழுக்கும் தாவுவார், அது போல இந்தியச் சூழலில் இதுவரையிலும் மிகவும் பரிச்சயப்படாத புதிய புதிய உலகளாவியச் சிந்தனைகளுக்கும் தாவிச் செல்வார். இதற்கெல்லாம் அவருக்குத் துணை நின்றது அவர் பெற்றிருந்த மார்க்சியப் பயிற்சிதான். அதாவது, நடைமுறையிலிருந்து தத்துவத்தைப் புரிந்துகொள்வது அவருடைய முக்கியமான பரிணாமம்.

தத்துவங்களைப் புரிந்து கொள்வதில் அவருடைய மார்க்சியப் பயிற்சி துணை நின்றது என்று குறிப்பிட்டீர்கள். மார்க்சியச் சிந்தனைகளைப் பயன்படுத்தி வரலாற்றுச் சூழல்களைப் புரிந்து கொள்வதில் அவருடைய பங்களிப்பு என்ன?

பாட்டாளி வர்க்கத்திலிருந்துதான் புரட்சி உருவாகும் என்று ஐரோப்பியச் சூழலில் மார்க்ஸ் கருதினார். இந்த இடத்தில் முத்துமோகனுடைய ரஷ்யக் காலக்கட்டம் மிக முக்கியமானது. மார்க்ஸ் ரஷ்யா குறித்துப் பேசும்போது 1877இல் நிக்கலோவ்ஸ்கிக்கு எழுதிய மறுப்புக் கடிதத்தில் தம்முடைய கருத்தைத் தெளிவுபடுத்துகிறார். முதலாளித்துவத்துக்குப் பிறகுதான் சோசியலிசத்துக்குச் செல்ல முடியும் என்ற கருத்தை அவர் விமர்சனம் செய்தார். ஐரோப்பியச் சூழலில்தான் தாம் அவ்வாறு பேசியதாக மார்க்ஸ் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டார். ஐரோப்பியச் சூழலில்தான் தாம் கூறியதை எல்லா நாடுகளுக்கும் பொருந்துவதாகக் கொள்ளக்கூடாது என்று மார்க்ஸ் கூறியிருந்தார். ரஷ்யாவைப் பொருத்தவரையில் அது முதலாளித்துவத்தை முழுமையாக அடைந்த பிறகு கம்யூனிஸத்தை நோக்கி நகரவில்லை. ரஷ்யாவிலிருந்த விவசாயிகள், விவசாயப் போராட்டங்கள், பெண்களின் முக்கியமான

பங்கு, ஒடுக்கப்பட்ட தேசிய இனப் பிரச்சினைகள் ஆகியவை ஒன்று சேர்ந்து தான் ரஷ்ய புரட்சி உருவானது. ரஷ்யாவில் தாம் பயின்ற காலத்தில், ரஷ்ய வரலாற்றை ஒரு மார்க்சியனாக முத்துமோகன் நன்கு உணர்ந்திருந்தார். தாம் பிறந்து வளர்ந்த களக்காட்டுப் பகுதியில் விவசாயப் பிரச்சினைகளும் போராட்டங்களும் எவ்வளவு தீவிரமாக இருந்திருக்கின்றன என்பதைத் தனது தந்தை நடராஜன், அவர் மிகவும் மதித்துப் போற்றும் தோழர் நல்லகண்ணு உள்ளிட்ட பிற பொதுவுடைமைவாதிகளின் போராட்ட அனுபவங்களில் இருந்து முத்துமோகன் நன்கு அறிந்திருந்தார். காலனியக் காலகட்டத்தில் விவசாயிகளின் போராட்டங்கள் எவ்வாறு இருந்தன என்பதை அவர் கற்று உணர்ந்திருந்தார். இவை தவிர, பழங்குடி மக்களின் போராட்டங்கள் போன்றவை காலனியத்தை அசைத்துப் பார்த்தவை.

இந்தியச் சூழலில் வளர்ந்து வரும் தொழிலாளி வர்க்கம் முழுமையடைந்து அதன் மூலம் புரட்சி ஏற்பட்டு, பொதுவுடைமை நோக்கிச் செல்லும் என்ற கருத்தினை முத்துமோகன் நம்பிக்கையோடு கொண்டிருந்தார்; என்றபோதிலும், இந்தியச் சூழலில், விவசாயப் போராட்டத்திற்கு அவர் எப்போதுமே முக்கியத்துவம் அளிப்பார். விவசாயப் போராட்டம் புரட்சிக்கு எந்த வகையில் அடித்தளமாக இருக்கிறது என்பதைப் பற்றியும் அவர் யோசித்தார். ஐரோப்பியச் சூழலில் உருவான மார்க்சியத்தை அப்படியே இந்தியச் சூழலுக்குப் பொருத்திப் பார்க்காமல், இந்தியச் சூழல் எப்படி இருக்கிறது என்பதைத் தெளிவாக அவர் உணர்ந்திருந்தார்.

இன்னும் குறிப்பாக, தமிழ்ச் சூழல் எனும் போது தமிழகத்தில் இயங்கிய திராவிட இயக்கங்கள், தலித்திய இயக்கங்கள், தேசிய இனப் பிரச்சனைகள் குறித்த விடயங்கள், பெரு நிலச்சுவான்தார்கள், பெருமுதலாளித்துவம், தமிழகத்தில் உள்ள பொதுவுடைமை இயக்கங்கள், தமிழ்ச் சூழலில் இருக்கும் வைதீக - அவைதீக முரண்பாடுகள், அடையாள அரசியல் குறித்த பிரச்சினைகள், பண்பாட்டு அரசியல் குறித்த பிரச்சினைகள், சிறுபான்மையினர் குறித்த பிரச்சினைகள் ஆகிய எல்லாவற்றையும் குறித்து முத்துமோகன் தெளிவான மார்க்சியப் பார்வை கொண்டவராக இருந்தார். தமிழ்ச் சூழலில் மார்க்சியத்தை எப்படிப் பொருத்திப் பார்ப்பது அல்லது தமிழ்ச் சூழலை எப்படி மார்க்சியப் பார்வையில் அணுகுவது என்ற தீவிரமான அணுகுமுறை அவரிடம் இருந்தது.

மார்க்சியத்துக்கு உள்ளே இருந்த பலவிதமான மார்க்சியக் கோட்பாடுகளை அவர் படித்து அறிந்திருந்தார். கருப்பின மார்க்சியம், அரபு மார்க்சியம், ஃபிராங்ஃபர்ட் மார்க்சியம், ஆஸ்திரிய மார்க்சியம், மேற்கத்திய மார்க்சியம், ஃபிரெஞ்சு மார்க்சியம் போன்ற பலவிதமான மார்க்சியங்களைப் படித்து அவை இந்திய, தமிழக வரலாற்றுச் சூழலையும் சமூகச் சூழலையும் புரிந்து கொள்வதற்கு எந்த அளவுக்குத் துணை செய்யும் என்பது குறித்தும் சிந்தித்தார்.

சிறுபான்மையினர் பிரச்சினையை ஆஸ்திரிய மார்க்சியம் எவ்வாறு கையாண்டது? இந்தியாவில் அதே பாணியைக் கையாள இயலுமா? என்பது குறித்து என்னை அவர் சிந்திக்க வைத்தார். New Left Reviewஇல் வெளிவந்த குறிப்பிடத் தகுந்த கட்டுரைகள் மற்றும் ஜான் பெல்லாமி ஃபாஸ்டர் போன்ற மார்க்சியர்கள் சுற்றுச்சூழல் சார்ந்த பிரச்சினைகளை மார்க்சிய ரீதியாக எவ்வாறு அணுகுகின்றனர் என்ற புரிதலோடு, சுற்றுச்சூழல் சார்ந்த பிரச்சனைகளை ஆய்வு செய்யவும் என்னைத் தூண்டினார். ஒடுக்கப்பட்ட வரலாற்றுச் சூழலில் மார்க்சியத்தின் பல்வேறு ஓட்டங்களை அறிந்து இந்தியச் சூழலுக்கு அவற்றைப் பொருத்திப் பார்த்து விடை காணும் முயற்சியில் ஈடுபட்டார். எந்தத் தத்துவப் போக்குகளையும் கதவடைக்காமல் திறந்த போக்கோடு அணுகுவது என்று அவர் சிந்தித்தார். அவற்றில் சில குறைபாடுகள் இருக்கலாம். ஆனால் அவற்றிலிருந்து தாம் கற்றுக்கொள்வதற்கு ஏதேனும் இருக்கிறதா என்று தேடும் வழக்கத்தை அவர் கொண்டிருந்தார். புதிய பிரச்சினைகள் உருவானால் மார்க்சியச் சூழலில் அவற்றைப் புரிந்து தீர்வு காண்பதற்கு அவர் முயன்றார்.

மரபான மார்க்சியத்திலிருந்து அவரது மார்க்சியப் பயணம் குறித்து சில குறிப்பிட்ட விடயங்களைக் கூறுக.

முத்துமோகன் அவர்களின் பல்வேறு கட்டுரைகளைத் தொகுத்து மார்க்சியக் கட்டுரைகள் என்ற தலைப்பில் காவ்யா பதிப்பகம் வெளியிட்டது. அந்த நூலின் முன்னுரையில் மார்க்சியம் என்பது அதன் மூலவர்களான மார்க்ஸ், எங்கல்ஸ், லெனின் ஆகியவர்களோடு முடிந்துவிடவில்லை. மார்க்சியம் தொடர்ந்து அந்தந்தக் காலகட்டங்களில் மார்க்சுக்குப் பிந்தித் தோன்றிய பல்வேறு தத்துவங்களோடு உரையாடல் செய்து தன்னைச் செழுமைப்படுத்திக் கொண்டே வந்தது. நூற்றைம்பது ஆண்டுக் கால மார்க்சியம் என்ற சொற்ச் சேர்க்கையை முத்துமோகன் பயன்படுத்துவார். இனவாதப் பிரச்சினைகளை மார்க்சிய நோக்கில் கருப்பின மார்க்சியம் அணுகியது. இனம் என்பதை வர்க்கப் பிரச்சினையுடன் குறுக்குவெட்டுப் போக்கில் இணைத்து, ஒரு முக்கியமான காரணியாக அணுகியிருந்தது. இது போன்ற பல்வேறு விடயங்களை அவர் உள்வாங்கினார். மார்க்சியம் என்பது தொடர்ச்சியாகப் பல்வேறு காலச் சூழல்களையும் வரலாற்றுச் சூழல்களையும் சமூகச் சூழல்களையும் எதிர்கொண்டு தன்னைச் செழுமைப்படுத்திக் கொண்டே வந்திருக்கிறது என்பது அவரது ஆய்வுகள் ரீதியான கருத்து.

இருத்தலியம், நிகழ்வியம், அமைப்பியல், பின்னமைப்பியல், பின்காலனியம் போன்ற எல்லாவற்றையும் படித்தறிந்து எந்த அளவிற்கு மார்க்சியத்தைச் செழுமைப்படுத்துவதற்கு இவை உதவக்கூடும் என்று அவர் சிந்தித்தார். மார்க்சியத்துள் ஏற்கெனவே பதிந்துள்ள, வெளியரங்கத்துக்கு வராமல் உட்புதைந்துள்ள விடயங்களை வெளிச்சத்திற்குக் கொண்டு வருவதற்கு, இந்தவிதத் தத்துவப் புலங்கள் எவ்வாறு உதவ முடியும் என்று தீவிர வாசிப்புகளை, ஆய்வுகளை மேற்கொண்டார்.

மரபான மார்க்சியத்திலிருந்து அவருடைய பயணம் எனும்போது மார்க்சுக்குப் பின் வந்த மார்க்சியர்கள் ஜார்ஜ் லூகாச், அன்டோனியோ கிராம்ஷி, அல்தூசர், ஹெர்பர்ட் மார்க்யூஸ், ஹெபர்மாஸ், அன்டோனியோ நெஹ்ரி, சந்தால் மொஃபே, லக்லவ், சி.எல்.ஆர். ஜேம்ஸ், இன்னும் பலர் செய்த மார்க்சிய ரீதியான ஆய்வுகளை, அவர் கற்றறிந்ததோடு எங்களையும் கற்கும்படித் தூண்டினார். அவர்களின் கருத்துகளின் அடிப்படையில் மார்க்சியம் செழுமைப்பட்டுள்ளதை அவர் உணர்ந்தார். இதன் மூலம் இன்றைய சவால்களுக்குப் புதிய வெளிச்சங்கள் அல்லது திறப்புகள் ஏற்படுத்த இயலுமா என்பது குறித்து அவர் சிந்தித்தார். தன்னையும் செழுமைப்படுத்திக் கொண்டார். நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம் வெளியிட்ட தேர்ந்தெடுத்த மார்க்சிய நூல்கள் தொகுப்புக்கு அவர் எழுதிய முன்னுரைகள் முக்கியமானவை. இடதுசாரி வெகுசனவியம் (left populism) போன்ற இடங்களில் சிறப்பாக நகர்ந்து சென்றார். இலத்தீன் அமெரிக்கச் சூழலில் வெகுசனவியம் எப்படிப் பிரபலமானது என்பதுடன் இந்தியச் சூழலைப் புரிந்து கொள்ள இது உதவுமா என்று சிந்தித்தார். இடதுசாரி இயக்கங்களை வளர்ப்பதற்கு இவை உதவ முடியுமா என்று ஆராய்ந்தார். மரபு மார்க்சியத்திலிருந்து தொடங்கிய அவரது பயணம் நீண்ட நெடியது என்று சொல்ல முடியும்.

தத்துவப் பேராசிரியராக மேற்கத்தியத் தத்துவங்கள் குறித்த அவரது பார்வை எப்படி இருக்கிறது?

முத்துமோகனுடைய முக்கியமான நூல்களுள் ஒன்று ஐரோப்பியத் தத்துவங்கள். அந்த நூலில் பழமையான கருத்துமுதல் வாதம், பொருள்முதல் வாதம் ஆகியவற்றிலிருந்து பகுத்தறிவு வாதம், அனுபவவாதம், நிகழ்வியம், இருத்தலியம், அமைப்பியல், பின் அமைப்பியல் போன்ற எல்லா விடயங்களையும் அந்த நூலில் பேசியிருப்பார். அவை குறித்து அந்தந்தத் தத்துவவாதிகள் சொல்லியிருப்பவற்றோடு நிறுத்த மாட்டார் அவர். மார்க்சிய ரீதியாக அந்தத் தத்துவங்களை எப்படி அணுகுவது - அந்தத் தத்துவங்களின் எல்லைகள் யாவை என்பவற்றைப் புரிந்து கொள்வது என்ற இடத்திற்கு நகர்வது அவருடைய தனிப் பாணி. அவற்றிலிருந்து நாம் எவற்றைக் கற்றுக்கொள்ள முடியும் என்பதை அவர் ஆராய்வார். எடுத்துக்காட்டாக, இருத்தலியத்தில் வரும் சுயம் என்பது அத்தத்துவத்திற்கு முந்தைய தத்துவங்களால் புறந்தள்ளப்பட்டது. அதனை எவ்வாறு இருத்தலியம் பேசுபொருளாக்கியது என்பதையும் முத்துமோகன் பேசுவார். மார்க்சிய அடிப்படையில் அத்தத்துவங்களை எவ்வாறு புரிந்து கொள்வது என்பதை அவர் எழுதியிருப்பார்.

இரண்டாவதாக, ஐரோப்பியத் தத்துவங்களின் அரசியல் என்ன என்பதை அவர் புரிந்து கொள்வது. அறம்சார்ந்த ஒரு விடயத்தைப் பேசுவதாக இருந்தால் அதன் பின்னணியிலுள்ள அரசியல் என்ன? எந்த வர்க்கத்தின் நலன்கள் சார்ந்து அந்தத் தத்துவம் பேசுகிறது? என்று பார்ப்பதை முக்கியமான ஒன்றாக அவர் கருதினார். பொருள்கோடலியலுக்கும் அவர் முக்கியத்துவம் கொடுக்கிறார். எம் போன்றவர்களுக்கு அவர் சொல்வது என்னவென்றால் நீங்களாக வாசித்துப் புரிய வேண்டும். நீங்கள் வாசிக்கும் போது உங்களுக்குப் புதிய புதிய அர்த்தங்கள்

கிடைக்கக்கூடும். பொருள்கோடலியல் என்பது வாசிப்பவனின் வாசிப்பு அனுபவம் சார்ந்தது என்ற முக்கியமான விடயத்தையும் அந்நூலில் கூறியிருப்பார். சாக்ரடீஸுக்கு முந்திய தத்துவவாதிகளின் காலத்திலிருந்து சமகாலத்தில் பேசப்பட்ட பின் - அமைப்பியல், பின்காலனியம் வரை அவர் பேசியிருக்கிறார். மார்க்சிய நோக்கில் அத்தத்துவங்களைப் புரிந்து கொள்வது என்பதே முக்கியமானது. எதையும் ஒவ்வாததாகத் தூக்கி எறியவில்லை. பின்-காலனியம் குறித்துப் பேசும்போது மேற்கத்திய அறிஞர்கள் கீழைத்தேய மக்கள் மீது கொண்டிருந்த பார்வைகளைக் கேள்விக்குட்படுத்தினார் முத்துமோகன். இந்தவிதக் கருத்தாக்கங்களை ***இந்தியத் தத்துவங்களும் தமிழின் தடங்களும்*** என்ற நூலிலும், சீக்கியம் குறித்த ஆய்வுகளிலும் காணமுடியும். அத்தோடு நிறுத்திக் கொள்ளாமல், இந்தியச் சூழலில் நிலவும் சாதியக் காலனியம் / சாதிய ஏகாதிபத்தியத்தை, அதன் வழியாக மார்க்சியனாகப் புரிந்து கொள்ளவும் முற்பட்டார் என்பதையும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்.

குருநானக் ஆய்வுத்துறையில் பேராசிரியராகப் பணியாற்றிய போது சமயங்கள் குறித்த – குறிப்பாக, சீக்கியம் குறித்த மார்க்சிய ரீதியான அவரது புரிதல் குறித்துக் கூறுக.

இந்தியச் சூழலில், மதம் குறித்த சமூக ஆய்வுகள் மார்க்சியர்களால் பெரும்பாலும் ஆழமாகச் செய்யப்படவில்லை என்று ஓரிடத்தில் குறிப்பிடுவார். சமயம் குறித்த அவருடைய பார்வை மார்க்சியப் பார்வைதான். குறிப்பாக, மார்க்ஸ் எழுதிய Critique of Hegel's Philosophy of Right என்ற நூலில் மதம் குறித்து மார்க்ஸ் கூறிய இரண்டு விடயங்களை முத்துமோகன் எப்பொழுதுமே அடிப்படையாக வைத்திருந்தார். மதம் என்பது மனிதத் துயரங்களின் வெளிப்படுத்துதலாகவும், அவற்றிற்கு எதிரான எதிர்ப்பாகவும் இருக்கிறது என்பதை மார்க்ஸ் குறிப்பிடுவார். இரண்டாவதாக, மதம் எப்படி ஒரு கருத்தியலாக இந்தியச் சமூகத்தில் செயல்படுகிறது? குறிப்பாக, கருமவினை மற்றும் ஆன்மா குறித்த கருத்தியல்களில் புதைந்து கிடக்கும் ஆளும் வர்க்க நலன் சார்ந்த கருத்தியல்கள் என்ன என்பதை அவரது ஆய்வுகள் சொல்லுகின்றன. இந்த இரண்டுமே மார்க்சிய அடிப்படைகளைக் கொண்டவை.

இந்த அடிப்படைகளைக் கொண்டு தான் சீக்கியச் சமயம் சார்ந்த ஆய்வுகளை அவர் மேற்கொண்டார். குருநானக் பாடல்கள் துன்பப்படுபவர்களைக் கண்டு இரங்கிப் பாடும் போது மனிதத் துயரங்களின் வெளிப்பாடாகச்

சமயம் இருக்கிறது என்பதை முத்துமோகன் எடுத்துக்காட்டுகிறார். குருநானக் பின்வருமாறு கூறுகிறார்: "ஒரு புலியும் இன்னொரு புலியும் ஒன்றுக்கொன்று சண்டையிட்டுச் சாவது எனக்குப் பிரச்சினை இல்லை. புலி ஆட்டைக் கொல்வதை என்னால் சகிக்க முடியாது. கடவுளே நீ எப்படி இதை அனுமதிக்கிறாய்?" மார்க்சிய ரீதியாக இதைப் புரிந்துகொள்ள வேண்டும் என்பார் முத்துமோகன். மனிதத் துயரத்தினுடைய எதிர்ப்பாகவும் சீக்கியம் செயல்படுகிறது என்பதையும் அவர் விளக்குவார்.

மதம் எப்படி ஆதிக்கத்தின் கருத்தியலாகச் செயல்படுகிறது, அதே நேரத்தில் விடுதலைக்கான ஒரு கருத்தியல் ஆயுதமாகவும் அது செயல்படுகிறது என்பதையும் அவர் விளக்குவார். இந்த இரண்டையும் சீக்கியத்தின் வழியாகவே அவர் விளக்குவார். சீக்கியக் குருமார்கள் சாதி, வருணம் போன்றவற்றை முறியடிப்பதற்கு லங்கர் போன்ற அமைப்புகளை உருவாக்கினார்கள். எப்படி கால்சா போன்ற அமைப்புகள் உருவானது என்பதை மார்க்சியத்தின் அடிப்படையில் புரிந்து விளக்குகிறார். சமயத்தின் சமூகவியல் (sociology of religion), துர்க்கைம், மாக்ஸ் வேபர் ஆகியோரை வாசித்து எந்தெந்த இடங்களில் அவர்களைப் பயன்படுத்த முடியுமோ அந்தந்த இடத்தைப் பயன்படுத்தியுள்ளார்.

இந்தியச் சூழலில் சீக்கியத்தைப் பற்றிப் பேசும் போது வைதீகம் - அவைதீகம் என்ற இருமைகள் இந்தியச் சமயங்களில் எவ்வாறு முரண்களாகச் செயல்படுகின்றன என்பதை விவரிப்பார். வைதீகப் போக்குக்கு எதிராக சீக்கியம் எவ்வாறு உருவாயிற்று, சீக்கியத்திற்குள் தோன்றிய அகாலி இயக்கம், குருத்துவாரா

சீர்திருத்த இயக்கம் போன்றவை வைதீகத்துக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டு எவ்வாறு தோன்றின என்பது குறித்து ஆராய்கிறார். அடித்தள மக்கள் பார்வையில் சீக்கிய சமயம் குறித்து எழுதும் போது, வைதீகம் - அவைதீகம் என்ற இருமை எதிர்வுகளுக்குள் இந்தியச் சமயங்கள் எவ்வாறு இயங்குகின்றன, அவை ஒன்றின் மீது ஒன்று எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்தின, எவ்வாறு சமரசம் செய்து கொண்டன என்ற விடயங்களை அவர் விளக்குகிறார்.

தமிழ்ச் சூழலில் குருநானக் ஆய்வுத் துறையை நடத்துவது பெரும் சவாலாக இருந்தது. ஏனெனில், தமிழர்களிடம் சீக்கியம் குறித்த பெரிய புரிந்துணர்வு ஏதும் இல்லை. பேராசிரியர் முத்துமோகன் தமிழ்ச் சமய ஆய்வுகளுடன் சீக்கிய ஆய்வினை ஒப்பீடு செய்யும் முறையை வளர்த்தெடுத்தார். மாணவர்களுக்கு அதில் ஈடுபாடு ஏற்படச் செய்து சிறந்த ஆய்வேடுகள் உருவாகுவதற்கு அவர் காரணமாக இருந்தார். ஆய்வேடுகளைக் கட்டுரைகளாக உருவாக்கி அவற்றை நூல்தொகுதிகளாக வெளியிட்டார்.

சீக்கியத்துக்குள் எப்படி இஸ்லாமிய, சூஃபியத் தாக்கங்கள் இருக்கின்றன என்பதை அவர் ஆய்வு செய்யத் தூண்டினார். பெரும் அக்கறையோடு ஆழமான ஆய்வுத் தரத்தோடு அவர் ஈடுபட்டதால் சீக்கிய அமைப்புகள் அவரைப் பெரிதும் மதித்தன. சீக்கியர்கள் பேராசிரியர் முத்துமோகன் மீது பெரு மதிப்பு வைத்திருந்தார்கள். கருத்தரங்குகள், மாணவர் உதவித்தொகை போன்றவற்றிற்கு ஏராளமான பண உதவிகளை வழங்கினார். மதுரை காமராசர் பல்கலைக்கழகத்திலிருந்து பணி நிறைவு பெற்ற பின்னர் பஞ்சாப்பிலுள்ள குருநானக் பல்கலைக்கழகம் அவரை மதிப்புறு (emeritus) பேராசிரியராகப் பணியமர்த்தி ஆய்வுகள் மேற்கொள்ளச் செய்தது.

மேலே சொன்ன, வைதீக – அவைதீக இருமைகள் எவ்வாறு சமயங்களில் ஊடாடி நின்றன என்பது குறித்த அவருடைய மார்க்சியப் பார்வை குறித்துச் சொல்ல முடியுமா?

வைதீக - அவைதீகச் சமயங்கள் குறித்த மார்க்சியப் பார்வை எனும் போது அதற்கு முன்னோடியாக இருந்தவர் தேபி பிரசாத் சட்டோபாத்யாய. மார்க்சிய அடிப்படையில் இந்தியத் தத்துவங்களை எவ்வாறு புரிந்துகொள்வது என்பதை அடிப்படையாக விளக்கியவர் அவர். அவர் பொருள் முதல்வாதம் - கருத்து முதல்வாதம் என்ற சட்டகத்தைப் பயன்படுத்தினார். நாத்திகம் எவ்வாறு இந்தியத் தத்துவங்களுக்குள் இருந்தது என்பதையும் அவர் விளக்கினார். பின்னாளில் ஆத்திகப் போக்குகளாக இந்தியத் தத்துவங்கள் மாறியதையும் அவர் சுட்டிக்காட்டுவார்.

முத்துமோகன் இந்தியத் தத்துவங்களும் தமிழின் தடங்களும் என்ற தமது நூலின் முன்னுரையில் தியோடர் வைஸ்மேன் என்ற மாஸ்கோவின் தத்துவ அறிஞர் ஒருவரை எடுத்துக்காட்டுகிறார். வரலாற்றுரீதியாகத் தத்துவப் பிரச்சனைகள் என்பது அவருடைய நூல். அந்நூலில் சமயத்தை அணுகுவதற்குக் கருத்துமுதல்வாதம், பொருள்முதல்வாதம் ஆகியவை அடிப்படையாக இருந்தாலும் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் சமயங்கள் பல்வேறு பரிமாணங்களை அடைந்துள்ளன என்பதை வரலாற்றுரீதியாகப் புரிந்துகொள்ள வேண்டும் என்கிறார். பல்வேறு பரிமாணங்களைக் கொண்ட தத்துவப் பிரச்சினைகள் வெவ்வேறு வடிவங்களை அடைகின்றன. எனவே புதிய தெளிவுகளைத் தர வேண்டிய தேவை இருந்தது.

இந்தியச் சூழல் என்று பார்க்கும் போது வைதீக - அவைதீகத்துக்குள் காணப்படக் கூடிய பல இருமைகளை முத்துமோகன் வெளிக்கொணர்ந்துள்ளார். உலகத்தின் உண்மைத் தன்மை, அதற்கு எதிரான மாயை, ஏகம்-அனேகம் என்ற இருமை ஆகியவற்றை அவர் விளக்கினார். ஏகம் எப்படி அதிகாரத்தோடு தொடர்புடையதாக இருக்கிறது. அதற்கு இணையாக அனேகம் எப்படி சனநாயகத் தன்மையோடு தொடர்புடையதாக இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டினார். இவை முக்கியமான தத்துவப் பிரச்சனைகளாக அவரால் முன்வைக்கப்படுகின்றன.

இது போலவே ஆன்மா - அனான்மா என்ற எதிர்வும். எவ்வாறு ஆன்மா என்பதை வைதீகத் தத்துவங்கள் இறுக்கின, அனான்மா என்ற தத்துவம் அந்தவித வர்ண-சாதி ரீதியான இறுக்கங்களில் இருந்து மனிதச் சுயத்தை விடுபட வைப்பதற்கு உதவின என்பதைப் பேசுகிறார். தத்துவப் பிரச்சினைகள் பல்வேறு வகையானவை. அவற்றைப் பலவாறு அணுகி விளக்க வேண்டும். இந்த இருமைகளை ஊடாடவிட்டு மார்க்சிய இயங்கியல் அடிப்படையில் இந்தியத் தத்துவங்களை அவர் விளக்கினார்.

அவர் எழுதிய முக்கியமான ஓர் ஆங்கில நூல் *Post Modernism in Indian Philosophy*. அது சிறிய நூல்; அதிகம் பேசப்படாதது. மிக அடர்த்தியான நூல் அது. அந்த நூலின் முக்கியமான கருத்துகள் வேதாந்தத்தின் கலாச்சார அரசியல் என்ற நூலில் உள்ளன. *Post Modernism in Indian Philosophy* என்ற அந்த நூலில் ஃபூக்கோ மற்றும் பின்

அமைப்பியல்வாதிகள் கூறும் கருத்துகளையும் மார்க்சியத்தையும் இணைத்து வைதீகத் தத்துவங்கள் - குறிப்பாக, அத்வைதத்துக்குள் ஆதிக்கம் தொடர்ந்து எவ்வாறு செயல்படுகிறது என்பதை விவாதிக்கிறார். உலகம் மற்றும் பிற பொருள்களும் உயிர்களும் மாயை எனும்போது, மனித உழைப்பு பலவீனப்படுத்தப்பட்டு மன உழைப்பு எவ்வாறு உயர்ந்ததாகக் காட்டப்படுகிறது. அதாவது, ஆன்மாவுக்கு முக்கியத்துவம் கொடுத்து உடம்புக்கு, உழைப்புக்கு முக்கியத்துவம் கொடுக்காது தொழிலாளர்கள் எவ்வாறு புறக்கணிக்கப்படுகிறார்கள் என்ற சிந்தனைப் போக்கினை அந்நூலில் விளக்குகிறார். இன்னும் கொஞ்சம் விரிவாகச் சொல்ல வேண்டுமென்றால் இந்தியத் தத்துவங்களுக்கு உள்ளே இருக்கும் அரசியல் என்ன என்பதை மிக அழுத்தமாகவே தொடர்ந்து அவர் பேசினார். வைதீகத் தத்துவங்களின் அரசியல் என்ன? அவைதீகத் தத்துவங்களின் அரசியல் என்ன? ஆகியவற்றைத் தொடர்ந்து பேசினார். தத்துவங்கள் யாருடைய நலம் குறித்துப் பேசுகின்றன? ஒடுக்கப்பட்டோரின் நலத்தைப் பேசுகின்றனவா? ஆதிக்க வர்க்கத்தின் நலனைத் திடப்படுத்த முயல்கின்றனவா? என்ற அவருடைய விவாதங்கள் முக்கியமானவை என்று கருதுகிறேன்.

தமிழ்த் தத்துவங்கள் குறித்த அவருடைய அணுகுமுறை எவ்வாறு உள்ளது?

தமிழ்த் தத்துவங்கள் குறித்த முத்துமோகன் அவர்களின் கட்டுரைகளுள் பல மார்க்சியக் கட்டுரைகள் நூலில் இடம் பெற்றுள்ளன. பாரதி, பாரதிதாசன், வள்ளலார், அயோத்திதாசப் பண்டிதர், சிங்காரவேலர், பெரியார் போன்றோர் பற்றிய கட்டுரைகளில் அவற்றைக் காணலாம். சங்க இலக்கியக் காலம் முதல் இன்றைய காலம் வரை காணப்படும் தத்துவச் சிந்தனைகள் குறித்த கட்டுரைகள் ***இந்தியத் தத்துவங்களும் தமிழின் தடங்களும்*** நூலில் இடம்பெற்றுள்ளன.

இந்த நூலில் தமிழருடைய பண்பாட்டு வேர்களை எவ்வாறு புரிந்து கொள்வது? அப்பண்பாட்டு வேர்கள் கொஞ்சமாகவோ அதிகமாகவோ, தொடர்ச்சியாகவோ எச்சங்களாகவோ சங்க காலத்திலிருந்து இன்றைய காலக்கட்டம் வரை தொடர்ந்து வந்திருக்கின்றன. சங்கப்பாடல்கள், காப்பியங்கள் போன்றவற்றிலிருந்து அவற்றை மீட்டுருவாக்கம் செய்கிறார் அவர். தொல்காப்பியம் குறிப்பிடும் நிலமும் பொழுதும் என்பதை புவியியல் சார்ந்த ஆதிப் பொருள்முதல்வாதம் என்ற இடத்திலிருந்து அவர் விவரிக்கிறார். சங்க இலக்கியத்தில் காணப்படும் அகம் - புறம் என்ற கருத்தாக்கங்கள், திருக்குறள் கூறும் பொருளும் இன்பமும் அறம் சார்ந்த விடயங்களாகப் பார்க்கப்படுதல், அறம் என்பது தத்துவங்களாகப் பரிணமித்தல் ஆகியன எல்லாவற்றையும் அவர் பேசுவது முக்கியமானவை.

தமிழர் தத்துவ மரபுகளை மிகவும் ஆழமாக மார்க்சிய ரீதியாக விசாரணை செய்தது முத்துமோகன் அவர்களின் தனிச் சிறப்பாகும். தமிழர் மரபைத் தத்துவ ரீதியாக அணுகுவது குறித்து ஏற்கெனவே சில நூல்கள் வந்துள்ளன. குறிப்பாக, பேராசிரியர் முப்பால்மணி, ஆசீவகம் குறித்துப் பேராசிரியர் நெடுஞ்செழியன் போன்றோர் எழுதியுள்ளனர். ஆனால் தமிழ்த் தத்துவங்களை மார்க்சிய நோக்கில் எப்படி அணுகுவது என்பதற்கு முத்துமோகன் எடுத்துக்காட்டாக விளங்குகிறார். இயங்கியல் மற்றும் வரலாற்றுப் பொருள்முதல்வாத அடிப்படையில் சங்க இலக்கியம் தொட்டு தற்காலம் வரையுள்ள தத்துவம் குறித்த மிகப்பெரும் பரப்பைத் தொட்டுப் பேசியவர் முத்துமோகன் மட்டுமே.

தமிழ் நாட்டில் உள்ள முக்கியமான தத்துவப் போக்கு சைவ சித்தாந்தம். சைவ சித்தாந்தம் குறித்தும் அவர் ஏராளம் எழுதியுள்ளார். ஆழ்வார்கள், ஆண்டாள், நாயன்மார்கள், சித்தர்கள் குறித்து அவர் ஆய்வு செய்து எழுதியுள்ளவை ஏராளம். நவீன காலம் என்று வரும்பொழுது இராமலிங்க வள்ளலார், அயோத்திதாசப் பண்டிதர், பாரதியார், பெரியார், சிங்காரவேலர் போன்றவர்கள் குறித்தும் அவர்களின் தத்துவப் போக்குகள் குறித்தும் தீவிரமாக முத்துமோகன் ஆய்வு செய்தார்.

அவருடைய இந்த ஆய்வின் தொடக்கமாக அப்போது மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் தமிழியல் துறைப் பேராசிரியராக இருந்த தமிழண்ணல் அவர்கள் தமிழ் சார்ந்த தத்துவப் போக்குகளைப் படிக்க வேண்டும், ஆய்வு செய்ய வேண்டும் என்று ஊக்கமூட்டினார் என்று முத்துமோகன் கூற நான் கேட்டிருக்கிறேன்.

மார்க்ஸ் அம்பேத்கர் தொடரும் உரையாடல் **என்ற நூலை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் து.ராஜா அவர்களுடன் இணைந்து எழுதினார். சாதி குறித்தும் அம்பேத்கர் குறித்தும் பேராசிரியர் முத்துமோகன் அவர்களின் புரிதல் குறித்துக் கூறுக.**

இந்தியச் சூழலில் காலங்காலமாக இருக்கிற பிரச்சினை வர்க்கமா? சாதியா? எது முக்கியம்? என்பது. இந்த இடத்தில் மார்க்ஸ் அம்பேத்கர் தொடரும் உரையாடல் என்பது முக்கியமான புத்தகம். அதற்கு முன்னால் மார்க்ஸ் அம்பேத்கர்

புதிய பரப்புகளுக்கான தேடுகை என்ற நூல் வெளிவந்தது.

இந்தியச் சூழலில், முக்கியமான இடதுசாரி இயக்கங்களாகப் பொதுவுடைமை இயக்கங்களையும், தலித்திய இயக்கங்களையும் நாம் காண முடியும். மார்க்சியர்களின் வேலைத்திட்டம் வேறு; அம்பேத்கரியர்களின் வேலைத்திட்டம் வேறு என்ற தோற்றம் இருக்கிறது. தமிழ்ச் சூழலில், முக்கியமான இடதுசாரி இயக்கங்களாக பொதுவுடைமை இயக்கம், தலித்திய இயக்கம், திராவிட இயக்கம் ஆகியவற்றை அடையாளம் காண முடியும். இவற்றிற்கு இடையே கொடுக்கல் வாங்கல்கள் இருந்தாலும், அவற்றுக்கு இடையே பாலங்களை உருவாக்கி இணைந்து செயல்பட்டு மக்களாட்சி சோஷலிசச் சமூகத்தை உருவாக்குவது என்ற எத்தனிப்போடும், எதிர்பார்ப்போடும் இந்தப் புத்தகம் வெளிவந்தது.

மார்க்சையும் அம்பேத்கரையும் விலக்கி வைத்துப் பார்க்காமல் அவர்களுடைய கருத்துகளும் கோட்பாடுகளும் எந்தெந்த இடங்களில் ஒன்றிணைகின்றன, அந்தப் புள்ளிகளைத் தேடுவது முக்கியமான விடயமாகும். இதனை முத்துமோகன் அவர்களும் தோழர் ராஜா அவர்களும் கவனப்படுத்தினார்கள். எப்படி வர்க்கமும் சாதியும் இந்தியச் சமூகத்தில் செயல்படுகின்றன என்பதை இந்தப் புத்தகம், மார்க்ஸ் மற்றும் அம்பேத்கர் வழிநின்று கோட்பாட்டு ரீதியாக விளக்குகிறது. சாதி என்பது பொதுவுடைமை நோக்கிய நகர்வுக்கு எவ்வாறு தடையாக இருக்கிறது என்ற ஆதங்கத்தோடு சாதியையும் வர்க்கத்தையும் இணைத்துப் பார்க்க வேண்டும்; மார்க்சியர்களும் அம்பேத்தரியர்களும் எவ்வாறு இணைந்து செயல்பட முடியும்; வர்க்கமற்ற சாதியற்ற சமூகத்தை எவ்வாறு உருவாக்குவது போன்ற அடிப்படை விடயங்களாக மார்க்ஸ் அம்பேத்கர் உரையாடலை மாற்றுவது என்று இரு அறிஞர்களும் சிந்தித்தனர்.

மார்க்சையும் அம்பேத்கரையும் படிக்கும் பொழுது அவர்கள் இருவரும் இணையும் புள்ளிகளை எளிமையாக அடையாளப்படுத்திக் காட்டுவதை நாம் உணர முடியும். குறிப்பாக, கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையில் மார்க்ஸ் ஒடுக்குவோர், ஒடுக்கப்படுவோர் குறித்துப் பேசுவார். இந்தப் புள்ளிகளையெல்லாம் இணைக்கும் பொழுது இந்தியாவில் சாதியால் ஒடுக்கப்பட்டவர்களும் இருக்கிறார்கள்; ஒடுக்குவோரும் இருக்கிறார்கள். இவர்கள் சார்ந்து மார்க்சிய ரீதியாக இந்தியச் சூழலைப் புரிந்து கொள்வது என்ற முயற்சியை இந்தப் புத்தகத்தில் பார்க்க முடியும்.

இரண்டாவதாக, வெறுமனே வர்க்கம் சார்ந்தோ சாதி சார்ந்தோ நிறுத்திக்கொள்ளாமல் அவை இரண்டும் ஒன்றோடொன்று இணைந்து, பிணைந்து எவ்வாறு இயங்குகின்றன என்பது முக்கியமானது. அம்பேத்கர் மிகவும் தெளிவாக இதனை வலியுறுத்துகிறார். அம்பேத்கர், சாதி என்பது கதவடைக்கப்பட்ட வர்க்கம் என்று கருதினார். சாதி எங்கே முன்னெழும்பும், வர்க்கம் எங்கே முன்னெழும்பும் என்பதை அம்பேத்கர் தெளிவாகக் குறிப்பிடுகிறார். 1938-ஆம் ஆண்டு அம்பேத்கர் மஹாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள மன்மத் எனும் இடத்தில் இரயில்வே தொழிலாளர்களிடம் பேசியது முக்கியமானது. இந்தியாவின் முக்கிய எதிரிகள் முதலாளித்துவமும் பார்ப்பனியமும் என்று அவர் பேசினார். இது போன்ற இடங்களில் மார்க்ஸும் அம்பேத்கரும் ஒருமித்த கருத்தினைக் கொண்டிருந்தனர் என வெளிப்படையாகத் தெரிகிறது.

மூன்றாவதாக, இந்த உரையாடல் பல பரப்புகளை நோக்கி நம்மை நகர்த்துவதாக இருக்கிறது. மார்க்ஸ் இந்தியா குறித்து எழுதிய கட்டுரைகள் தொகுக்கப்பட்ட நூல்களாக வெளிவந்துள்ளன. மார்க்ஸ் சாதி குறித்தும் சாதி அமைப்புக் குறித்தும் அந்தக் கட்டுரைகளில் பல்வேறிடங்களில் பேசியிருக்கிறார். அவை ஏறக்குறைய அம்பேத்கர் குறிப்பிடும் நிலைப்பாட்டை ஒட்டி வருகின்றன. இவை பெரும்பாலும் மிக அதிகமாகப் பேசப்படாத விடயங்களாகவே இன்றுவரை உள்ளன. மேலதிகமாக, மார்க்ஸ் 1870க்குப் பிறகு சமூகம் சார்ந்து, பண்பாடு சார்ந்து, இனவியல் சார்ந்து ஏராளமான நூல்களைக் கற்றார். அப்போது அவர் எடுத்த குறிப்புகள் Ethnological Notebooks என்ற நூலாக வெளிவந்து அரை நூற்றாண்டு ஆகிவிட்டது. அவை குறித்த தீவிர ஆய்வுகள் தமிழ்ச் சூழலில், இந்தியச் சூழலில் இன்னும் இல்லை என்பதை அவதானிக்க முடியும். அக்குறிப்புகளில் ஓரிடத்தில், சாதி எப்படி அகமண முறையிலிருந்து உருவானது என்பது குறித்துப் பேசியிருக்கிறார். இது குறித்து அம்பேத்கர் கூறுவதையும் இந்த இடத்தில் ஒப்பு நோக்கலாம். இவையனைத்தும், மார்க்ஸ் - அம்பேத்கர் உரையாடலை முன்னெடுத்துச் செல்ல பல கோட்பாட்டு இணைவுகளைச் சுட்டுவனவாக இருக்கின்றன.

அம்பேத்கரியர்களும் மார்க்சியர்களும் சோசலிசச் சமுதாயத்தையோ ஒரு ஜனநாயக அமைப்பையோ உருவாக்குவதற்கு இணைந்து செயல்பட வேண்டும் என்பதற்கு முக்கிய அடித்தளமாக அந்நூல் விளங்குகிறது என்று நான் புரிந்து கொள்கிறேன்.

●

நவீன காலம் பற்றிய தொன்மக்கதைகள்- பஞ்சவர்ணக் குகை

முனைவர் **த.பிரகலாதன்**

நம் தொன்மங்களை நவீன காலத்திற்கேற்ப மறுபடைப்புகளாக, சிறுகதைகளாக மீள்படைப்பு செய்யமுடியுமா- அதே வேளை அவை நவீனகாலத்திலும் சமூகத்திற்குப் பயனாகுமா? நவீன காலத்திற்கேற்ற தொன்மங்களைப் படைக்கமுடியுமா- நிச்சயமாக முடியும் என்று தனது பஞ்சவர்ண குகை என்ற தலைப்பிலான சிறுகதைத் தொகுப்பில் நிறுவிக்காட்டியிருக்கிறார் கவிஞர்.நட.சிவகுமார். 15 சிறுகதைகளைக் கொண்ட அச் சிறுகதைத் தொகுப்பில் நான்கு கதைகளைத் தவிர மற்ற அனைத்துமே சர்ரியலிசம் மற்றும் மாந்திரீக யதார்த்தம் போன்ற கோட்பாடுகள் சார்ந்தவை. வழக்கமான யதார்த்தப் படைப்புகளினின்றும் வேறுபட்டு நிற்பவை. ஆயினும் சமூகத்தைப் பற்றிய உண்மைகளை வேறொரு கோணத்தில் தருபவை. அந்த வகை எழுத்துமுறையில் தமிழவன், பிரேம், எம்ஜி சுரேஷ், குமார செல்வா போன்றோரது வரிசையில் இடம்பெறுகிறார், கவிஞர் நட.சிவகுமார்.



பதிப்பகம்- நாதன் பதிப்பகம், சென்ன
2022 விலை ரூபாய்-140

இவரது கதைகள் சிறந்த சர்ரியலிச எழுத்தாளராக அடையாளம் காட்டும் அதேவேளை தமிழ் சமூக வரலாறு சொல்ல மறந்த சரித்திர உண்மைகளை நிழல்வடிவில் சிறுகதைகளூடாக விவரித்துச் செல்கின்றன. அந்த கதைகளுக்கான கதைக்கருக்களைக் கன்னியாகுமரி மாவட்டத்தில் நாட்டுப்புற இலக்கியங்களினின்றும் நம்பிக்கைகளிலிருந்தும் எடுத்துக் கையாண்டுள்ளார்..அதேவேளை அவரும் புதிய தொன்மங்களை உருவாக்கியுள்ளார். இது போன்ற கதைகள் தொடக்க காலத்தில் தமிழவனால் எழுதப்பட்ட போது பலரும் நிராகரித்தனர். ஆனால் அத்தகைய எழுத்துக்கள் இலக்கிய உலகில் இன்னும் ஓர் அழகியலைத் தருகின்றன; புதிய சிந்தனைகளைத் தருகின்றன. அவ்வகையில் பஞ்சவர்ண குகை கதைகள் புதிய நடைமுறை வாழ்வியல் குறித்த புதிய சிந்தனைகளைத் தருகின்றன; நிழல் தன்மையையும் ஒரு வகையான நகைச்சுவையையும் ஒருங்கே கொண்டுள்ளன.

உதிரம் குடிக்கும் அழகியின் அந்தரங்கப் பல் என்ற முதல் சிறுகதையை வாதைக்கதை மற்றும் நீலிக்கதையை ஒருங்கிணைத்து இன்னொன்றாகப் படைத்துள்ளார் . இக்கதையானது இளைஞர்களைக் கவர்ச்சி காட்டி உதிரம் குடிக்கும் மோகினியைப் பற்றியது. அதை அடக்க அரசன் மந்திரவாதிகள் மூலம் மேற்கொண்ட முயற்சி தோல்வியடைகிறது. இது போன்ற கதைகள் 1980 கள் வரை பேய்க்கதைகள் என்றோ அல்லது மூடநம்பிக்கை சார்ந்தவை என்றோ முத்திரை குத்தப் பெற்றிருக்கும். இது போன்ற பேய்க்கதைகளை எழுதுவதற்காகவே அக்காலத்தில் பேய்க்கதை மன்னர்கள் இருந்தனர்.அவர்களது நோக்கம் வாசகரின் மனதில் முடிந்த அளவு திகிலை ஊட்டுவதும், பேயிடமிருந்து தப்பிக்க அம்மன் மீதான நம்பிக்கையை ஏற்படுத்துவதுமே ஆகும். ஆனால் இந்தக் கதையோ பேய்களின் மீது அனுதாபத்தை ஏற்படுத்துகிறது. சமூகத்தில் உயர்தட்டில் இருந்தோர் பெண்களைச் சீரழித்த உண்மையைப் புலப்படுத்துகிறது. அநியாயமாகக் கொல்லப்பட்டவர்களே கொடுந்தெய்வமாக மாற்றப்பட்ட சமூக உண்மையைப் புலப்படுத்துகின்றது. நவீன காலத்திற்கேற்ப இந்தக் கதையில்லையே என்ற கேள்வி கேள்வி கேட்போர் ஒன்றை உணர்ந்து கொள்ள வேண்டும். இது போன்ற பேய் சார்ந்த விசயங்களோடு இரண்டற கலந்துதான் நமது இந்திய சமூகம்.. ஒரு காலத்தில் பேய்கள் உண்மை என்ற நிலையில் கதைகள் எழுதப்பட்ட நிலையை மாற்றி அதனுள் புதைந்து கிடக்கும் உண்மையைப் புரிய வைப்பதற்கான எழுத்து முறைதான் இந்த மாந்திரீக யதார்த்தக் கதை.. இக்கதையின் மொழிநடை 18 ஆம் நூற்றாண்டிற்கே நம்மை இழுத்துச் செல்கிறது..

காக்கை சாம்பலில் ஒரு சிகப்பு கண் என்ற இரண்டாவது கதை இந்தியப் பண்பாட்டு வாழ்க்கையில் இரண்டறக் கலந்த மாந்திரீக நம்பிக்கையைப் பற்றிப் பேசும் அதேவேளை இந்த இருபத்தொன்றாம் நூற்றாண்டிலும் அத்தகைய நம்பிக்கையைக் கொண்டு வாழும் மனிதர்களை அடையாளப் படுத்துகிறது. காக்கையைக் கொன்று அதன் சாம்பலுடன் எருக்கம்பூ, வெத்திலை போன்ற பொருட்களைச் சேர்த்து எரித்துச் சாம்பலாக்கி எதிரியின் வீட்டு மேற்கூரையில் போட்டால் அந்த வீட்டில் துர் மரணம் ஏற்படுத்த முடியும் என்ற நம்பிக்கைதான் கதையின் கரு. எனவே காக்கையைப் பிடிக்கும் முயற்சியும் காக்கைச் சாம்பலைத் தயாரித்தவனுக்கு ஏற்படும் வேதனையான விந்தையான அனுபவங்களுமே சுவைபட கூறப்படுகின்றன. ஒரு காலத்தில் மக்கள் மனதை ஆட்சி செய்து கொண்டிருந்த மாந்திரீக நம்பிக்கை சிறப்பாகப் பதிவு பெற்றுள்ளது..

இது போலவே, அடுத்தடுத்து இடம்பெறும் சிறுகதைகள் பெற்றிருக்கும் - தற்கால சமூகம் மறந்து போகும் நிலையில் இருக்கக் கூடிய - நம்பிக்கைகளையும் அவற்றின் அடிப்படையில் செயல்படும் மக்களையும் சித்திரிக்கின்றன.

ஆத்துக்கடவு அம்மை என்ற கதை விளிம்பு நிலை மக்கள் தங்கள் சாமிகளின் மீது வைத்திருக்கும் நம்பிக்கையைச் சித்திரிக்கிறது... துணி துவைக்கும் விளிம்பு நிலை உழைப்பாளி ஆற்றின் கரையில் உள்ள தெய்வத்தை நேரடியாகப் பார்த்ததாகவும் அதன் மூலம் அவன் மனது புளகாங்கிதம் அடைவதையும் சுட்டும். பொதுவாகவே அடித்தட்டு மக்களிடம் இத்தகைய கதைகள் இது போல் உலவுவதை நாம் கேட்டிருப்போம். ஆனால் இந்தச் சிறுகதையோ நமக்குள் வேறு விதமான சிந்தனையை எழுப்புகிறது. அந்த அம்மன் சாமி குளிப்பதைப் பார்த்த - கொடுத்து வைத்த - துணி துவைக்கும் தொழிலாளிக்கு ஏன் அம்மன் சாமி பொருளாதார நிலையில் அருள் தரவில்லை? அம்மன் குளிப்பதைக் கண்டதால் மட்டுமே மனநிறைவுடன் வாழமுடியுமா என்ற கேள்வியை வாசகன் மனதில் தவறாமல் ஏற்படுத்துவதோடு இத்தகைய நம்பிக்கைகளோடுதான் அடித்தட்டு மக்கள் வாழ்க்கையில் அமைதியாகக் கடந்துப் போகிறார்கள் என்ற உண்மையை நமக்குள் உணர்த்துகிறது.

நான்காவது கதை 22 வரிகளுடன் முடிவடைகிறது. தமிழவனின் ஏற்கெனவே சொல்லப் பட்ட மனிதர்கள் நாவலில் ஒரு கதாபாத்திரம் நாயாக உரு மாறுவதும் மந்திரத்தால் மீண்டும் மனித உருவம் பெறுவதாகவும் அக்கதை அமைந்திருக்கும்... அதை நினைவூட்டுகிறது இந்தக் கதை... இந்தக் கதையில் வரும் "அவன்" திடீரென்று 5 வயது சிறுவனாகிவிடுகிறான். பிறகு மந்திரம் போட்டதும் தன் உருவம் அடைகிறான்..

ஐந்தாவது கதை யதார்த்தக் கதை என்றாலும் கூட ஆடு வளர்ப்பவர்களைப் பற்றிய நுட்பமான செய்திகள் தருகிறது. ஆனாலும் அதன் மொழிநடை வட்டார வழக்கு அந்த மொழி தெரிந்தோரை மட்டுமே மகிழ்விக்கும்.. வட்டார மொழியில் அமைந்த ஒரு படைப்பு எந்த அளவுக்குப் பிற வட்டாரத் தமிழர்களைக் கவரும் என்பது கேள்விக்குறி. ஆடுவளர்க்கும் அந்த பெரியவருக்குத் தனது வீட்டிலுள்ள குழந்தைகளை விட இறைச்சிக்காக விற்கப்படும் ஆடுகள்தான் முதன்மையாகத் தெரிகின்றன.

Mr.இஸ்திரி என்ற கதை சர்ரியலிச நடையில் அமைந்துள்ளது. இந்திய பாரம்பரிய தொன்மத்தை ஒத்த புதியதொரு தொன்மமாக உருவாக்கப் பட்டுள்ளது..பசி போக்கும் மருத்துவம் கண்டு பிடிக்கிறார் Mr இஸ்திரி. அதனால் அந்த ஊர் அடித்தட்டு மக்கள் உணவுக்காகப் பிறரைச் சார்ந்திராத நிலைமை ஏற்படுகிறது..எனவே அரசாங்கம் அவரைப் பிடிக்கப் பெரும் படையை அனுப்புகிறது.. ஆனால் அவர்கள் எல்லாருமே அழிந்து விடுகிறார்கள்... இந்த கதையின் சர்ரியலிச மொழிநடை நம்மைச் சிரிக்க வைப்பதுடன் கதையின் பொருண்மையை ஆராயத் தூண்டுகிறது.. இருபது வருடங்களுக்கு முன்பு மூலிகை பெட்ரோல் கண்டுபிடித்த இராமனுக்கு நேரிட்ட உண்மையை ஏனோ நினைவுப் படுத்துகிறது இந்த கதை... கதையிலுள்ள சில வாக்கியங்களை இங்கு எடுத்துக் காட்டலாம் -"ஒரு மாதத்தில் ஒரு நாள் ஒரு மணிநேரம் மட்டுமே உறங்கும் மீசைக்காரர் தனது கடையைப் பூட்டிவிட்டு ......"Mr இஸ்திரி ஆய்வின் மூலம் கண்டு பிடித்த உண்மைகளை அனைவருக்கும் தெரியப்படுத்தும் நோக்கோடு மரக்கிளையிலும் துணி துவைக்கும் கல்லுக்கு அடியிலும் ஒவ்வொரு வீட்டிலுமுள்ள கழுதைகளின் கழுத்தில் கட்டித் தொங்கவிட்டார்""

இம்மாதிரியான மொழிநடை இந்த சிறுகதைத் தொகுப்பை வெற்றியடையச் செய்து விட்டது என்று கூறிட முடிகிறது.

அலுமினியத் தட்டில் அரிசி காய்த்துக் கொண்டிருந்தது என்ற தலைப்பிலான ஏழாவது கதை நவீன வாழ்வியலையும் தொன்மக்கதையையும் இணைத்துள்ளது. இந்த தொன்மத்தைப் புதிதாக உருவாக்கியுள்ளார் படைப்பாள். அரிசி காய்க்கும் மரம் பற்றியும் அதை வளர்ப்பதைப் பற்றியும் பேச ஆரம்பித்து, வேளாண்மையை அழித்து அறிவியல் முன்னேற்றத்தை மட்டும் முன்னிறுத்தி அரசு இயங்குவதைத் தொன்மக்கதையாக விளக்கிச்செல்கிறது. பாதிக்கப்பட்ட மக்களுக்குக் குலதெய்வமே துணையென்பதால் அந்தக் குலதெய்வமே தன் மக்களுக்காகப் பசி, பஞ்சம் போக்கும் மாங்கனியைத் தேடி 7 மலைதாண்டி சிக்கலான குகைக்குள் போகிறது. ஆனால் திரும்ப முடியவில்லை – இந்தக் கதையில் குலதெய்வம் மக்களுக்காகக் கண்ணீர் சிந்துவதும் குலதெய்வம் அரசை எதிர்க்கமுடியாமல் மக்கள் குறை தீர்க்க மாங்கனியைப் பறிக்கப் போவதுமாக சித்திரிக்கப்படுவது புதுமையாக உள்ளது. கடவுள் கூட அரசை எதிர்க்கமுடியாது என்ற கருத்து பூடகமாகச் சுட்டப்படுகிறது. குகைக்குள் போன தேவதை திரும்பவே இல்லை. குகையில் இருந்து தேவதை திரும்பி வரும் போது அந்த மக்கள் அதன் வரவுக்காகக் காத்திருப்பார்களா என்றும் தெரியவில்லை என்று கதை முடிகிறது. அழகியலாக நகரும் அதேவேளை அறிவுத் தளத்தில் இருந்து நம்மைச் சிந்திக்கவும் வைக்கிறது. நமக்காக வாழ்வைத் தியாகம் செய்யும் தலைவர்களை ஒரு காலகட்டம் கழிந்து போற்றுவோமா

என்ற சிந்தனையை நமக்குள் எழுப்புகிறது . இந்தக் கதையின் வடிவமும் கவனிக்கத்தக்கது.. காவியங்களில் போல இடையிடையே உபத் தலைப்பு கொடுக்கப்பட்டுள்ளது.. காடுகாண் காதை, விமலையார் இலம்பகம் என்பது போல போல பேசியது காட்டுப் பூனை, இறைச்சியைப் புசிக்க வந்த காகம், தேவதை சொன்ன குறிப்புகள், போகும் வழியிலுள்ள சில செய்திகள், காக்கைகள் வாழும் குகை என்ற உபத்தலைப்புகள் அழகியல் உணர்வை ஏற்படுத்துகின்றன.

பல்கலைக்கழகத்தில் இருந்து தோண்டி எடுக்கப்பட்ட இரத்தம் படிந்த கைவிரல்கள் என்ற 8 ஆவது கதை தற்போதைய கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்களில் நடக்கும் கூத்துகளைப் பேசுகிறது. யதார்த்த நடையில் கூட இந்த அளவுக்குச் சித்திரிக்க முடியாது.. சர்க்கஸ் கண்ணாடியில் நமது உருவம் நமக்கே சிரிப்பூட்டும் வண்ணம் கோணல் மாணலாக அமைந்திருப்பது போல வாக்கியங்கள் வேறுபட்ட தன்மையில் அமைந்து நம்மைச் சிரிக்க வைப்பதுடன் அது தொடர்பாக இன்னும் பல விஷயங்களை நமக்குள் நினைவூட்டுகின்றன. நம் கல்வி நிறுவனங்களில் உள்ள பொறுப்பான அதிகாரிகள். பேராசிரியர்கள் போன்றவர்களின் இயல்புகளை நகைச்சுவையுடன் கலந்து குத்திக்காட்டுகிறது. ஒரு பல்கலைக்கழகம் திடீரென மாணவ மாணவியருடன் புதைந்து போனது பற்றியும் அது தொடர்பாக அரசாங்கம் அமைத்த விசாரணை குழு பற்றியும் அந்த விசாரணைக் குழு எந்த மாதிரியான அறிக்கை தந்தது என்பதுதான் கதை..

அடுத்த கதை அன்னை உண்ட தீ. தீயோடு வாழப் பழகிவிட்ட நவீன மனித வாழ்க்கை பற்றியது. தற்போது நாம் அனுபவித்து வரும் பிரச்சினைகள் நமக்கு மாறப்போவதில்லை. நாளாவட்டத்தில் அதுவே வாழ்க்கையில் பழக்கமாகிவிடும் என்பதை நகைச்சுவையாக எடுத்துச் சொல்கிறது. எலி ஒருவனது வாய்க்குள் புகுந்து விடுகிறது; அது காதின் வழியாக 14 மணிநேரத்தில் வெளிவரும் என்றெல்லாம் பேசுகிறது. தீயுடன் மனிதன் இனிமேல் இணைந்தே பயணிப்பான் என்ற உண்மையைச் சிறப்பாகச் சுட்டுகிறது .

கேரளபுரம் எனும் சிறுகதை சாதியப் பிரச்சினையை மையமாகக் கொண்டது. கன்னியாகுமரி மாவட்டத்திற்கேற்ற சாதியப்பிரச்சினை அது. எந்த சாதி என்று குறிப்பிடாமலே ஒடுக்கப்பட்டவர்கள் யார், ஒடுக்கியவர்கள் யார் என்ற விபரத்தை வாசகன் புரிந்து கொள்ளும் வண்ணம் அமைந்திருப்பது பாராட்டுக்குரியது. ஒடுக்கப்பட்டோர் தங்கள் எதிர்ப்பை எவ்வாறு வெளிப்படுத்துகின்றனர் என்பதும் குறிக்கத்தக்கது.

11 ஆவது கதையான ''அரிஷ்டம்'' மிகவும் கவனிக்கத்தக்க ஒன்று. யதார்த்த மொழிநடையில், அண்மை காலம் வரை கன்னியாகுமரி மாவட்டத்தில் நிகழ்ந்த அரிஷ்டம் எனும் மதுபான உற்பத்தி குறித்துப் பதிவுசெய்கிறது. அதை விற்பனை செய்வது, அதன் மூலம் வாழ்க்கை நடத்துவது, போலிசார் அதன் மூலம் வருமானம் பார்த்தது போன்ற வாழ்வியல் உண்மைகளை முதல்முதலில் பதிவுசெய்துள்ளது. இதில் பேசப்படும் , பனைகளை வைத்து உயிர் வாழ்ந்து வந்தவர்கள் அவற்றை அழித்து விட்டார்கள் என்ற கருத்து மனதில் வலியை ஏற்படுத்துகிறது.

220 அண்டங்களும் பதினேழு அறைகளும் என்ற கதை சித்தர்கள் குறித்த நம்பிக்கையை மையமாக்கி சித்தர்கள் உலகைப் புதிய பரிமாணத்தில் விவரிக்கிறது. சித்தர்களைப் பற்றிய கதைகளைப் போலவே அமைந்துள்ளது. புதிதாக உருவாக்கப்பட்டுள்ள இந்தக் கதை. பாரதியாரின் குயில்பாட்டு ஒரு மர்மத்தன்மை கொண்டிருப்பது போல இந்தக் கதை வேறொரு மர்மத்தன்மை கொண்டுள்ளது. ஒரு சித்தர் குளிகை ஒன்றை இன்னொருவனிடமிருந்து பறித்துக் கொண்டு பறந்து போவார். அவரைத் துரத்தி பல உலகங்களுக்கும் பறந்து செல்வதாக அமைகிறது இக்கதை.

மொத்த நிலையில் பார்க்கும் போது, இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ள யதார்த்த, மிகையதார்த்த(சர்ரியலிச) கதைகள் அனைத்துமே மேற்போக்காக வாசிக்கும் போது ஓர் அர்த்தமும் கொஞ்சம் சிந்திக்கும் போது சமூகத்தைப் பற்றிய வேறொரு அர்த்தத்தையும் தருவனவாக உள்ளன. சர்ரியலிசக் கதைகள் யதார்த்த எழுத்துகளை விட சமூகத்தைப் பற்றிய உண்மைகளைக் குறியீடுகள் மூலம் உணர்த்த வல்லன என்பதை நிறுவிக்காட்டுகின்றன பஞ்சவர்ணக் குகையில் இடம்பெற்றுள்ள கதைகள்.

இந்தச் சிறுகதைத் தொகுப்பிற்கு எழுச்சித் தமிழர் திருமாவளவன் விருது கிடைத்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

●

கட்டுரையாளர்: உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, சிந்திக் கல்லூரி, சென்னை,

கட்டுரை



புரட்சியாளர் லெனின் எழுதிய தேர்வு நூல்களை ஏன் வாசிக்க வேண்டும்?

விலை: ரூ.340/- | வெளியீடு: என்சிபிஎச், சென்னை.

(லெனின் தேர்வு நூல்கள் 12 தொகுதிகளில் – தொகுதி 2 கட்சி – அமைப்புக் கோட்பாடு)

இந்திரா

“வாருங்கள், வந்து அமருங்கள். எதையுமே கலந்துரையாடி, ஒரு முடிவு எடுத்து விடலாம்” என்று இயங்கியல் அடிப்படையில் செயலாற்றுவதில் புரட்சியாளர் லெனின் மிகவும் உறுதியுள்ளவர்.

ரஷ்ய சமூக – ஜனநாயகத் தொழிலாளர் கட்சி (Russian Social Democratic Labour Party) யின் இரண்டாவது காங்கிரஸ் 1903, ஜூலை 17 முதல் ஆகஸ்ட் 10 வரை நடைபெற்றது.

ர.ச.ஜ.தொ.கட்சியின் வேலைத் திட்டத்தையும் விதிகளையும் அங்கீகரித்தல், கட்சியின் மத்திய உறுப்புகளுக்கான தேர்தல் ஆகியவை காங்கிரசின் நிகழ்ச்சி நிரலில் இருந்த முதன்மையான வகையினங்கள்.

இந்த இரண்டாவது காங்கிரசில் லெனினும் அவரது ஆதரவாளர்களும் ஒரு புறம்; பிளகனவ், மார்த்தவ், டிராட்ஸ்கி, உள்ளிட்டோர் எதிர்புறம். காங்கிரசின் போது, லெனின் ஆதரவாளர்கள் பெரும்பான்மையோர். (ரஷ்ய மொழியில் போல்ஷ்விக் என்றால் பெரும்பான்மை) ஆனார்கள்; பிளகனவ், மார்த்தவ் சிறுபான்மையினர் (மென்ஷ்விக் என்றால் சிறுபான்மை) ஆக ஆனார்கள்.

கட்சியின் உறுப்பினருக்கான தகுதி என்னவாக இருக்க வேண்டும் என்று முடிவு செய்கிற வேளையில் லெனினுக்கும் அவரை எதிர்த்தவருக்கும் – அதாவது, போல்ஷ்விக்குகளுக்கும் மென்ஷ்விக்குகளுக்கும் இடையே பிளவு ஏற்பட்டது. அந்தப் பிளவை லெனின் இயங்கியல் முறையில் அணுகுகிறார்.

அதையொட்டி, 1904 ஜனவரியில் வெளியிடப்பட்ட ர.ச.ஜ.தொ. கட்சியின் இரண்டாவது காங்கிரசின் கூட்ட நடவடிக்கைக் குறிப்பேடுகள், தீர்மானங்கள், பிரதிநிதிகளின் உரைகள் ஆகியவற்றுடன், காங்கிரசில் உருவெடுத்த குழுப்பிரிவுகள், மத்தியக் குழு, கட்சிக் கவுன்சில் ஆகியவற்றின் ஆவணங்கள் என அனைத்தையும் கவனமாக ஆய்வு செய்தார். இவற்றைப் பல மாதங்கள் ஆய்வு செய்த லெனின் “ஓரடி முன்னால் ஈரடி பின்னால்” (நமது கட்சியில் ஏற்பட்டுள்ள நெருக்கடி) என்னும் நூலை எழுதினார். இந்த நூலின் முதல் பதிப்பு 1904,இல் ஜெனீவா நகரில் வெளியிடப்பட்டது. பின்னர் 1941இல் இலண்டன் நகரில் உள்ள லாரன்ஸ் அண்ட் விஷார்ட் நிறுவனம் வெளியிட்டது. 1964, 1965 ஆண்டுகளில் மாஸ்கோவில் உள்ள முன்னேற்றப் பதிப்பகத்தால் நிறுவனத்தில் வெளியிடப்பட்டது.

1976ஆம் ஆண்டு சீனாவின் பெய்ஜிங் நகரில் ஃபாரின் லாங்வேஜ் பிரஸ் என்னும் பதிப்பகம் வெளியிட்டது. காங்கிரஸ் மூலம் கட்சி 'ஓரடி முன்னால் (முன்னேற்றம்) சென்றது என்றும்; அடுத்து மென்ஷ்விக்குகளின் "ஒழுங்கமைப்பில் தாராளவாத" மற்றும் "வாய்ப்பியல்வாத" போக்கின் காரணமாக "ஈரடி பின்னால்" (பின்னடைவு) சென்றது என்றும் லெனின் வாதிடுகிறார். லெனின் இந்த நூலின் முகவுரையில் கட்சியை எதிர்நோக்கியுள்ள மிக அவசரமான அரசியல் சிக்கல்கள் இவையே என்று தொடங்கி பின்வருமாறு எழுதுகிறார்.

"முதலாவது சிக்கல்" இரண்டாவது கட்சிக் காங்கிரசில் உருவெடுத்த "பெரும்பான்மை", "சிறுபான்மை" என்று நமது கட்சியில் ஏற்பட்ட பிளவின் அரசியல் முக்கியத்துவத்தைப் பற்றியதாகும். ரசிய சமூக – ஜனநாயகவாதிகளுக்கிடையிலான முந்தைய பிளவுகள் அனைத்தையும் இது மிகவும் பின்னுக்குத் தள்ளியது."

இரண்டாவது சிக்கல், கட்சி ஒழுங்கமைப்புச் சிக்கல்களில், புதிய இஸ்க்ராவின் நிலை உண்மையிலேயே கொள்கை அடிப்படையிலானதா என்ற அளவில் கொள்கைரீதியில் அதன் முக்கியத்துவத்தைப் பற்றியது...

முதலாவது சிக்கலுக்கு விடை, கட்சிக் காங்கிரசில் நடைபெற்ற போராட்டத்தைப் பகுத்தாய்வதன் மூலம் பெறப்படுகிறது; இரண்டாவது சிக்கலுக்கு விடை, புதிய இஸ்ராவின் கொள்கைகளில் புதியன எவையோ அவற்றைப் பகுத்தாய்வதன் மூலம் பெறப்படுகிறது. இதற்கு லெனின், காங்கிரசுக்குப் பின்னர் புதிய இஸ்க்ரா பிரிவினர் நடத்திய போராட்ட வழிமுறைகளை ஆராய்கிறார். "இவ்விரண்டு ஆய்வுகளும் இந்த வெளியீட்டில் பத்தில் ஒன்பது பங்கு இடம் பெறுகின்றன. நமது கட்சியில் 'பெரும்பான்மை' தான் புரட்சிகரமானது, 'சிறுபான்மை' சந்தர்ப்பவாதப் பிரிவு என்ற முடிவுக்கு இவை இட்டுச் செல்கின்றன." லெனின் இந்தச் சிக்கல்களைத் தீர்மானமாக எடுத்து வைக்கிறார். இவற்றில் முதலாவது கேள்வியை சுருக்கமாகப் பார்க்கலாம்.

"காங்கிரசில் மார்த்தவினால் வரையறுக்கப்பட்டு, காங்கிரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பத்தி 1: ரசிய சமூக – ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் உறுப்பினர் அதன் வேலைத்திட்டத்தை ஏற்றுக்கொண்டவரும், கட்சிக்கு நிதி கொடுத்து ஆதரிப்பவரும், கட்சி ஒன்றின் நெறியாண்மையின் கீழ் தம்முடைய முறையான நேரடிச் சேவையினை வழங்குபவரும் ஆவார்." (பக்:56)

லெனில் சொல்வது : "வேலைத் திட்டத்தை ஏற்றுக்கொண்டு, கட்சிக்கு நிதி உதவி அளிப்பவன் கட்சி அமைப்புகள் ஒன்றில் நேரடியாகப் பங்கேற்பார். அதாவது அவ்வப்போது, வந்து உடலை வாடகைக்குக் கொடுக்கமாட்டார்; கட்சியில் இணைந்து பாட்டாளி வர்க்க உணர்வோடு எப்போதும் பணியாற்றுவார்கள்."

லெனின் குறிப்பிடும் இந்த "நேரடிப் பணியை" காங்கிரஸ் ஏற்றுக்கொண்டது. மேலும், "ஒவ்வொரு வேலைநிறுத்தக்காரரும், ஒவ்வோர் ஆர்ப்பாட்டக்காரரும் தமது நடவடிக்கைகளுக்குப் பொறுப்பேற்றுக் கொண்டு, தம்மைத் தாமே ஒரு கட்சி உறுப்பினர் என்று அறிவிக்க முடியுமானால், நாம் நிச்சயமாக மகிழ்ச்சியடைய முடியும்" என்னும் மார்த்தவின் விருப்பத்தைச் சுட்டிக்காட்டி, சமூக – ஜனநாயக இயக்கத்தை வெறும் வேலைநிறுத்தம் செய்யும் மட்டத்திற்கு இறக்கி விடுகிறார் (ப.80)" என்று லெனின் மார்த்தவின் விதியைக் கடுமையாக விமர்சனம் செய்கிறார்.

'விதிகளின் பத்தி ஒன்று' என்னும் தலைப்பிலான 9ஆம் இயலில் சிறிய வேறுபாடு என்பதும் கூட கவனிக்கப்பட வேண்டும்; தவறினால் அது பெரிய விபரீதத்தில்தான் முடியும் என்கிறார் லெனின்.

"ஒவ்வொரு சிறிய வேறுபாடும், அது வலியுறுத்தப்பட்டால், அது எப்போதும் முன்னணியில் நிறுத்தப் பெற்றால், அந்த வேறுபாட்டின் வேர்களையும் கிளைகளையும் மக்கள் தேடத் தொடங்குவார்களானால், பெரியதாக மாறிவிடும். திட்டமான தவறான கண்ணோட்டங்களை நோக்கி ஊசலாடுவதற்குத் தொடக்க நிலையாகப் பயன்படுமானால், இந்தத் தவறான கருத்துகள் மேற்கொண்டு எழும் புதிய பேதங்கள் காரணமாக, கட்சியை ஒரு பிளவிற்குக் கொண்டுவந்து நிறுத்தும்; அதிகார மறுப்புவாத நடவடிக்கைகளோடு இணைக்கப்படுமானால், ஒவ்வொரு சிறிய வேறுபாடும் மாபெரும் முதன்மை பெற முடியும் (பக்.72.73)" என்று கூர்ந்தாய்ந்து எச்சரிக்கிறார்.

ஒரு தொழிலாளர் கட்சியின் ஒற்றுமை எந்த அடிப்படைகளைக் கொண்டிருக்க வேண்டும். எந்தச் சிக்கல்களில் விட்டுக்கொடுக்கவே கூடாது என்று எடுத்துரைக்கிறார் லெனின்.

இன்றைய சூழலிலும் எந்த ஒரு கட்சியோ இயக்கமோ நிலைத்து நின்று செயல்பட வேண்டுமானாலும், அந்தக் கட்சி அல்லது இயக்கம் லெனின் வகுத்துக் கொடுத்துள்ள இந்த இயங்கியல் கோட்பாட்டை லெனின் தேர்வு நூல்களில் ஒன்றான "ஓரடி முன்னால், ஈரடி பின்னால்" என்னும் நூலிலிருந்து கற்று, கறாராகப் பின்பற்றுவது அவசியம்!

●

கட்டுரையாளர்: மொழிபெயர்ப்பாளர்

Article



Beyond the Rubble:
Memory, Healing, and the Psychological Landscape of Survival in Escape from Aleppo

N.NAVEENA
Dr.S.SAIRA BANU

The Novel Escape from Aleppo penned by N.H. Senzai offers valuable insight into how the novel represents the psychological and emotional consequences of war and displacement. Set against the backdrop of the Syrian civil war, the narrative follows a young protagonist whose journey reflects both individual suffering and the broader realities of forced migration. Through a post-traumatic lens, the novel illustrates the profound disruption of home, identity, and security caused by conflict. It portrays trauma not simply as a response to a single violent event but as an ongoing condition marked by fear, uncertainty, loss, and emotional fragmentation. The narrative's depiction of repeated encounters with violence, separation, and displacement echoes trauma theory's emphasis on the intrusive and recurring nature of traumatic memory (Balaev, 2014; Durrant, 2020). By presenting these experiences through the perspective of a young refugee, the novel effectively conveys the lasting psychological impact of war and exile.

Equally significant is the novel's portrayal of the strategies individuals employ to endure and overcome traumatic circumstances. The protagonist's determination to survive is reflected through actions such as seeking safety, relying on family and community support, maintaining emotional control, and making practical decisions in moments of crisis. These responses correspond to coping mechanisms identified in trauma studies as essential for adapting to stressful and life-threatening situations (Chung et al., 2003). The theme of escape, which drives the narrative, functions on both physical and psychological levels. While it represents a desperate attempt to flee danger, it also symbolizes the struggle to cope with traumatic experiences and move toward recovery. Through this dual representation, the novel highlights the resilience of displaced individuals and underscores the possibility of healing, identity reconstruction, and hope despite the enduring effects of trauma.

The traumatic experiences portrayed in Escape from Aleppo are closely connected to the historical reality of the Syrian refugee crisis, which began in 2011 and became one of the most devastating humanitarian catastrophes of the twenty-first century. Within this context, N.H. Senzai presents a narrative that humanizes the larger crisis through the story of Nadia, a fourteen-year-old Syrian girl compelled to flee her home in Aleppo. Set during the peak of the conflict in October 2013, the novel follows Nadia's dangerous journey while exploring the psychological effects of war, displacement, and

uncertainty. Through Nadia's narration, the novel converts large-scale political turmoil into a deeply personal story of suffering, loss, and survival, highlighting the profound impact of armed conflict on ordinary civilians, especially children.

The family's decision to leave their home after a devastating bomb explosion demonstrates the persistent threat of violence that defines traumatic existence in a war zone. The destruction of nearby buildings and the constant fear of death force them to abandon the safety and familiarity of home in search of refuge. The absence of the male members of the family, who are connected to the Syrian secret police, further increases their vulnerability and underscores the precarious situation of civilians trapped within political conflict. Although Nadia does not fully understand the complexities of the war, she is deeply conscious of the fear and uncertainty surrounding her. Her unanswered questions, confusion, and reliance on older family members reflect the emotional and psychological instability often experienced by displaced children during times of crisis.

A particularly significant traumatic episode occurs when an unexpected bomb explosion separates Nadia from her family. Trapped beneath the wreckage of a damaged vehicle, she experiences both physical suffering and emotional abandonment. Yet, despite her injuries and isolation, Nadia's determination to continue her journey reveals the resilience that characterizes her throughout the novel. Instead of depicting trauma solely as a source of helplessness, Senzai highlights the human capacity to endure and adapt under extreme circumstances. Nadia's journey therefore becomes a powerful representation of survival, demonstrating how hope can endure even in situations marked by destruction and despair.

From a narratological perspective, Senzai's use of a first-person narrative voice is central to the emotional impact of the novel. As Gérard Genette argues, narrative is shaped by the organization and presentation of events rather than merely recounting them. By allowing Nadia to tell her own story, Senzai creates a strong sense of immediacy and emotional closeness, giving readers direct access to her thoughts, fears, and memories. This internal focalization enhances the portrayal of trauma by presenting historical events through the subjective perspective of a child, thereby emphasizing the personal consequences of war and displacement.

Another important narrative technique is the novel's non-linear structure, which blends Nadia's present experiences with memories of her life before the war. The recurring flashbacks to her peaceful childhood stand in sharp contrast to her current reality as a refugee. These memories serve not only as expressions of longing and nostalgia but also as indicators of traumatic memory, revealing how the past repeatedly intrudes upon the present. Genette's concept of temporal disruption can be observed in these shifts between past and present, while Seymour Chatman's discussion of non-linear narratives helps explain how such structures reflect the fragmented nature of human experience. The disrupted narrative mirrors Nadia's fractured identity and sense of belonging, while also symbolizing the broader fragmentation of Syrian society caused by prolonged conflict.

Despite the fragmentation and suffering depicted throughout the novel, Senzai consistently foregrounds resilience and the possibility of healing. Moments of hope emerge even in the darkest circumstances, particularly when Nadia discovers a message directing her toward the Turkish border and informing her that her father may be waiting for her. The message states: "Go... the Turkish border is not far. Your father is waiting for you at the Onkupinar border crossing" (Senzai, 91). Symbolically, this message represents more than simple guidance; it signifies the restoration of hope, connection, and purpose amid traumatic circumstances. It reassures Nadia that she is not alone and strengthens her determination to continue. In this way, the novel suggests that survival depends not only on physical endurance but also on the sustaining power of memory, human relationships, and hope, which enable individuals to rebuild their lives despite profound loss and displacement

Resilience and decision-making play a crucial role in shaping the narrative of Escape from Aleppo, offering a counterpoint to dominant representations of refugees as passive victims. Throughout the novel, Nadia's agency is consistently highlighted through her ability to respond to challenging circumstances and make difficult choices despite overwhelming

obstacles. She repeatedly demonstrates the determination to continue her journey. Her unwavering resolve is reflected in her declaration, “I have to find my father!” (Senzai, 105)which serves as a powerful expression of hope and purpose amid the chaos of war.

As Nadia continues her journey through the war-ravaged landscape, she encounters new relationships that shape her emotional and psychological growth. While seeking refuge from armed soldiers in an abandoned mosque, Nadia and the elderly man are joined by two young refugee boys. Their shared experiences of displacement create a temporary sense of community amid the uncertainty of migration. Together, they navigate numerous checkpoints and dangers, relying on mutual support to survive. However, as the journey progresses, only Nadia and one of the boys remain together. Gradually, Nadia develops a deep sense of responsibility toward the child, treating him as a younger brother and refusing to abandon him until she is reunited with her father. This evolving bond demonstrates how experiences of displacement often foster alternative forms of kinship and solidarity among refugees. Nadia’s attachment to both the elderly man and the young boy illustrates the human capacity to form meaningful relationships even in conditions of extreme instability and loss.

Nadia’s actions can be understood through Judith Butler’s concept of agency, which emphasizes the ability to make choices within restrictive and oppressive circumstances. Rather than portraying agency as complete freedom, Butler argues that it emerges through decision-making in situations shaped by limitations and vulnerability. Nadia’s willingness to trust an unfamiliar elderly man and her determination to protect the young boy reflect her capacity to exercise moral judgment despite the overwhelming challenges she faces. These decisions reveal not only her resilience but also her growing sense of responsibility toward others. In this way, the novel presents agency as a form of survival that enables individuals to navigate traumatic circumstances while preserving their humanity.

The novel concludes with Nadia’s long-awaited reunion with her father, a moment that symbolizes hope, recovery, and the restoration of familial bonds. The emotional significance of this reunion is captured in the scene where “Nadia noticed the man's bald head and grabbed Basel's hand... She put on a voluminous olive green coat to match the hat on his head” (Senzai 319). This reunion represents more than the end of a physical journey; it signifies the possibility of healing after prolonged experiences of fear, separation, and uncertainty. While the scars of displacement remain, the ending suggests that hope and human connection can provide the foundation for rebuilding life after trauma.

A post-traumatic reading of Escape from Aleppo reveals the novel’s nuanced portrayal of war, displacement, and survival through the perspective of a young refugee.

References:

- Senzai,N.H. Escape From Aleppo. Simon and Schuster, 2018.
- Caruth,Cathy. Unclaimed Experience: Trauma, Narrative, and History. Johns Hopkkins University Press, 1996.
- Chatman,Seymour. Story and Discourse: Narrative Structure in Fiction and Film. Cornell University press, 1978.
- Genette, Gerard. Narrative Discourse: An Essay in Method. Translated by Jane E.Lewin Cornell University press, 1980.
- Balaev, Michelle, ed. Contemporary Approaches in Literary Trauma Theory. Palgrave Macmillan UK, 2014
- Durrant, S and Topper, R (2020) Cosmological Trauma and Postcolonial Modernity. In: Davis, C and Meretoja, H, (eds.) The Routledge Companion to Literature and Trauma.
- Routledge, London, UK, pp. 187-200. ISBN: 9781138494923
- Chung M. C., Farmer S., Werrett J., Easthope Y., & Chung C. (2001). Traumatic stress and ways of coping of community residents exposed to a train disaster. Australian and New Zealand Journal of Psychiatry, 35, 528–534.

●

N.NAVEENA

Research Scholar, PG and Research Department of English, Fatima College (Autonomous), Affiliated to Madurai Kamaraj University, Madurai.

Dr.S.SAIRA BANU

Associate Professor, PG and Research Department of English, Fatima College (Autonomous), Affiliated to Madurai Kamaraj University, Madurai.

PLATINUM JUBILEE

விளம்பரக் கட்டணம்

பக்கம்	விளம்பரக் கட்டணம்	அளவு
பின்அட்டை (கலர்)	Rs.75,000/-	18X24
முன்அட்டை உட்புறம் (கலர்)	Rs.50,000/-	18X24
பின்அட்டை உட்புறம் (கலர்)	Rs.50,000/-	18X24
உள் பக்கம் (கலர்) பக்கம் ஒன்றிற்கு	Rs.30,000/-	18X24
உள் பக்கம் (கலர்) அரைப் பக்கம்	Rs.15,000/-	12X18
1/4 பக்கம் (கலர்)	Rs.10,000/-	9X12
உள் பக்கம் (கறுப்பு வெள்ளை) பக்கம் ஒன்றிற்கு	Rs.20,000/-	18X24
உள் பக்கம் (கறுப்பு வெள்ளை) அரைப் பக்கம்	Rs.10,000/-	12X18
1/4 பக்கம் (கறுப்பு வெள்ளை)	Rs.5,000/-	9X12

+GST 5%

மலர் அளவு
1/4 டெம்மி

விளம்பரம் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : 15-08-2026

விளம்பரத்திற்கான கட்டணத்தைக் காசோலையாக அனுப்பலாம்;
அல்லது கீழ்கண்ட வங்கிக் கணக்கில் செலுத்தலாம்

New century Book House (P) Ltd.,
Central Bank of India, Ambattur
A/c No. 1035208898,
IFSC : CBIN0282161.

Published by Shanmugam Saravanan on behalf of New Century Reader's Sangam
at 16 (142), Jani Jhan Khan Road, Royapettah, Chennai - 600 014 and Printed by A.Sivakumar at Pavai Printers (P) Ltd.,
16 (142), Jani Jhan Khan Road, Royapettah, Chennai - 600 014. Editor: T.Stalin Gunasekaran

Posted at Egmore RMS, Pathirika Channel, Chennai - 08.
New Centurian Ungal Noolagam (Tamil English - Bilingual Monthly)
Registered with RNI No :TNBIL/2009/28728.
Postal Reg. No. TN/CH(C)/601/2025-2027. WPP No: TN/PMG(CCR)WPP-673/2025-2027
Date of publication: 1 Week of every month,Posted b/w 1-7 every month
If undelivered, please return to: New Centurian Ungal Noolagam, 16 (142), Jani Jhan khan road, Royapettah, Chennai - 14.

தமிழ் வளர்ச்சித் துறை • நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்

அண்ணல் அம்பேத்கர் ஆக்கங்கள்

மக்கள் பதிப்பு 100 தொகுதிகள்

தமிழ்நாடு அரசு நிதி உதவியின் கீழ்
1 தொகுதி சுமார் 300 பக்கங்கள் விலை ரூ 100

முதல் செட்
1 முதல் 7 வரை,
10 முதல் 12 வரை
₹1000
10 தொகுதிகள்

இரண்டாவது செட்
8 & 9, 13 முதல் 19 வரை
₹900
9 தொகுதிகள்
20 முதல் 27 வரை
₹800
8 தொகுதிகள்

மூன்றாவது செட்
28 முதல் 36 வரை
₹900
9 தொகுதிகள்
37 முதல் 48 வரை
₹1200
12 தொகுதிகள்

நான்காவது செட்
28 முதல்
48 வரை
₹2100
21 தொகுதிகள்

14000 பக்கங்கள்
ரூ 4800/–
48 தொகுதிகளும் சேர்த்து

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.
☎ 044 - 26251968, 26258410, | www.ncbhpublisher.in | email: info@ncbh.in

நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் அனைத்து கிளைகளிலும்
மற்றும் புத்தகக் கண்காட்சி அரங்குகளிலும் கிடைக்கும்.